உ

சிவமயம்.

பூலோக நண்பன்.

இது

சென்னை வேப்பேரி

குஹாஸ் மெடிகல் ஹாலின்

தலைவர்

ப. சுப்பிரமணிய முதலியாரால்

இயற்றப்பட்டு

தமது

ஞானசம்பந்தா அச்சியந்திரசாலையிற்

பதிப்பித்து

பிரசுரிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர்ட் காபிரைட்.

இதன் விலை] 1916 [அணா 12

முகவுரை.

பூவுலகில் ஒவ்வொருவருக்கும் பல நண்பர்களிருக்க "பூலோக நண்ப" னென்றொரு நேசன் தோன்றுவ தெதற் கெனப் பலரும் கேட்கலாம்.

நேசிக்கும் ஸ்திரீ புருடர்களிற் பெரும்பாலோர் தன் சுகத்தைக் கோரியே காலதேச வர்த்தமானங்கட்குத் தக்க படி சமயோசிதமாகப் பிறரை வஞ்சிக்கும் வேடதாரிகள் நண்பர்களா யிருந்து தன் தோழர்களைப் பல ஆபத்துகளுக் குட்படுத்தியும், புறம்பே பழித்தும், இழிசொல் கூறியும், அவர்களின் செல்வம், பெருமை, சுகம் முதலியவைகளைக் கண்டு பொறாமையெனும் நோயால் வருந்தி அவைகளைக் கைக்கொள்ளவோ! தோழர்களைச் சுகத்தினின்றும் நீக் கவோ! துற்குணங்களைச் சற்குணமாகப் போதிக்கும் இயல்புடையோர் உலகில் மிகுந்துவிட்டதால், அத்தகைய தீக்குணத்தோர்களின் நடை, உடை, பாவனைகளை எடுத் துக்கூறி உத்தமர்களை பொய்வேடம்பூண்ட உலகநேசப் பேய்களின் தொந்தரவினின்று நீக்குதற்காகவே நல்ல அறி வைப் போதிக்கும் புத்தகரூபமான "பூலோக நண்பன்" தோன்றுவது அவசியமென்போம்.

உலக வின்பத்திற்கு வேண்டிய நூல்களைக் கற்றுங் கேட்டும் வாழ்வதால்வரும் பல குணக்கேடுகளை அகற்றி இதயமொடுங்குதற்கும், அகந்தை மாறுதற்கும், அபிமா னம் யாதினும் உண்டாகாம லிருப்பதற்கும், ஈகையொடு இரக்கம் உண்டாவதற்கும், தவவிரதஞ் செய்வதற்கும், மெய்மொழி புகன்றிடற்குங் காரணமாய் "பூலோகநண்ப" னிருப்பானென்று நம்புகின்றோம்.

இப்படிக்கு

ப. சு. மு.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பூலோக நண்பன்.

காப்பு.

பூலோக நண்பனெனும் புத்தமிர்தம் போன்றவிது
தாலோக மாகத் தரித்திடவே—பாலோக
நன்பதமுக் கட்களிறு தன்றுதிக்கை நாட்டியுயிர்க்
கின்புசெயு நண்பத னாலே.

தமிழ்மொழிப் பெருமை.

உலகத்திலே அரபி, பாரசீகம், உருடு, இந்துஸ்தானி, தென்மார்க், ஈபுறு, ருஷியம், பிரஞ்சு, டச்சு, இங்கிலீஷ் முதலிய பாஷைகள் காலந்தோறும் வெளிப்பட்டு வந்தன. நமது புண்ணிய பூமியாகிய பரதகண்டத்திலே சிங்களம், சோனகம், சாவகம், சீனம், துளுவம், குடகம், கொங்கணம், கன்னடம், கொல்லம், தெலுங்கம், கலிங்கம், வங்கம், அங்கம், மகதம், கடாரம், கௌடம், குசலம் என்னும் பதினேழு பாஷைகளும் உள்ளன. இவைகளெல்லாம் ஒவ்வோர் காலத்திலே ஆங்காங்குள்ள மன்பதைகளான் ஏற்படுத்தப்பட்டு காலந்தோறும் விளக்கியும், கூட்டியும், புதுக்கியும் செய்யப்பட்டு வருகின்றன.

"என்றுமுள தென்றமி ழியம்பி யிசைகொண்டான்" என்றார் இராமாயணத்தாரும். தமிழ் மொழியானது மேற்கூறப்பட்ட பாஷைகள்போலின்றி உலகந்தோன்றுங்காலத்திற்றானே யுடன்றோன்றியுள்ளது. அநாதியே, முழுமுதற்பொருளாகிய சிவபெருமானாலே அருளிச்செய்யப்பட்டது.

அதனாலே சம்ஸ்கிருதமும் தமிழும் ஒரு பரம்பொருளிடத்தினின்றும் தோன்றலாற் சகோதரபாஷை யெனப்படும். அவற்றுள் சம்ஸ்கிருதம் ஆண்குழந்தை போலவும், தமிழ்மொழி பெண்மடந்தைபோலவுங் கொள்ளப்படும். அவையிரண்டும் மற்றைய பாஷைகளுக்கு எல்லாம் மூலபாஷையாகலின் தந்தைதாய் எனவுங்கூறுப. இதனாலே சம்ஸ்கிருதத்தினின்றும் தமிழ்மொழி பிறந்ததென்று சிலரறியாமையுடையார் கூறுவது பொருந்தாதென்க.

வேதம்நான்கும் விரிதமிழ்க்கும் முள.

சம்ஸ்கிருதத்திலே வேதம், உபவேதம், புராணம், மிருதி, மீமாஞ்சை முதலிய சாத்திரங்கள் இருப்பதுபோல, தமிழிலும் அவைகள் இருக்கின்றன. சம்ஸ்கிருதத்திலே இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்கள் சிவபெருமானது நான்கு திருமுகங்களினின்றும் தோன்றி யிருத்தல்போலத் தமிழிலும் தேவாரம் ஆகிய முதலாந் திருமுறை, இரண்டாந் திருமுறை, மூன்றாந்திருமுறைகளும், திருவாசகமும் ஆகிய நான்கும் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்திநாயனார், மாணிக்கவாசக சுவாமிகள் என்னும் பரமாசாரியர் நால்வர் முகத்தினின்றுஞ் சிவபெருமானால் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

உபவேதங்களும் ஒண்டமிழ்க்கும் முள.

சம்ஸ்கிருதத்திலே காந்தருவவேதம், அர்த்தவேதம், தனுர்வேதம், ஆயுர்வேதம் என்பன இருத்தல்போலத் தமிழினும் பொய்கையாள்வார், பூதத்தாள்வார், பேயாள்வார், நம்மாள்வார் முதலாயினோராற் சொல்லப்பட்ட பிரபந்தங்கள் விளங்குகின்றன. இனி நல்லிசைப்புலவர் பலராற்சொல்லப்பட்ட நாலடி நானூறே உபவேதமெனவுங் கூறலாம். அக்கருத்தாற்றான் அதற்கு நாலடியார் எனவும், வேளாண் வேதம் எனவும் பெயர் வழங்கப்பட்டது.

உபநிடதங்களு முள்ளவா றுரைப்பாம்.

சம்ஸ்கிருதத்திலே நூற்றெட்டு உபநிடதங்கள் இருத்தல்போலப் பொய்யாமொழி, மாதாநுபங்கி முதலாந் திருநாமங்களையுடைய திருவள்ளுவநாயனாராற் றிருவாய் மலர்ந்தருளப்பட்ட 103-அதிகாரங்களையுடைய முப்பால், பொய்யாமொழி எழுதுமறை முதலிய விசேட நாமங்களையுடைய திருக்குறளே தமிழுபநிடதங்களெனப்படும். இவ்வாறுய் பெருவளமுள்ள நந்திந்தமிழ் சம்ஸ்கிருதத்திற்குச் சிறிதுங் கீழாவதின்று. உண்மையிற் கூறுங்கால் சம்ஸ்கிருதத்தினின்று முயர்ந்ததென்பது பின் வரும் நியாயங்களாற் காணலாம்.

சங்கரன் றமிழிசைப் பிரியன்.

அநாதி மலமுத்த பதியாகிய சிவபெருமான் வடமொழி வேதங்களிருப்பவும் அவற்றை யத்துணைவிரும்பாது தென்மொழியாகிய செந்தமிழிசை கேட்டற்கன்றோ தெற்கின் கண் திருத்தலங்கடோறும் நிற்கின்றார். கூத்தாடுகின்றார். இரத்தினசபை, பொற்சபை, வெள்ளிச்சபை, தாமிரசபை, சித்திரசபை என்னும் ஐந்து சபைகளினும் உயர்வுடைத்தாய திருவாலங்காட்டினுள்ள இரத்தினசபையை விடுத்து அதற்குத் தெற்கே பொற்சபைக்கும், அப் பொற்சபையினின்றும் அதற்குத் தெற்கே மதுரைக்கணுள்ள வெள்ளிச்சபைக்கும், அதற்குத் தென்றிசைக்கணுள்ள திருநெல்வேலித் தாமிரசபைக்கும், அதற்குத் தெற்கேயுள்ள திருக்குற்றாலத்துச் சித்திரசபைக்கும் புகுந்து புகுந்து ஆடிநிற்பது எதற்கு? தண்டமிழிசையைக் கேட்டுக் களித்தற் கல்லவோ? சங்கரன் சங்கத்திலிருந்து வளர்க்கப்பட்ட குழவி மொழியெது? தமிழன்றோ? முருகவேளும் புலவனாக வந்து ஆராய்ந்து உரைபுலப்படுத்தற்கேதுயாது? தமிழே. சிவபெருமான் தம்முடைய பெயரை நாட்டி யிறையனார் அகப்பொருள் எனச்செய்த பெரும்பேறு உடையது யாது? செந்தமிழே. சிவபெருமான் றமது திருக்கரத்தா லெழு

தப்பட்ட நூலுடையதும் திருமுகங்கள் உடையதும் யாது? வண்டமிழ் மொழியே. தேவார திருவாசகங்களாற் பற்பல அரிய திவ்வியாற்புதங்களை விளைத்தது யாது? அமிழ்த மன்ன தமிழ் மொழியே. இத்துணைச் சிறப்புக்கள் மற்றை எப்பாஷைகளுக்கு மில்லையாகும்.

சீதர மூர்த்தியும் செந்தமிழ் விருப்பன்.

"சிவாய விஷ்ணு ரூபாய சிவரூபாய விஷ்ணவே" என்று ஸ்கந்தோபநிடதஞ் சொன்னபடி, சிவத்தியான மே லீட்டாலே சிவரூபமென்று சொல்லத்தக்கவரும், எமது காத்தற்கடவுளும், சிவாலயங்களிலே பஞ்சாவரண தேவதைகளுள் ஒருவராக வைத்துப் பூசிக்கப்படுவோரும், சிவ பரிக்கிரக சத்தியாக விளங்குவோரும் ஆகிய ஸ்ரீமந்நாராயணக் கடவுளும் ஆரிய வேதத்தினும் பார்க்கத் தமிழிலேயே அதி விருப்பமுடையவர். அதனைப் பின்வரும் சரித்திரத்தாற் றெரியலாம்.

காஞ்சிநகரத்துள்ள எட்டு விஷ்ணு ஸ்தலங்களுள் ஒன்றாய திருவெஃகாவில் வழிபட்டிருந்த திருமழிசையாள்வார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் நம் மாதவப்பெருமாள் திருக்கோயிலிலே தமக்குப் பணிவிடை செய்திருந்த ஓர் கிழத்தாசியின்மீது அன்புவைத்து அவளது மூப்புப்பருவங் கழியும்படி பாடினார். அதனால் அவள் மிக்க இளமைவாய்ந்த தேவமகளிர்போல விளங்கினாள். அவளைப் பல்லவராசன் கண்டு மோகித்துக் கூடியிருந்தான். அவள் சேர்க்கையினாலே காளையாக இருந்த அரசனுக்கு கிழத்தன்மை நாளுக்குநாட் சேர்ந்து முதியனானான். அதனாலே யரசன் வருந்தி, தாசியைநோக்கி, தெரிவையே! நின் சேர்க்கையால் எனக்குக் கிழத்தன்மை சேர்ந்தது. ஆதலால் நீ கிழவியா யிருத்தல்வேண்டும். அல்லதேல் எனக்கு அருவருக்கத்தக்க இம்மூப்புப் பருவம் வாராது. உனக்கு இளமைவந்தவாறு எவ்வாறு என்று கேட்டான். அவள் வந்த வரலாற்றையொன்றும் விடாது உரைத்தாள். உடனே அரசனும்

கணிகண்ணர் என்னும் ஆள்வார்சீடரை யழைத்து! ஐய னே? திருமழிசை யாள்வாரைப்பணிய என்மனம் அவாவு கின்றது. அவரை யழைத்து வருதிர் என்றான். கணிகண் ணர் நீ யரசனாயிருந்தாலும் ஆள்வார் வரமாட்டார் என்று கூறினர். அரசன் மனவருத்தமுற்று அவர் என்னிடம் வாரா விட்டாலும் எனக்கு இளமையுண்டாக ஒருபா ஆள்வா ரைக்கொண்டு பாடுவிப்பீராக என்று வேண்டினன். கணி கண்ணர் வேந்தனே! ஆள்வார் நரஸ்துதி சொல்லமாட்டார் என்றார். வேந்தன்சீறி ஞ்துணையில்லை. அதுகேட்ட அரசன் மிக்க கோபங்கொண்டான். கொண்டவன் றன் உறையை நோக்கினன். உறைக்கண் வாளில்லாமைகண்டு, கணிகண் ணரைநோக்கி, மாயப்பாகவதர்காள்? நும்மையும் நும் மாள்வாரையும் ஒருபொருளா மதிக்கேன். நும்மாள்வாரே யென்னைக்கெடுத்தனர். கிழவேசியைப் பாடின வாய் செம் பிர மன்னனைப்பாட வராதோ? வேசிக்கிழவிக்கு இளமை கொடுக்கப் பாடினது நரத் துதி யாகாதோ? எனக்குப் பாடுவது தான் மானுடத்துதியாமா! அப்பொழுது மகள் விருத்தையை யிளமையாக்கி, ஆள்வார் மயக்கிவிட்டபடியா லன்றோ நானும் மயங்கியிக்கழிமூப்பு அடைந்தேன், என க்கு இம்மூப்பு வந்தது நும்மாள்வராலேயே அவரும் நீயும் எரிவாய் நரகமாகிய மகா ரௌரவாதியவாற்றில் ஆழ்வீராக. இத்தகைய மாயத்தன்மையுள்ள பாஷண்டர் நீங்கள் எனது நகரம்விட்டு ஓடுதிர். அடுத்தகண மிருப்பீரேல் என் சக் கரஞ் சேதிக்கும் என்று உருமேறுபோல் உரைத்தான். நிருபனே போதிரேன்னில் நிறுத்துவர் யாவர்மன்னே! என் றபடி, அரசன் அங்ஙனம் மிக்க கோபமுடையனனது கண்டு, கணிகண்ணர் என்செய்வார். அவ்விடத்தினின்றும் போந்து திருமழிசை யாள்வாரிடம் முறையிட்டார். நான் போகின்றேன் தேவரீர் சித்தமென்று புறப்பட்டார். ஆள் வார் மனவருந்த முற்றுச் சொன்ன வண்ணப்பெருமாள் சந்நிதியிற்சென்று, வைகுண்டவாசா! மதுசூதனா! பஞ்சா யுதமூர்த்தி! தேவரீர் திருச்சந்நிதியிற் பணிபுரிந்த அடி

யேனை யகலப்போமாறு அரசன் சொற்றனன். கணிகண்ணன் போகின்முன். அவன் பின்னர் எளியேனும் செல்கின்றேன். என் பின்னர்த் தேவரீரும் திருவுளமிருப்பின் வரலாம் என்னுங் கருத்துடைய,

கணிகண்ணன் போகின்முன் காமருபூங் கச்சி
மணிவண்ணு நீ யிங்கிராதே—துணிவுடனே
செந்நாப் புலவனியான் செல்கின்றே னீயுமுன்
பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்.

என்று தோத்திரித்து விண்ணப்பம் பண்ணிச் செல்லவே, அடியார்க்கு எளியராகிய கோவிந்த மூர்த்தியும் கேட்டு, செந்தமிழிசைத் தெள்ளமிர்தைத் தெளித்து வார்க்கும் வண்டமிழ்ப்புலவன் இவ்விடத்தை விட்டுப்போக, யாம் இங்கு ஒரு கணமும் இருத்தல் கூடாது. என்று தமது படுக்கையாய சர்ப்பசயனத்தைச் சுருட்டித் தோளில்வைத்துக்கொண்டு கருக்குழற் பிறைநுதல் சேல்விழிச் சிறடித் தளவநகைக் கமலமுகத் திருமகளாஞ் செல்வியைக்கடைக் கண்ணேக்க, அன்னையாகிய நந்திருவாளும் தன் கொழுநனது ஒரு திருக்கரம் பற்றியுடன்வர, அச்சுத மூர்த்தியும் விச்சையாளன் பின்னர்ச் சென்றனர். அதனை யறிந்த இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களும், ஹே முகுந்தா! வாசுதேவா! கொண்டல் மேனியாய்! காருத்தா! மலருந்தியாய்! நெடுநாள் காறுந் தேவரீரைத் துதித்து இருந்தேமன்ரே? இப்போது எம்மை விடுத்துச் செல்கின்றனையோ என்று கார்மேகம் இரைந்தாற் போல இரைந்திரைந்து கதறின.

" தலமுண்டு முதலுண்டு ; தமிழுண்டு சேவியுண்டு " என்ருங்கு " செந்தமிழ்ச்சுவை மறந்து நஞ்செவியுறங்கா " எனச் சீதரமூர்த்தியுஞ்சென்ருர். வடமொழி வேதத்தின் கூச்குரலையுளம் வைத்தாரல்லர். இங்ஙனம் ஆள்வாரும், தாமரைக்கண் ணுள்வாரும் வெளிப்பட்ட சிறப்பை, கந்தக் கடவுளின் திருவருள்பெற்று விளங்கிய நமது கவிச்சக்கிர

வர்த்தியாய ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அவர்களும் வர்ணித்துக் கூறியருளினர். அது வருமாறு :—

மணிகொண்ட நெடுநேமி வலயஞ் சுமந்தாற்று
மாசுணச் சூட்டு மோட்டு
மால்களிறு பிடர்வைத்த வளரொளி விமானத்து
வாலுளை மடங்க லங்கு
மணிகொண்ட பீடிகையி னம்பொன்முடி
முடிவைத்தெ மையனொடு வீற்றிருக்கு
மங்கயற் கண்ணமுதை மங்கையர்க் கரசியையெ
மம்மனையை யினிது காக்க
கணிகொண்ட தண்டுழாய்க் காடலைத் தோடுதேங்
கலுழிபாய்ந் தளறு செய்யக்
கழனிபடு நடவையிற் கமலத் தணங்கரசொர்
கையணை முகந்து செல்லப்
பணிகொண்ட துத்திப் படப்பாய்ச் சுருட்டுப்
பணைத்தோ ளெருத்தலைப்பப்
பழமறைகண் முறையிடப் பைந்தமிழ்ப் பின்சென்ற
பச்சைப் பசுங்கொண்டலே.

என்று மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழிற் கூறியுள்ளார்.

இவ்வாறு கணிகண்ணனும், மழிசைக்கண்ணனும், தாமரைக்கண்ணனும் வெளிப்பட அக்காஞ்சி நகரம் பொலிவிழந்து உற்பாத நிகழ்ந்ததாம். அரசனும் மற்றையோருந் திடுக்கிட்டுப்பயந்து, சென்ற ஆள்வாரை வணங்கித் தேவரீர் எழுந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தார் ஆள்வாரும்,

கணிகண்ணன் போக்கொழிந்தான் காமரு பூங்கச்சி
மணிவண்ணா நீயிங்கிருக்கத்—துணிவுடனே
செந்நாப் புலவனிதோ செலவொழிந்தே னீயுமுன்றன்
பைந்நாகப் பாய்படுத்துக் கொள்.

என்று தோத்தரித்துப் பிரார்த்திக்க, பெருமாளும் செந்தமிழ்ப் புலவராதலின் அவர் வேண்டுகோட்கு இரங்கி முன்னர் இருந்தவாறே சயனத்திருக்கோலமாக எழுந்தருளினர் என்று வைணவர் குருபரம்பரையில் எழுதி வைத்திருக்கின்றார்.

இவ்வாறு தமிழின்விருப்பம் எமது சங்கரனுக்கும் நாராயணமூர்த்திக்கும் மிகவுமுண்டென்பது தெள்ளிதின் உணரப்படும். இவற்றால் ஆத்திகர்களாகிய நாமெல்லாம் முதற்றெய்வமென்று கொண்டாடுஞ் சிவபெருமானுக்கும், நாராயணமூர்த்திக்கும் விருப்பமாக, இங்குள்ளார் அதனை விரும்பாது அந்நிய பாடையை விரும்புதலெங்ஙனே? எமது தமிழ்த்தெய்வம் யாவர் மதியாவிடினும் எத்துணை யிடையூறுகள்வரினும் அழியாதென்றும் மன்னியோங்கும் என்க.

தெய்வம் இகழேல் என்பதன் தெளிவு.

புற்றில்வாளரவுமஞ்சேன் பொய்யர்தமெய்யுமஞ்சேன்
கற்றைவார்சடையெம்மண்ணல் கண்ணுதல்பாதநண்ணி
மற்றுமோர்தெய்வந்தன்னை யுண்டெனநினைந்தெம்பெம்மாற்
கற்றிலாதவரைக்கண்டா லம்மநாமஞ்சுமாறே.

என்றருளிய சாவா மூவா மருந்தாம் "திருவருணைத் தமிழ்வேதச்" சிவஞானத் தெள்ளமிர்தைக் கடைப்பிடித் தொழுகுஞ் சுத்தாத்துவித வைதிகசைவ சித்தாந்த மெய்ந்நெறியாளர், நூல்களினும் உபந்நியாசங்களினும் பரபக்க மறுப்புக்கூறிச் சுபக்கம் நாட்டும் நியாயரீதிப்படி, பொய்வந்துழலும் புறச்சமயங்களையும், அச்சமயங்களாற் றலைமையாகக் கொள்ளப்பட்ட தெய்வங்களையும் மறுத்து, (வேதாகமம்) என்னும் உண்மைநூல் அளவைகளாற் சைவ சித்தாந்த அத்துவிதமே சன்மார்க்க நெறியென்றும், சிவபெருமான் ஒருவரே முழுமுதற் பொருளென்றும் உரைத்தக்கால் சமயபத்தி, சாத்திரபத்தி, தெய்வபத்தி சிறிதுமில்லாச் சில போலிமாக்கள், அவ்வுண்மை யறியாமையாலே, அங்ஙனமுரைப்பா ருரைப்பனவெல்லாம் தேவநிந்தனையாகுமென்றும், அவர்சாலக் கல்லாதவரென்றும் குறை கூறுகின்றார்.

சொற்றவே சொல்லுந் தத்தையம்பறவை. அதுபோல, அவருள்ளும் தத்துவ ஆராய்ச்சியிற் றலைப்படாதவரும், அவர் தாட்சிணியத்தை எதிர்பார்த் திருப்பவரும், ஆக இருப்பவரே பெரிதும் வருந்துகின்றார். வருந்துகின்ற அவர் தம் ஆக்ஷேபங்களைச் சபையிலே கேட்டுத் தாந்தெளிந்தாயினும், அல்லது அவர்க்குத் தெளிவித்தாயினும் போகின்றாரில்லை. மூலையினும் முடுக்கினும் தம்போன்றவர்களைச் சேர்த்து வைத்துக்கொண்டு "அரியுஞ் சிவனு மொண்ணு, அறியாதான் வாயில் மண்ணு" தெய்வமிகமேல், திருமாலுக்கடிமைசெய், என்று பெரியோர் வாக்கியங்கள் உள்ளன என்றும், அவற்றிற்கு மாறாக நாராயண மூர்த்தியைத் தூரியதெய்வமாகாரெனச் சிலர் கூறுவது தெய்வ நிந்தனையென்றும் சிலர் சொல்வதைக் கேட்டுச் சொல்லிக் காலந் தொலைப்பர். அன்றி யதன்பொருளை யுள்ளவாறு கேட்டுணரார், தாமும் உணர்த்தார்.

"எவவுஞ் செய்கலான் றான்றேரா னவ்வுயிர்
போஒ மளவு மோர் நோய்."

என்றார் உத்தர வேதத்தாரும். அங்ஙனமுள்ள அவர் தமக்கும், சார்ந்தவர்க்கு மன்றி இவ்வுலகிற்கும் ஓர் அருங் கேட்டை விளைக்கும் பெரு நோய் போன்றவரே. அவரை நல்வழித் திருப்புதல் யாவர்க்கு மரியதேயாம்.

இனி யவர் கூறியவாறு தேய்வமிகமேல் என்றதை யெடுத்து ஆராய்வாம். தெய்வம் சாதியொருமைப் பெயராகலின் எந்தத் தெய்வங்களையும் நிந்தித்தல் கூடாதென்பர். அவ்வாறாயின் மனுடரை நிந்திக்கலாமா? விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்னும் சேதனப் பொருள்களை நிந்திக்கலாமா? கல், மண், நீர், நெருப்பு முதலிய சடப்பொருள்களும் தேவ மூர்த்தங்களாகவும், விசேடப் பொருளாகவும் காணப்படலால் அவற்றையும் இகழ்தல் கூடாதன்றோ? அவ்வாறாகலின் ஔவைப் பிராட்டியார்

தெய்வமிகமேல் என்று கூறியது சரியாகாது "எவற்றையு மிகமேல்" என்றன்றோ கூறவேண்டுமென்று வரும். மற்றையவைகளைப் பார்க்கினும் விசேடித்த பொருள்களே தெய்வமாகலின் அவற்றை யிகழ்தல் கூடாது என்பதே கருத்தென்பராயின், நன்று! நன்று, அப்போது மற்றவைகளைத் தெய்வமல்ல வென்றமையின் அது தெய்வ தூஷணமாகாதோ? அத்தெய்வங்களுள்ளும் ஒன்றை யொன்று விசேடித்தன வெனப்பட்டு அவற்றுள்ளும் இறுதியில் ஒரு தெய்வம் விசேடித்து விளங்குமே. அங்ஙனங் கூறும்போது மற்றையவைகளைக் கீழ்ப்பட்ட தெய்வமெனலால் அதுவுந் தெய்வ இகழ்ச்சியாகுமே? எல்லாப் பொருளுந் தெய்வமெனில், தெய்வமிகமேல் என்று ஏன் கூறினர்.

சிவமாந் தெய்வத்தின்மேற் தெய்வம் வேறில்லை என்றார் பெரியோரும். உலகத்திலே எண்ணிறந்த தானங்களிருப்பினும் ஆசியாக் கண்டம் என்னும் இக் கண்டத்திற்றான் றெய்வம் என்னும் வழக்கு முதன் முதல் உண்டாயிற்று. ஆசியாவினும் இந்தியாவையடுத்த இப்பூமியிற்றான் இத்தத்துவ வுணர்ச்சி தலைப்பட்டது. இதனை யுணர்ந்தே ஏனைய இடங்களிலுள்ளாரும் கைப்பற்றிவந்தார். பின்னர்ப் பலபல தேசத்தாரும் தம் மனத்திற்கு எட்டியவற்றை உண்மைத் தெய்வமாக வைத்துக்கொண்டார்கள். பிராகிருத சாமானிய புத்திமான்களும், பிராகிருத விசேட புத்திமான்களும், கலைஞானசித்தியுடையாரும், தத்துவ ஞானசித்தியுடையாருமாகிய ஒவ்வோர் மதத்தாரும் தாங் கற்பித்த தெய்வத்தை யன்றி வேறு உண்மைத் தெய்வங் கிடையாதென்றே சாதிப்பர் அத்தெய்வங்களோ பலவகைப்படும்.

அன்னே யனேயெனுஞ் சிலசமய நின்னையே
ஐயா வையா வென்னவே
அலறிடுஞ் சிலசமய மல்லாது பேய்போல
வலறியே யொன்று மிலவாய்ப்
பின்னேது மறியாம லொன்றைவிட் டொன்றைப்
பிதற்றிடுஞ் சிலசமய மேற்

பேசரிய வொளியென்றும் வெளியென்று நாதாதி
 பிறவுமே நிலய மென்றுந்
தன்னே ரிலாததோ ரணுவென்று மூவிதத்
 தன்மையாங் கால மென்றுஞ்
சாற்றிடுஞ் சிலசமய மிவையாகி வேறதாய்ச்
 சதாஞான வாநந்த மாய்
என்னேயெ னேகருணை விளையாட் டிருந்தவா
 றெம்மனோர் புகல வெளிதோ
இகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி
 யெங்குநிறைகின்ற பொருளே.

எனச் சிவஞானப் பெருஞ்செல்வரான தாயுமான சுவாமிகளும் விளக்கியுள்ளார். ஒவ்வோர் மதத்தருங் கூறுந் தெய்வங்களை யுற்று நோக்கில் அவையெல்லாம் சடமுஞ் சித்துமாகிய பொருட் பிரபஞ்சமும் சொற் பிரபஞ்சமுமாகக் காணப்படுகின்றன. அவருள் பிறசமயிகள் எனப் படுவோருள்.

1. புறேட்டெஸ்ற்றுண்ட் கிறித்தவர், யேகோவா பரிசுத்தாவி, கிறிஸ்து என்பவரே தெய்வம் என்பர்.

2. கத்தோலிக் கிறித்தவர், மரியையே முதற் றெய்வமென்பர்.

3. யூதர், இகோவா என்பர்.

4. பாரசீகமதத்தார், அஹுரா மஸ்ட் என்பதே தெய்வமென்பர்.

5. ஜப்பானிய மதத்தார், மணிபத்மி ஹோம் என்பர்.

6. மகமதியர், அவிப் லாம் மிம் அல்லா என்பர்.

7. அரபியர் காராம் அல் பீன் என்பர்.

புறச் சமயத்தார் தெய்வமும் புகல்வாம்.

உலகாயதருள்.

1. பிருதிவி பூதவாதி-மண்ணே தெய்வம் என்பான்.

2. அப்பு பூதவாதி-நீரே கடவுளென்பான்.

3. தேயு பூதவாதி-நெருப்பே யதுவெனும்.

4. வாயு பூதவாதி-காற்றே கடவுளென்பான்.

5. ஆகாயபூதவாதி-ஆகாயமே தெய்வமாக அறைவன்.

6. தேகான்மவாதி - முதல்நாற் பூதங்களே கண்கண்ட தெய்வமெனக் கழறுவன்.

7. இந்திரியான்மவாதி-இந்திரியமே தெய்வமென்னும்.

8. பிராணான்மவாதியாகிய கௌளகன் பிராணவாயுவே பிரமம் என்பான்.

9. அந்தக்கரணான்மவாதி அந்தக்கரணங்களே மெய்ப்பொருளெனும்.

10. தன்மாத்திரவாதி சப்தாதி பஞ்சதன் மாத்திரைகளே தெய்வ மென்பான். [பான்.

11. அகங்காரவாதி-அகங்காரமே முதற்பொருளென்

பௌத்தர் சொல்லுனவும் பகருவங் கேண்மின்.

புத்தருள்.

12. சமுதாய வாதிகளாகிய, சௌத்திராந்திகன் ஆதிபுத்தனே தெய்வம் எனவும்,

13. வைபாடிகன் }
14. மாத்தியமிகன் } சூனியமே தெய்வம் எனவும்,

*15. அநேகாந்தவாதி-எழ்வகைப் பொருளே தெய்வம் எனவும்,

16. விஞ்ஞான வாதியெனப்படும் யோகாசாரன், அறிவே தெய்வம் எனவும் அறைவன்.

ஆருகதருள்.

17. ஆசிவகன்-அருகனையும், நிகண்டவாதி பொன்னெயில் வட்டத்திருக்கும் சித்தபரமேட்டியாகிய சகலாத்தனையுந் தெய்வமென்பார்.

18. தார்க்கிகன்-பரமாணுவொடு பரமான்மாவுந் தெய்வமென்பான்.

19. சோதிசாத்திரவாதி-சோதிரான்மாவையும்.

---

* அநேகாந்தம்=பலமுடிவு.

20. சூரியாக்கினவாதி-சூரியாக்கினிகளையும்.

21. மீமாஞ்சகன்-கன்மத்தையும்.

22. பாட்டமதத்தான்-நான்கு வேதங்களையும்.

23. பிரபாகரவாதி-வேதங்களுடன் அபூர்வம் என்னு மொரு பொருளையுந் தெய்வமென்பன்.

24. சாங்கியன்-புருடனே தெய்வமென்பான்.

25. அநேகேசுச் சுரவாதி-பற்பல கடவுளர் என்பான்.

26. காலவாதி-காலமே கடவுளென்னும்.

27. பௌராணிகன்-மும்மூர்த்திகளுமே முதலென்பான்

28. மாயாவாதிகளுள் பாற்கரியன் சடமுஞ்சித்துமாகிய இருவகைப் பொருள்களுந் தெய்வமென்னும்.

29. கிரீடாப்பிரமவாதி-நானே பிரமம் என்பான்.

30. விவர்த்தவாதி உலகிற்கு உபாதான காரணமாகிய மாயையே பிரமம் என்பன்.

31. சங்கிராந்த வாதியாகிய பாசுபதன் மாயாருத்திரரே கடவுள் என்பன்.

32. உற்பத்தி வாதியாகிய மாவிரதி வித்தியாருத்திரரே முதற்றெய்வ மென்பான்.

33. ஆவேச வாதியாகிய காபாலன் காலருத்திரரே தெய்வமென்னும்.

34. வாமமதத்தினன் சித்த புருடரோடு சத்தியே தெய்வமென்னும்.

35. சுத்தசாத்தேயன் சிவசிற் சத்தியே தெய்வமென்னும்.

36. பரசோம சித்தாந்தி சிவபாவனையே தெய்வ மென்னும்.

37. வைரவசமயி மகா வைரவரே முதற் றெய்வ மென்னும்.

இன்னும் சிலமதத்தாருளர். அவர் எல்லாம் வேறு கடவுளரையே தெய்வமென்பர். இங்குக் காட்டப்படாத பற்பலர் இருளன், காட்டேறி, வீரன், மதுரைக்கருப்பன், தொட்டியச்சின்னன், மாடன், காத்தவராயன், முனியன்,

அண்ணமார், சங்கிலிக்கறுப்பன், மாரியம்மை, அங்காளம்மை, பாவாடைராயன், இடாகினி, சாகினி, மன்மதன் முதலிய தேவதைகளை தெய்வமாக் கொண்டுளார்.

இன்னுஞ் சிலர் மனைத்தெய்வம், காணித்தெய்வம், கிராமதெய்வம், தருமராசாத் தெய்வங்களுமுள்ளன வென்பார். தொல்காப்பிய முதலிய இலக்கண நூல்களிலே குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் ஐந்திணைத் தெய்வங்களாகச்சேய், துர்க்கை அல்லது சூரியாக்கினிகள், திருமால், இந்திரன், வருணன் பேசப்பட்டுள்ளார். கலைத் தெய்வம் சரசுவதியென்றும், பொருட்டெய்வம் இலக்குமியென்றும், யாழ்த்தெய்வம் மாதங்கியென்றும், வீற்றுத் தெய்வம் அணங்கு என்றும் கூறப்பட்டிருக்கின்றன. விபூதி ருத்திராக்க புண்டர முகங்கட்கு அதிதேவதை வேறுவேறு கூறப்பட்டுள்ளன. அன்றியும் நீதிநூல்களிலே,,

பெண்களுக்குக் கணவரே தெய்வம், பிள்ளைகளுக்குத் தாய் தந்தையரே தெய்வம், யாவர்க்கும் அரசனே தெய்வம் என்றுங் கூறப்பட்டுள்ளன.

அந்தணரைத் தெய்வமாகவும் சிலவழி கூறப்பட்டது.

இங்ஙன மிருத்தலால் எவர் சொல்லும் எத்தெய்வத்தைக் கொள்ளுவது? எல்லாத் தெய்வத்தையுங் கொள்வதா, இங்கே காட்டப்பட்டபடி உலகத்திற் றோன்றும் எல்லாப் பொருள்களும் தெய்வங்க ளாயினவே. ஒன்றைவிட்டொன்று கொள்வீராயின் தெய்வத்தை யிகழ்ந்தவராவீர். ஆதலால்,

தெய்வஞ் சிவமெனத் தெளிவாம் தெளிவாம். இத் தெய்வங்களெல்லாம் நிலம் முதல் சத்தி தத்துவமிறுதியாகவுள்ள ஒவ்வோர் பொருளாக அடங்க, இவையிற்றிற்கெல்லாம் மேலாகப் பரமசிவப் பெருமானுளன் என்று சைவ சித்தாந்தி கொள்ளும் தெய்வமே தெய்வமென்று சித்தாந்தமாகும். மற்றத்தெய்வங்கள் வேதனைப்படி மிறக்கும்

பிறக்கும் மேல்வினையுஞ்செய்யும் "ஆதலா லிவையிலாதான் அறிந்தருள் செய்வனன்றே" என்று சிவஞான சித்தியார் தெரித்தாங்கு பரசிவனே தெய்வமாவன். மற்றைய தெய்வங்களெல்லாம் முழுமுதற் றெய்வமாகா. ஏனெனில் நிலம் முதலாக உருத்திர ரீறாகவுள்ள தெய்வங்கள் யாவும் சடத்தன்மையும் சிற்றறிவும் சிறுதொழிலும் உடையனவாய் இறக்கும்; மீளப்பிறக்கும்; பிறந்தகாலத்துப் பற்பலதுன்பங்களையும் அநுபவிக்கும். மறுபிறவிக்குரிய ஆகாமிய வினைகளையும் ஈட்டிக்கொள்ளும். பிரமன், விஷ்ணு, உருத்திரன் என்னும் மும்மூர்த்திகளுக்கு முதலாவான் சிவனே என்பதைத் துரியோசிவ: என்று வேதமும் விளம்பியதாற் றெளிக. அல்லதூஉம், அவனுக்கன்றி வேறுத்தெய்வமெனப் பெயர்வாய்ந்த ஆன்மாக்களுக்கு சிவனென்னு மங்கள நாமம் இரவலாகவு மின்றென்பதைச் "சிவனெனன்னு நாமந் தனக்கேயுடைய செம்மேனி யெம்மான்" என எமதாளுடைய வரசுகன் வாக்கானுணர்க. இன்னும் இத்தன்மையவாம் பற்பல பிரமாணங்களானும் பிறப்பிறப்பில்லாப் பெருந்தகையானராம் சிவபெருமா னொருவரே மகாதெய்வம். இவருக்குத்தான் மகாதேவனென்னும் பெயரும் உண்டு. இவரே மற்றைத் தெய்வங்களுக்கெல்லாம் அதிபதி யவரே யாவர்.

தெய்வுஞ் சிவனெனத் தெருண்டார் தேவர். முன்னோர் கற்பத்திலே தேவர், முனிவர், கின்னரர், வித்தியாதரர், சித்தர், உரகர், கருடர் முதலிய பதினெண் கணங்களும் இந்திரன், பிரமன், விஷ்ணு என்பவரும் நிறைந்திருந்த மகா சபையிலே ஓர் பெருத்த விவாத முண்டாயிற்று. அப்போது பிரமா, விஷ்ணு என்னும் இருவரும் தனித்தனி தாமே பெருந்தெய்வம் என்றார். அதனாலே மகாகோர யுத்தந் தொடங்கிற்று. விஷ்ணுவானவர், பிரமனே நீ எனது மைந்தன். ஆதலால் யானே மகாதெய்வம் என்றார். பிரமன் விஷ்ணுவை நோக்கித் திருமாலே நீ யெனக்குப் புத்திரன், மருகன், பௌத்திரன், (பாட்டப் பிள்ளை) பிரபௌத்

திரன் ஆகின்றாய். எங்ஙனமெனில், நமது மைந்தனாகிய காசிப முனிவரது மனைவியாகிய அதிதியென்பவளிடத்திலே வாமனனாகப் பிறந்தாய். எம்மாற் படைக்கப்பட்ட தூணிடத்து நரசிங்கமாகப் பிறந்தாய். ஜமதக்கினி முனிவனிடத்துப் பரசுராமனாய்ப் பிறந்தனை. தசரதன் மனைவி கௌசலை வயிற்றினின்றும் இராமனாகப் பிறந்தனை. வசுதேவர் உரோகிணிக்கு மைந்தனானாய். தேவகி வயிற்றிற் கண்ணனாய்ப் பிறந்தாய். இன்னும் விட்டுணு யசசு என்பவன் மனைவி வயிற்றிற் பதிந்து பிறப்பை. பராசரமுனிக்கு வியாசனாய்ப் பிறந்தாய். இவற்றானும் கபிலன், புத்தன், இடபதேவன் முதலிய பிறப்புக்களை யெடுத்ததனாலும் பௌத்திர பிரபௌத்திரனாக எண்ணப்படுவை யன்றிப் பிதாவாக மாட்டாய். ஹே! மாயவா!

தந்தை பரத்துவந் தனைத்தரா தந்தோ. அன்றியு முனது பதினைந்து பிறப்புக்களுட் சனகன், சனந்தனன், சனாதனன், சனற்குமாரனாக என்னிடம் பிறந்தனை. அதனால் எனக்குப் பிள்ளையானாய். நாரதனாகவும் என்னிடந் தோன்றினாய். தத்தாத்திரேயனாய்ப் பிறந்தாய். இக்காரணத்தால் நானே யுனக்குப் பிதா, பிரபிதா ஆகின்றேன். என் மகளாகிய பூதேவியை நினக்கு மனைவியாகத் தந்தேன். அதுபற்றி நான் மாமனாகவு மிருக்கின்றேன். எனது மகனாகிய பிருகுவின் புத்திரியான இலக்குமியையும் உனக்கு விவாகஞ்செய்வித்தேன். இவ்வாறாக விளங்கும் என்பெருமை சிறிதும் பாராமற் செய்ந்நன்றிமறந்தவர்போலவும், பித்தர்போலவும் பிதற்றுகின்றாய். பிதா, பிரபிதா, விதாதா, மாமன் எனவிருக்கும் என்மாட்டு மரியாதை வைத்து என்னைத் தெய்வமாப்பேணுதி. உனது பத்துப் பிறப்பல்லாத, பதினைந்துப் பிறப்பையும் யோசிக்குதி. அவைகளின் தாய் தந்தையர்களோ பலருளர். அவர்கள் எல்லாம் நின்னைப் பயந்தவர்களாதலால் பெருந் தெய்வமாவரோ? ஆகார் ஆகார். ஆதலால் தந்தை யென்ற காரணத்தை ஏதுவாகக் கொண்டு

நானே பரதெய்வமென்று பேசாதே யென்றார். அதுகேட்ட நாரணர்,

கமலனே யென்னிடங் காண்குதி யுலகம். என்று தம் பேழ்வாயைத் திறந்தார். திறந்து விதியோய்! எல்லாச் சிருட்டிகளும் என் வயிற்றுளிருக்கின்றன. இதோசென்று உண்மை யுணர்தி யென்றார். பிரமதேவர் வயிற்றின் உட்புகுந்து பார்த்தார். பார்க்கும் அளவில் மாயவனார் ஓர் மாயஞ்செய்தார். என்னெனில் பிரமன் வெளிப்படாதபடி தமது கண்கள், மூக்குத் துவாரங்கள், வாய், செவிகள், கோசம், அபானம் என்னும் ஒன்பது வாயில்களையும் இறுக்கி மூடிக்கொண்டார். பிரமர் திகைத்து வெளிவரவெண்ணி ஒன்பது துவாரங்களினும் ஓடியோடிப்பார்த்தார். அவையெலாம் மூடப்பட்டிருந்தன. என் செய்வார். மனவருத்த முற்றார். இதுதானோ காவற்கடவுளின் செயல். நாரணா! நன்று! நன்று! நின்செயல். நின் மாயமென்னை யென்செய்யும் என்று மாயவனாரின் கொப்பூழ்க் கமலநாள வழியாய் வெளிப்போந்தார் என்றது கூர்மபுராணம்.

விதியோன் விண்டுவை விழுங்கினன் விரைவில். அங்ஙனம் வெளிப்போந்த பிரமதேவர் பெருஞ்சின முடையராய், விஷ்ணுவே! இதுவோ நின்செயல். வழிகளை மறைத்து என்னை வஞ்சமாக வென்றிடப் பார்த்தாய். உன் வயிற்றிற் காண்ப்படாத உலகங்க ளனந்தமுள. என்று ஆர்ப்பரித்துப் பெரிய வடிவங்கொண்டு தம் பெருவாயைத் திறந்து உலகமுண்ட பெருவாயனை யொருசேர விழுங்குகின்றே னென்று விழுங்கினர். நாரணர் வயிற்றிற் புகுந்து அபான வாயில் மூடப்படுமுன் அதன்வழியாய் வெளிவந்தார் என்று வாயுசங்கிதை கூறுகின்றது. அங்ஙனம் வெளிவந்த விஷ்ணு பிரமதேவரின் கோபத்தைத் தணித்து நான் ஒரு விளையாட்டாகச் செய்தேனென்று சமாதானம் பண்ணிக்கொண்டார். பின்னர்ப் பிரமன், நீயும் நானுமே முதற் றெய்வமென்றான். அப்போது விட்டுணுவானவர்,

தனிமுதற் றெய்வஞ் சங்கரன் தேளிதி. பிரமனை நோக்கி, என் கண்ணன்ன என் கண்ணேய்! நம்மிருவர்க்கும் மேலாக உருத்திரர் உளர். அவர்க்கும் நமக்கும் மேலான தெய்வம் தற்பர சிவனே. அவரே தேவராசர்; அவரே பசுபதி. அவர்க்கு மேலான தெய்வமும் ஒப்பான தெய்வமும் வேறு இல்லை. இதுவே வேதங்களின் உண்மை. இதுவே முக்காலும் உண்மை.

விராஸநாரூட மப்ரமேயம் அநாத்யந்தம் நிஷ்களம், நிர்க்குணஞ் சாந்தம் நிரஞ்சன மநாமயம், ஹிரண்மயட் குர்வாணம் சிவநாமாங்ய நிசமுச்சாந்தம், இரணியநிதிம் அத்வைதம் சதுர்த்தம் ப்ரஹ்மவிஷ்ணு, ருத்திராதீதம் ஏகமாசாஸ்யம் பகவந்தம் சிவம். என அதர்வண வேதபாகமுங் கூறிற்று. இங்ஙனமே,

ஸர்வசக்திந் த்விதாத்மாநம் ஸர்வ காரண காரணம், யதியோங்யா பரமுச்யேயம் ப்ரபத்யே பரமேச்சுரம், பர்க்கம் பசுபதிம் ருத்ரம் மஹாதேவம் ஜகத்குரும். என யசுர்வேதபாகமாகிய சர்ப்போபநிடதமும், யேதோவாநாமதிபோ யஸ்மிங்லோகா அதிச்ரீதா, யஈசா அஸ்ய த்விபத சதுஷ்பத: கஸ்மைதேவாய ஹவிஷாவிதேம. என யசுர்வேத பாகமாகிய சுவேதாச்சுவதர உபநிடதமும் தேவாதிபதி தேவராசன் சிவனே யென்றது என்று பிரமற்கு உபதேசித்தார்.

பிரமன் முதலியோர் காரணரல்லர்.

இனிப் பிரமன் முதலிய மூவரையும் முறையே "படைப்புக்கடவுள் திதிக்கடவுள் சங்காரக்கடவுள்" எனவும், "சாக்கிரமூர்த்தி சொப்பனமூர்த்தி சுழுத்திமூர்த்தி" எனவுங் கூறிப் பரமசிவனைத் "துரியமூர்த்தி" என உபநிடதங்களெல்லாம் வேருகவைத்து ஓதுதலின், அப்பரப்பிரம முழுமுதல்வனே நாயனாரால் "ஆதிபகவன்" என்று அங்ஙனம் விசேடிக்கப்பட்டான் என்பது தெற்றென உணர்ந்துகொ

ள்க. இன்னும், மால் அயன் உருத்திரன் என்னும் மூவரையும் முறையே "சாத்துவிககுணமூர்த்தி இராசதகுணமூர்த்தி தாமதகுணமூர்த்தி" என்று ஓதிப், பரமசிவனைக் "குணாதீதமூர்த்தி" என்று உபநிடதம் முதலியன ஓதுதலானும் அம்முழுமுதல்வனே ஆதிசத்தத்தால் விசேடிக்கப்பட்ட பகவன் என்பது துணிபாம்.

இனிச் சங்கார வுருத்திரனுஞ் சங்கரித்தற் றொழிலின் பொருட்டுத் தாமதகுணத்தை மேற்கொண்டதல்லது இயல்பாகத் தாமதகுணமுண்டயனல்லன்; தாமதகுணத்தின் காரியமாகிய துயில் மயக்கம் வஞ்சம் முதலியன மாயோனுக்கு உளவாதல்புராண இதிகாசங்களிற் கேட்கப்படுதலின், அக்கடவுளுக்குச் சாத்துவிககுணங் கூறியது காத்தற்றொழின் மாத்திரைக்கே என்க.

மாயோனுக்குக் காத்தற்றொழிலும் பிருதிவி முதற் பிரகிருதி மாயைகாறும் வியாபித்து நிற்கும் பிரதிட்டாகலை பரியந்தமேயென்க. என்னை? நிவிர்த்தி பிரதிட்டை வித்தை சாந்தி சாந்தியாதிதை என்னும் ஐங்கலைகளான் வியாபிக்கப்பட்ட தத்துவ புவனங்களுக்கு முறையே பிரமன் மால் உருத்திரன் மகேசுரன் சதாசிவன் என்னும் ஐவரும் அதிகாரிகள் என ஆகமங்களும் ஓதாநிற்கும்.

இதனாற் பரசிவ பரத்துவம் இனிதாகத் தெளியற்பாற்று. இங்ஙனம் காத்தற் கடவுளாகிய நாராயணனும் படைத்தற் கடவுளாகிய இரணிய கருப்பனும் பிரமனுமாகார்கள் என்க.

இன்னன நியாயங்களானே தெய்வம் என்பது முழுமுதற் பொருளாகிய சிவபெருமானொருவருக்கே செல்லுதலால் ஔவையார் கூறிய தெய்வ மிகழேல் என்னும் முதுமொழிக்கும் சிவபெருமானை யிகழாதே, என்பதே பொருளாகக்கொள்க. அவரை வெறுத்தலும், அவர்க்கு ஒப்பானவும் உயர்வானவுமான தெய்வங்கள் உள்ளன வென்றலுங் கூடாவாம்.

சிவனடியாராய்ச் சிவசத்தியு ளொன்றாய் விளங்கும் நாராயணரைத் தனிப்பரம் தெய்வமாக ஔவையார் கொண்டாரேல் அவரது துதிகூறியிருப்பர். அதுவுமில்லை. ஆத்திசூடி யென்றதை விடுத்துத் துளசிசூடி என்று தொடங்கியிருப்பர். அதுவுமன்றிச் சிவத்தைப்பேணிற் றவத்திற்கழகு என்றதை நீக்கி, தாமோதரனைப் பேணிற் றவத்திற் கழகு என்றிருப்பர். கோன்றை வேந்தன் என்று தொடங்குவதை விடுத்து, கன்றுமேய்த்த கண்ணனிணையடி யென்றுமேத்தித் தொழுவோமியாமே என்பர். அவையுஞ் செய்தாரல்லர். நீறில்லாநெற்றிபாழ் என்றதை யொரீஇ, "மண்ணிலா நெற்றிபாழ்" என்பர். "சிவாயநமவென்று சிந்தித்திருப்போர்க்கு" என்றதை விடுத்து நாராயணநம வென்றிருப்போர்க்கு என்று கூறுவர். அவையுமிலவே. ஞானக்குறளினும் மாயவனை முதற்பொருளாகக் கூறியிருப்பர். அதுவுமில்லையே. ஆதலால் தெய்வமென்றது சிவபெருமான் என்றது முடிபாக, அவரையிகழ்தல் கூடாதென்பதே ஔவைப்பிராட்டியார் கருத்தென்றறிக. இவ் வெளவைப்பிராட்டியாருடைய முக்கியமான சிலவிஷயங்களைத் தெரித்து இவரியற்றிய கோன்றைவேந்த னென்னும் நீதிநூலினுள்ள ஒவ்வொரு வாக்கியங்களையும் முறையாக எடுத்தாராய்வாம்.

ஔவையாரின் சரித்திரச் சுருக்கம்.

இவர் சோழநாட்டில் வசித்தவர். இவர் பிறப்பு வளர்ப்பைக் குறித்துத் திருவள்ளுவர் சரித்திரத்திலும் கபிலர் அகவலிலும் விநோதரசமஞ்சரியிலும் காணப்படுகின்றவைகள் நீங்க வேறுகதத் தகுந்த ஆதாரமாகிய விருத்தாந்தங்கள் கிடைக்காவிடினும் பண்டைகாலத்து நூல்களிலுள்ள சிலவிஷயங்களை மட்டுமே எடுத்துக் கூறுவோம்.

"சொல்லாயும் ஔவை என்று படிக்காசுப் புலவர் தொண்டைமண்டல சதகத்திலும், "ஔவை பாடிய அம்

பற்கிழவன்" என்று சேந்தன் திவாகரத்திலும், "ஔவை யுண்ட நெல்லிக்கனிபோல" என்று பரிமேலழகர் 100ம் திருக்குறளுக்குத் தாம்செய்த உரையினும், "மால்வரைக் கமழ்பூஞ்சாரல் கவினியநெல்லி அமிழ்துவிளை தீங்கனி ஔவைக் கீந்த அதிகன்" என்று நத்தத்தனார் தாம்பாடிய சிறுபாணாற்றுப்படையிலும் இவரைச் சுட்டிப் பேசியிருப்பது மன்றி உச்சிமேற் புலவர்கொள்ளும் நச்சினார்க்கினியரும் "கொன்றை வேந்தன் செல்வனடியிணை என்றுமேத்தித் தொழுவோ மியாமே" என்பதையும், "அட்டாலும் பால் சுவையிற் குன்றாதளவளாய் நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்" என்பதையும் பொருளதிகார வுரையிலும் "களம் புகலோம்பன்மின்" என்பதைப் புறநானூறு உரையிலும், இன்னும் பலவிடங்களிலும் இவரது அருமையும் பெருமையும் வாய்ந்த வாக்குகளை எடுத்தாண்டிருக்கின்றனர்.

இவரை விசேடமாய் ஆதரித்த அரசன் அதியமான் நெடுமானஞ்சி. புறநானூற்றுச் செய்யுளில் இவர் பாடியதாகக் காணப்படுகிற 367 அடிகளுடைய 33 பாடல்களில், 21 பாடல்கள் இவ் வரசனைப் பற்றியவையே. இவ் வரசன் ஒருகாலத்தில் உண்டோர்க்கு நெடுங்காலம் சீவித்திருத்தலைச்செய்யும் கருநெல்லிப் பழத்தைப் பெற்று அதனை இவருக்குக் கொடுத்தபொழுது ஔவையாரும் மகிழ்வுற்று,

"மன்னுகபெருமநீயேதொன்னிலைப்
பெருமலைவிடரகத்தருமிசைக்கொண்ட
சிறியிலைநெல்லித்தீங்கனிமறியா
தாதனின்னகத்தடக்கிச்
சாதனீங்கவெமக்கீந்தனையே".

என்று புகழ்ந்து பாடினர். இந்தச்செய்யுள் புறநானூறு என்னும் நூலிற் கண்டது. மேற்கூறியவண்ணம் பரிமேலழகருரையிலும் சிறுபாணாற்றுப் படையிலும் குறிக்கப்பட்ட விடயம் இதுவே. இன்னும் இவராற் பாடப்பட்

டோர் தொண்டைமான்; அதியமான்; பொகுட்டெழினி; நாஞ்சில்வள்ளுவன்; சேரமான்மாவெண்கோ; பாண்டியன் கானப்பேர்தந்த உக்கிரப்பெருவழுதி; சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி.

"இன்றும் பரணன் பாடினன்" என்று இவரே புறநானூறு 99ம் பாட்டில் புலவர் திலகராகிய பரணரைப்பற்றிப் பேசியிருப்பதால் பரணர் இவர் காலத்தவர் என விளங்குகின்றது. அவர், சோழன் உருவப்பஃறேரிளஞ்சேட்சென்னியைப் பாடியிருப்பது புறநானூறு 4ம் செய்யுளால் தெரியவருகிறது. "உருவப்பஃறேரிளையோன் சிறுவன்" என்று முடித்தாமக் கண்ணியார் தாம்பாடிய பொருநாரற்றுப்படை 130ம் அடியிற் கூறியிருப்பது சோழன் கரிகாற்பெருவளத்தானை யென்பது அவ்வடிக்கும், தொல்காப்பியம், அகத்திணையியல் 30ம் சூத்திரத்துக்கும் நச்சினார்க்கினிய ரெழுதிய உரையாலுணர்க. இக்கரிகாலனே "சூழ்கழன் மன்னற்குக் காட்டல்வேண்டி" என்ற சிலப்பதிகார அடியுட் குறிக்கப்பட்டவன். கரிகாலனும், ஷை சிலப்பதிகாரத்திற் பேசப்பட்ட "கடல்சூழிலங்கைக் கயவாகுவும்" ஒருகாலத்தவர். இலங்கைச் சரித்திரத்தால் கயவாகுவின் காலம் கி.பி. 113 என்று புலப்படுகின்றது. ஆகையால் ஔவையாரும் இக்காலத்துக்குச் சற்றுமுற்பட்டவரா யிருத்தல்வேண்டும். சிலப்பதிகார நூலாசிரியராகிய இளங்கோவடிகள்

"அல்லவை செய்தார்க் கறங்கூற்ற மாமென்னும்
பல்லவையோர் சொல்லும் பழுதன்றே"

என்னும் பாட்டில் ஔவையாரருளிய செய்யுளடியை எடுத்தாண்டிருப்பதாலும், ஔவையார் கரிகால் பெருவளவன் தந்தையின் காலத்திலிருந்ததாகத் துணியலாம். அதாவது முதல் நூற்றாண்டின் இறுதிக்கும் இரண்டாம் நூற்றாண்டின் முதலுக்கும் இடைக்காலத்தி லிருக்கலாம். இவர் நீடித்தகாலம் வாழ்ந்தாரென்ப.

புறநானூற்றுச் செய்யுளை, நன்கு ஆராயின் இவர்காலத்துப்புலவர்கள் அரிசிற்கிழார், இடைக்காடனார், கபிலர், பரணர், பெருந்தலைச் சாத்தனார், மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் முதலிய பற்பல புலவர்கட்கு மேற்பட்டிருந்தார்கள் என்பது புலப்படும்.

இவர் பாடிய நூல்களாவன.

1. ஆத்திசூடி
2. கொன்றைவேந்தன்
3. மூதுரை
4. நல்வழி
5. பந்தனந்தாதி
6. அசதிக்கோவை
7. ஞானக்குறள்
8. தனிப்பாடற்றிரட்டு, புறநானூறு இவைகளினுள்ள 100க்கு மேற்பட்ட தனிச்செய்யுள்கள்.
9. அருந்தமிழ்மாலை
10. நன்னூற்கோவை
11. நான்மணிக்கோவை
12. தரிசனப்பத்து
13. பிள்ளையாரகவல்.

இவைகளன்றி நம் நாட்டில் வழங்கும் பழமொழிகளும் இவர் கூறிய என்ப.

இவர் சில்வகை எழுத்திற் பல்பொருள் விளங்கச் சொல்நயம், பொருள் நயங்களுடன் செய்யுள்கள் செய்வதில் மிக்க திறமையுடையவர். இது விஷயத்தில் திருவள்ளுவரினும் மேற்பட்டவரென்று கூறலாம். திருவள்ளுவர் ஒரு விஷயத்தை இரண்டு அடிகளாற் கூறுவரென்றால் ஔவையார் இரண்டு விஷயங்களை ஒரே அடியாற் கூறுவர். காட்டுதும்.

திருக்குறள்.

"பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா
பிற்பகற் றாமே வரும்".

இன்னா ஒன்றே கூறப்பட்டது.

கொன்றைவேந்தன்.

"முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்".

இன்னா இனியவை இரண்டும் கூறப்பட்டன.

திருக்குறள்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோனெனக் கேட்ட தாய்".

தாய்மட்டும்.

"சான்றோ ரென்கை ஈன்றோர்க் கழகு".

தாய்தந்தை இருவரும்.

இத்தன்மையவான அருமையும் பெருமையும் பெற்ற வாக்கியங்கள் பலவற்றானு மறியப்படும். இவரைப்போல் சுருங்கச்சொல்ல லென்னும் அழகுபெற வாக்கியங்களை அமைப்பவர் எவருமிலர்.

இவர் சமயம், தாஞ்செய்த நூல்களின் பெயரானும் அவற்றினடங்கிய விஷயங்களானும் சைவசமயத்தரென்றே புலப்படும். எப்படியெனில் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் என்னும் நூல்களின் பெயரானும், "சிவத்தைப் பேணில் தவத்திற் கழகு" "சிவாய நமவென்று சிந்தித்திருப்பார்க்கு—அபாய மொருநாளு மில்லை". "பால்புரை பிறைநுதற் பொலிந்தசென்னி, நீலமணி மிடற்றொருவன்போல" என்னும் செய்யுள்களானும் தெரிகின்றது.

கொன்றை வேந்தன்.

விநாயகர் காப்பு.

கொன்றை வேந்தன் செல்வ னடியிணை
என்று மேத்தித் தொழுவோ மியாமே.

(இ-ள்.) கொன்றை-கொன்றைப் பூமாலையைச் சூடிய, வேந்தன்-தலைவனாகிய சிவபெருமானது, செல்வன்-புதல்வனாகிய விநாயகக்கடவுளது, அடியிணை-இரண்டு பாதங்களையும், என்றும் - எந்நாளும், ஏத்தி - துதிசெய்து, தொழுவோம்-வணங்குவோம், யாம்-யாங்கள், ஏ-அசை.

எடுத்துக்கொண்ட நூல் இடையூறின்றி இனிது முடிதற் பொருட்டுச் செயற்பாலதென ஆன்றோ ரொழுக்கத்தான் அநுமிக்கப்படுஞ் சுருதியின் விதிப்படி, "வழிபடு தெய்வ வணக்கஞ்செய்து மங்கலமொழிமுதல் வகுத்தெடுத்துக்கொண்ட இலக்கண விலக்கிய மிடுக்கணின்றி யினிது முடியும்" என்றபடி தாம் வழிபடுகிற தெய்வமாகிய விநாயகரது வணக்கம் கூறப்பட்டது. ஒரு காரியஞ் செய்யத் தொடங்குவோர் முதலில் விநாயகப் பெருமானை வணங்கியே தொடங்கல்வேண்டும். அன்றாயின் அக்காரியம் முடியாது; ஏனெனில், சிவபிரான் கணபதிப் பெருமானுக்கு அருளிச்செய்திருக்கின்றார். இதனை,

என்னரே யாயினும் யாவதொன் றெண்ணுதன்
முன்னரே யுனதுதாண் முடியுறப் பணிவரேல்
அன்னர்தஞ் சிந்தைபோ லாக்குதி யலதுனை
உன்னலார் செய்கையை யூறுசெய் திடுதிநீ.

எனக் கந்தபுராணம் கயமுகனுற்பத்திப் படலத்திற் காண்க.

அன்றியும் இந் நூலாசிரியராகிய ஔவைப் பிராட்டியார் எப்பொழுதும் பூசித்துவந்தது கணபதியையே யென்பது பின்வழங்குங் கதையால் விளங்கும். அதாவது, ஒரு

தினம் ஔவைப்பிராட்டியார் கணபதியை விரைந்து பூசிக் கையில் அப்பெருமான் அவரை நோக்கி நாள்தோறும் மெல்லப் பூசிக்கும் நீ யாதுகாரணம்பற்றி விரைகின்ருயென, அதற்கு அத் தவமுடையார் "சுவாமி" ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவாமிகளும், சேரமான்பெருமாள் நாயனுரும் வடகயிலேக்குப் போகிருர்கள். என்னேயும் வரும்படி அழைத்தபடியால் விரைகின்றேனென, இதைக் கேட்ட விநாயகர் அவசரம் வேண்டாம். தினம்போலவே பூசையை நடத்து. நாம் உன்னே அவர்கள் செல்லுமுன்னேயே சேர்ப்பேன் என, இதைக்கேட்ட ஔவையார் ஆனந்தக்கடலில் மூழ்கினவராய் தினம் செய்கிறதைவிட இன்னும் மெதுவாய்ப் பூசிக்கவே அக்கடவுள் மிகத் திருப்திகொண்டு தம் துதிக்கையால் அவரைத் தூக்கிக் கைலேயில் விடுத்தனர். பிறகு சென்ற இருவரும் கண்டு வியப்படைந்து வாழ்த்திஞர்கள். அப்பொழுது அவ்வம்மையார்,

"மதுர மொழிநல் லுமையாள் சிறுவன் மலரடியை
முதிர நினேயவல் லார்க்கரி தோமுகில் போன்முழங்கி
அதிர வருகின்ற யானேயுந் தேரு மதன்பின்சென்ற
குதிரையுங் காதங் கிழவியுங் காதங் குலமன்னனே".

என்று பாடினர். இக் கணபதிப் பெருமான் தன்மீது அருள்கூர்ந்து கைலேயில் விடுகின்றேனென்று உரைத்ததின் மகிழ்ந்து அன்புற்று "சீதக் களபச் செந்தா மரைப்பூம்" என்ற தொடக்கத்தையுடைய கணபதி அகவல் பாடினர் என்று கூறுவர்.

பரமசிவனுக்குப் பிரியமான மலர்கள் ஆத்தி, கொன்றை, தும்பை முதலியனவாம். இவற்றில் கொன்றைமலரே மிக்க பிரியம். அஃதேனெனில் அது பிரணவ அக்ஷரமாகிய ஓங்காரம் போன்றமையின், எனனே? தாமே பிரணவ சொருபமாகவும், பிரணவ அட்சரமாகவும், பிரணவ வாக்கியமாகவும், பிரணவ வாச்சியமாகவு மிருக்கின்றமையை யுணர்த்தற்கு என்பர் மேலோர்.

நூல்.

I. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.

அன்னையும் - தாயும், பிதாவும் - தகப்பனும், முன் - முன்னே, அறி - காணப்பட்ட, தெய்வம்-தெய்வங்களாம்.

தாயும் தந்தையுமே ஒருவன் உலகத்திலே உதித்த போது முதலில் காணும் தெய்வங்களாம். என்னை? அவன் அவள் அறுவெனத் தேகத்தான் வேறுபட்டனவாகிய ஆன்மாக்கள் உலகின்கண் ணுதிப்பனவற்றிற்குக் காரணங்களாவார்களாகிய தாய்தந்தைகளில் தாயே முக்கியமாம். அஃதேனெனில் தன்னைப் பத்துமாதம் சுமக்கவும் தன்னைப் பெறவும் பாதுகாக்கவும் பெற்றவுடன் பால்தரவும் தன் தேகத்தினமிசமே மகவாகவரவு மிருப்பவற்றினு லென்க. "அவளால் வந்த வாக்கமிவ் வாழ்க்கையெல்லா" மென்றார் அருண்மொழித் தேவரும். மகவுகளை அன்பாய் நடத்தற்கு அன்னையினு மிக்கார் யார் ?

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பயன்கள் நான்கனுள் அறமே மற்றையவற்றை யடைதற்குக் காரணமாயுள்ளது. அவ் வறத்தைக் கைக்கொண்டார் யாவரும் இம் முதுமொழியை யநுசரிப்பது கடமையாகும். அவ் வறத்தின் பகுதிகள் எல்லாவற்றினுஞ் சிறந்தது, தாய் தந்தையரைத் தெய்வமாக வழிபடுதலாம். இதனைப் பின்னரும் நன்கு விளக்குவான் தெய்வப்புலமையராம் அவ்வேளைவைப் பிராட்டியார் "தந்தைதாய்ப்பேண்" தந்தை சொன்மிக்க மந்திரமில்லை; தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை; எனக் கூறியுள்ளார். அங்ஙனங் கூறினவர் தந்தையை முன்னர் வைக்காது, தாயை முன்னர் வைத்துக் கூறியதென்னையென்ற சந்தேகம் பலர்க்கு மிருக்கலாம். அதனையாராய்ந்து கூறுமிடத்துக் குழவிகட்குத் தந்தையைப்பார்க்கிலுந் தாயே சிறந்தவள் ஆகின்றாள். ஔவையாரது தாயாகிய ஆதி யென்பவளும், தந்தையாகிய பகவன் என்பாரும் கூடிப் பெற்ற பிள்ளைகளை யெல்லாம் அங்கங்கே விட்டு

விட்டுப் போயினர். ஔவையார் பிறந்தபோதும் பகவன் என்னுந் தந்தையார் பிள்ளையை விடுத்து வருவாய் என்று ஆதிக்குக் கூற, அவள் பெரிதும் வருந்தினள்.

பெற்றவட்கே தெரியுமந்தப் பிள்ளை வருத்தம் :—என்ற படி பத்துமாதமுஞ் சுமந்து வருந்தி, தாங்கொணு நோவிற் பெற்ற பிள்ளையை விட்டு எவ்வாறு செல்வாள். பிள்ளை முகத்தைப் பார்த்துப் பார்த்துத் தேம்பினுள்; விம்மினுள்; கண்ணீரருவியால் முழுகி வெய்துயிர்த்தாள். தன் குழந்தையைச் சான்ருேனெனக் கேட்டகாலத்து ஈன்ற பொழுதினும் பெரிதுவக்கும் அன்னை, தன்குழவிக்கு ஆதாவின்றித் தனிவிட்டு வருதியெனில் ஈனும்பொழுதி னுண்டாகும் வருத்தத்தினும் பெரிய வருத்த மிருப்பது சகசமே. பூரண மதிபோன்ற பொலிவையுடைய குழந்தை தன்முகம் நோக்க, ஆதி கணவன்முகத்தை யச்சமுந் துக்கமும் ஒருங்கடைய நோக்கினள். நோக்கியும் பகவன் இரங்கினுரல்லர். இதுகண்ட குழந்தையாய்க் கிடந்த ஔவையார் தாயின் அகநோக்கித் தேற்றரவு செய்து அனுப்பினர். அதை நினைந்தே தாயை முன்வைத்தார் என்கோ? இவரது சகோதரராகிய பெருநாவலராந் திருவள்ளுவ நாயனுரும் தாம் அருளிச்செய்த திருக்குறளில், முதற் செய்யுட்கண்,

"ஆதி பகவன் முதற்றே யுலகு" என்று ஔவையார் கூறியருளியபடி கூறினர். கடவுட்குப் பற்பலகோடி திருநாமங்கள் இருப்பவும், அவைகளை யெல்லாம் விடுத்துப் பகவன் என்ற பெயரை நாட்டியதும் பகவன் என்ற பெயரோ டொழியாது ஆதி என்ற விசேடணங் கொடுத்து ஓதியதுமென்னை? ஔவையார் கூறிய கொள்கையை நிலைநிறுத்துதற்கல்லவா? பகவன் என்றசொல் சிவன், திருமால், பிரமன், அருகன், புத்தன் என்பார்க்குப் பெயர்களாகவழங்கப்படுகின்றது. அன்றியும் சூரியபகவான், சந்திரபகவான், சுக்கிரபகவான், சனிபகவான் என்று பிறர்க்கும் வழங்கப் படுகின்றது.

பகவனென்பான் பரமேசுரனே என்று வேதாகமங்கள் முழங்குகின்றன. பகவன் என்பது பகம் என்னுந் தாதுவி னடியாகப் பிறந்த வடமொழி. அதற்கு ஆறு என்று பொருள் எனவே, அறுகுணங்களை யுடையவன் யாவனோ அவனே பகவன். அறுகுணங்கள், ஐசுவரியம், வீரியம், வைராக்கியம், புகழ், திரு, ஞானம் என்பன. இவ்வறுகுணங் களும் நிரம்பப் பெற்றவன் பரமேசுரனன்றி மற்றையரல்லர் என்பது ஆராய்ச்சியாற் றெளியப்படும். ஆதலால் மற்றையோராகிய திருமால், பிரமன், அருகன், புத்தன் முதலாயினோர்க்குப் பகவ சப்தம் உபசாரமே. பிறக்குங் கடவுளாகிய பிரமனை அயன் எனவும், இறக்குங் கடவுளாகிய காகுத்தனை அச்சுதன் எனவும், மரிக்குந்தேவரை அமரர் எனவும், காராட்டை வெள்ளாடு எனவும், அழைப்பது போன்ற மங்கலமேயன்றி யுண்மையன்று. அதனை,

நிகண்டு மொழியும் நிருபணஞ் செய்யும். ஸ்ரீ மண்டல புருடனார் தாஞ் சமணமதத்தினரா யிருந்தும் பக்ஷபாத மின்றிப் பகவன் என்ற சப்தத்தின் பொருளைத் தெரித்தார். வேதமும், அதன் அங்கமாகிய சந்தோவிசிதி என்னும் நிகண்டும் சிவபெருமானே ஆதிபகவன் என்றும், அவரே வாச்சியப்பொருளா யிருப்பவரென்றும் எவ்வாறு விளக்கினவோ அவ்வாறே தாமும் விளக்கினார். எப்படியெனில் பகவன் என்ற சப்தத்திற்குச் சிவன், திருமால், பிரமன், அருகன், புத்தன் என்பவரே பொருளாவார் என்று விளக்க வந்தவர், தம்முடைய கடவுளாகிய அருகனை முதலிற் கூறினாரல்லர். திருமாலாதியரையும் முதலில் வைத்தாரல்லர். பின்னை யாரை முதலில் வைத்துக் கூறினர். ஆதிபகவானாகச் சிவபெருமானையே கூறினர். "பகவனேயீசன் மாயோன் பங்கயன் சினனேபுத்தன்" என்றதனாற் காண்க. அதினும் மற்றையோர் பெயரைத் தடத்தமாகக் கூறிச் சிவனை ஈசன் என்னும் சொரூபப்பெயராற் கூறினர். நூற்றெட்டு வேதசிரசினும் ஈசதத்வப் பொருளைக்கூறும் ஈசா

வாஸ்ய உபநிடதமே முதலாய் நிற்றலால் ஆதிபகவன் சிவனேயாவான். இப்பொருளமையவும் அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்றது அமையவும் அன்றே ஆதிபகவன் எனக் கூறியுள்ளார். அதன்கண் ஆதி என்றதனால் தாயையும், பகவன் என்றதனால் தந்தையையும் வந்தித்தபடியாகும். ஆதலால் தந்தையைப் பார்க்கிலும் தாய் சிறந்தவளே. இதுபற்றியே, "அம்மையே அம்பா ஒப்பிலா மணியே" என மணிவாசகப்பிரானாரும் "அம்மையப்பரே யுலகுக்கு" என திருக்கடவூர் உய்ய்வந்த தேவநாயனாரும் கூறினார்களென்க.

ஈன்றாளில் என்ன கடவுளுமில், என்றார் நான்மணிக்கடிகை நூலாரும். உள்ளவாறு உணருமிடத்து எவ்வுயிர்க்குந் தாயிற் சிறந்தகொன்றுமில்லை. கண்ணிற்சிறந்த வுறுப்பும், கண்மணியிற் சிறந்த மணியும், ஆதிபகவானாகிய சிவனிற் சிறந்த தெய்வமும், வேதத்திற் சிறந்த நூலும், வைதிகசைவசித்தாந்தத்திற் சிறந்த முடிபும் எவ்வாறு எக்காலத்தும் இல்லையோ அதுபோல, தாவரம், நீர்வாழ்வன, ஊர்வன, பறவை, விலங்கு, மனிதர், தேவர் என்னும் எழுவகைப் பிறப்பு, எண்பத்து நான்கிலக்கம் யோனிபேதவுயிர்கட்கும் தாயிற்சிறந்த தொன்றுமில்லை. அரும்பயன்களை யளித்தற்குத் தன்னை யிவ்வுலகிற் றந்தவளும் அவளே. அந்தப் பெரும்பயனை யடைதற்கேற்ற சரீரத்தை நிறுத்துகின்றவளும் அவளே. அவளில்லாக்கால் "தாயோ டறுசுவைபோம்" என்றபடி சரீரம் இன்றாக அப்பயனும் இல்லையாகும். ஆதலால் தாயினுடைய உருவத்தையும் பயனையும் அன்பையும் நோக்குங்கால் கடவுளுடைய சத்தியே (வலிமையே) அவ்வாறு உருக்கொண்டுற்ற தெனலாம். இன்னன நியாயங்கள் இருத்தலால்தான் "தாயினிற் சிறந்த தெய்வமிலை யுயர்தந்தைதன்னி—னேயகுற் குருவு மில்லை" எனக் கூர்மபுராணத்தும், "அரசனு வாத்தியான் றாய் தந்தை தம்முன், நிகரில் இவரிவரைத் தேவரைப்போலத், தொழுதெ

மூக வென்றதே, யாவருங் கண்ட நெறி" என ஆசாரக் கோவையினும், பிறவற்றினும் பெரியோர் அவ்வாறு கூறுவாராயினர்.

துறந்தவர் தாமுந் தாயைத் தோழுவார், என்றபடி ஓர் குலத்திற் பிறந்து, அக்குலத்திற் கேற்ற தருமங்களையும் ஆச்சிரம தருமங்களையும் அநுட்டித்து, அவற்றால் அறம் வளரப் பாவந் தேயப் பெற்று, அதனால், அறியாமை நீங்கி நித்த அநித்த அறிவு பிறக்கப்பெற்று, சிற்றின்ப உவர்ப்பும் பிறவித்துன்பமுந் தோன்றப்பெற்று, மெய்யுணர்வடைந்து யான் எனது என்னும் அகப்பற்றுப் புறப்பற்றுக்களைக் களைந்துநின்ற துறந்தவர்கள் தாமும் தாயைக்கண்ட மாத்திரையே பேதையேமைக் குடியாவைத்த பெருந்தெய்வம் என்று அவள் இருபாதங்களினும் வீழ்ந்து வணங்குவ ரென்றால் அன்னைதன் பெருமை யளவிடப்போமோ. தந்தையை வணங்கார். தந்தையானவன் துறவுபூண்ட தன் மைந்தன் காலில் விழக்கடவன் என்று சாத்திரம் விதிக்கின்றது. அதனை, அரசகுலசேகர புலவ சிகாமணியாகிய அதிவீரராம பாண்டியரும் நன்கு விளக்கினர். அதுவருமாறு:—

தந்தைதாய்ப் பணிதல்செய்யுந் தவமலாற் றவம்வேறில்லை
மைந்தருக் கெதிகளேனும் வணங்குவர் தாயைத்தந்தை
யந்தணமைந் தனையேபோற்றல் வேண்டுமெற் றாதலன்றாற்
சிந்தையுற் றுணரிற்றாயே தந்தையிற் சிறந்தாண் மன்னோ.

என்று காசிகண்டத்திற் றெரிக்கப்பட்டது.

உலகத்துள்ள தாய்தந்தையர் ஒரு மகவீன்றெடுப்பப் பண்ணாத தவமெல்லாஞ் செய்வர். புத்திரோற்பத்திகண்ட போதே அளவிலாவின்புறுவர். பின்னர் இகத்தும் பரத்தும் அவராற் சுகம்பெறுவர். எவ்வகை யுயிர்களும் தாய்மாட்டு வைக்கும் அன்புசொல்லுந் தரத்ததோ? முற்றத் துறந்த சிவஞானப் பெருஞ்செல்வராகிய பட்டினத்து அடிகளாரு மன்றோ தாயின் விருப்பத்தை முடித்தற்குப் பன்னாட்காத்

திருந்தார். மலைகலங்கினும், கடல்கலங்கினும், சூரியசந்தி ரர் நிலைபெயரினும் தம்முளங்கலங்கித் திரிவுறுதவர் கலங் கித் திரிந்தனரே. இன்றாற் கருத்தராகிய ஒளவைப்பிராட்டி யாருடன் பிறந்தவராகிய திருவள்ளுவரும் இவர் கருத்திற் கிணங்க ஆதிபகவன் என்றார். உபாத்தியாயனில் ஆசாரிய னும், அவனில் தகப்பனும், அவனில் தாயும் சிறந்தவள் என்று மனுஸ்மிருதியும் கூறுகின்றது. இதுபற்றியே தகப் பனிலும் தாயே சிறந்தவளென்று உணர்த்தும்படியே அன் னையை முதலினும் பிதாவைப் பிறகும் வைத்தார்.

தாய்தந்தையர்க் கிரங்காத நெஞ்சமுடையவர் வஞ்சக ரன்றோ. ஒரு குழந்தை வளர்வதற்கு, "பாலுண்குழவி பசுங்குடர் பொறாதென, நோயுண்மருந்து தாயுண்டாங்கு" என்றபடி அக்குழந்தை யாதொரு இடையூறு அடையாத படிக்குத் தான் மருந்துண்டு பத்தியமிருந்தும், வளர்க்கின் றாள். இம்மட்டோ, தாயினது கிருபையினாலல்லவோ தந் தையை அறியவேண்டும். அவனாலன்றோ ஞானவுணர்ச்சி பெற்று கடவுளைப் பெறவேண்டும். இத் தாய்தந்தையரின் மூலமாகவல்லவோ நமது பிறவி கடைத்தேறவேண்டும். "தாயுடன் சென்று பின் தாதையைக்கூடி" என்றார் பட்டி னத்தடிகளாரும். மாதா பிதாக்களல்லவோ நாம் எதிரிலே காணப்பட்ட தெய்வங்கள். இத் தாய்தான் பிரணவத்திற்கு முதலான எழுத்தாம். எப்படியெனில், குழந்தை தன் தாயை அழைக்கத் தொடங்கும்பொழுதே ஷ பிரணவத் தின் முதலெழுத்தாகிய அகரத்தை முதலிலேயுடைய பத மாகிய அம்மா வென்றல்லவோ அழைக்கின்றது. இஃது இயல்பாக எல்லாச் சீவராசிகளுக்கும் உரியதாக விருக்கின் றது. குழந்தையினிடத்துத் தாயைக்காட்டினு மிக்க வன் புடையர்கள் எவர் ஒருவருமின்று. "தாயினுநல்ல சங்கரற் கன்பர்" என்றும், "பானினைந்தூட்டும் தாயினும்" என்றும் நமது சமயாசாரியமூர்த்திகளும் மொழிந்துளார்கள். ஆன தால் தாயும் தந்தையுமே சிறந்த தெய்வங்களாம்.

2. ஆலயந் தொழுவது சாலவு நன்று.

ஆலயம் - கோவிலுக்குப்போய், தொழுவது - கடவுளை வணங்குவது, சாலவும் - மிகவும், நன்று - நல்லது.

கோவிலுக்குப் போய் கடவுளைத் தொழுதல் நல்லது எனில், அக்கடவுள் சர்வவியாபகமாயிருக்க, அவ்விடத்தில் தான் தொழவேண்டுமென்றது என்னை எனில், பசுவுக்குத் தேகமுழுதும் பால் வியாபித்திருந்தாலும், கொள்ளும்வழி யாற் கொண்டானன்றி வேறு வழியாற் கிடையாமைபோ லென்க. வைதிக சமயப் பக்திமான்களும் ஞானவான்களும் ஆலய வழிபாட்டானே அடைதற்கரிய பெரும்பேற்றை யடைந்திருக் கின்றார்களெனப் புராண இதிகாச முதலிய வற்றின் வாயிலால் அறிந்துள்ளோம். நமது உண்மைச் சமயகுரவர்களாகிய ஞானவான்கள் நால்வரும் யாத்திரை செய்யாத திருத்தலக்கோயிலெது? எத்தனையோ தலங்க ளில் அன்பர்களுக்குப் பரசிவப் பிரபு யாவரு மறிபொணுத் திருமேனிகாட்டி யருள்செய்திருப்பதாகப் படித்துங்கேட்டு மிருக்கின்றோம். விஷ்ணு, தம் பக்தர்களாகிய ஆழ்வார்கட்கு மங்ஙனமே செய்துளார். தாம் பெற்றசுகத்தை யாவரும் அடையவேண்டுமென் றல்லவோ "கால்களாற் பயனென்னை—கறைக்—கண்ட னுறைகோயில் கோலக் கோபுரக் கோகர ணஞ்சூழாக் கால்களாற் பயனென்னை" எனவும், "பெரும் புலர் காலைமூழ்கிப் பித்தர்க்குப் பத்தராகி, அரும்பொடு மலர்கள்கொண்டாங் கார்வத்தை யுள்ளேவைத்து, விரும்பி நல் விளக்குத்தூபம் விதியினு லிடவல்லார்க்குக், கரும்பி னிற் கட்டிபோல்வார் கடவூர்வீ ரட்டனுரே" எனத், திரு நாவுக்கரசு சுவாமிகள் திருவாய் மலர்ந்தனர். இதுமாத்தி ரமோ, திருக்கோயிலின் கண் எழுந்தருளி யிருக்கும் சிவ லிங்க முதலிய திருமேனிகளைச் சிவமெனக் கண்டு வழி படுஞ் சரியையாளர்க்கு சிவபிரான் ஆண்டு வெளிப்படாது நின்று அருள்செய்வான், "மந்திரமதனிற் பஞ்சமந்திர வடிவமாக" என்றபடி, ஈசானுதி மந்திரங்களாற் சிவலிங்க முத

லிய திருவுருக்கோலினனெனக் கருதி மந்திர நியாசத்தால் வழிபடுங் கிரியையாளர்க்கும், உள்ளமெங்கணு மிடமாக வாழுஞ் சிவபிரான் இத் திருமேனியினும் வீற்றிருந்து பூசைகொண் டருளுவானெனக் கருதிச் சாத்திய மந்திரங் களால் வழிபடும் யோகிகட்கும், கறந்த வழித் தோன்றும் பால்போல் அவ்வம் மந்திரங்களால் அவரவர் விரும்பிய வடிவாய் அவ்வத் திருமேனிகளில் அவ்வப்போது தோன் றும் என்னும் ஞானிகளுக்கும் அருள்செய்யு நிமித்தியமன் றோ அக்கடவுள் ஆலயத்தில் வீற்றிருப்பது.

திருக்கோயி லுள்ளிருக்குந் திருமேனி தன்னைச்
சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவ னங்கே
யுருக்கோலி மந்திரத்தா லேநினையு மவர்க்கு
முளனெங்கு மிலனெங்கு முளனென்பார்க்கு
மிருப்பாய வடிவாகி யிந்தனத்தி னெரிபோன்
மந்திரத்தின் வந்துதித்தே யிடுஞ்சுரபிக் கெங்கு
முருக்காண வொண்ணாத பான்முலைப்பால் விம்மி
யொழுகுவது போல்வெளிப்பட் டருளுவ னன்பர்க்கே.

ஆலயம் என்றால் ஒடுங்குமிடம் அதாவது ஆன்மாக்க ளெல்லாம் ஒடுங்குந்தானம். ஆயின் ஆ என்பது இவ்விட த்து ஆன்மாக்களல்ல. பின் என்னெனில், கடவுளிடத்து லயமாகக் கூடியவைகள் எவைகளோ அவைகளைக் காட்ட வந்த ஓர் உபசர்க்கம். ஆசந்திரசூரியாள், ஆபாதாளம், ஆபாதமஸ்தகம் என்பனவற்றின் கருத்தாற் றெளிக. வீ டடைய விரும்பினோர் சிவபெருமானை வழிபடல் அத்தியா வசியகமேயாகும். சிவபெருமான் இம் மண்ணுலகத்திலே நால்வகை யோனியினும், எழுவகைப் பிறப்பினும், எண் பத்துநான்கு இலட்சம் யோனிபேதங்களினும் அளவின்றி வினைவயத்தாற் பிறந்திறந்துழலும் ஆன்மாக்களை அவற்றி னின்று மெடுக்கு நிமித்தத்தினாலன்றோ இவ் வுலகின்கண் தலம், தீர்த்தம், மூர்த்தியென்னும் மூன்றுவடிவாய் விளங் கினர் என்ப.

தணிகைப் புராணம்.

"ஈண்டுநாற் பிறப்பி னெழுவகைத் தோற்றத் தெண்பத்து நான்கெனு மிலக்க, மாண்டபல் பவத்திற் பன்முறை வினையான் மறிதரு முயிர்களை யெடுப்ப, வாண்டரு ளமல னாதியி லுலக மாங் குழி யருந்தலந் தீர்த்தங், காண்டகு மூர்த்தி யென்னமூன் றுரு வாய்க் கண்ணக னுலகெலாங் கதித்து".

என்றபடி இம்மூன்றனையுஞ் சிவபெருமா னுருவமென்றே கொள்ளவேண்டும். இம்மட்டோ, "மூர்த்தி தலந் தீர்த்த முறையாற் றொடங்கினர்க்கோர், வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே". என்றதனால் இவற்றுள் இங்கெடுத்துக் கூறவந்தது மூர்த்தியை, இம் மூர்த்தியைப் பிரதிஷ்டித்திருக்குமிடம் ஆலயம் எனப்படும். உலகிலுள்ள ஆலயங்கள் எண்ணிறந்தனவாம். இவ்வாலயங்களில் எழுந்தருளிய நமதிறைவனாகிய சிவபெருமானை வழிபட்டதனாலன்றோ எவ்வெவர்களும் பெறுதற்கரிய பேறுகளை அடைந்தார்கள்.

திருவிடைமருதூர் மும்மணிக்கோவை.

கொண்டலி னிருண்ட கண்டத் தெண்டோட்
செவ்வா னுருவிற் பையர வார்த்த
சிறுபிறை கிடந்த நெறிதரு புன்சடை
மூவா முதல்வ முக்கட் செல்வ
தேவ தேவ திருவிடை மருத
மாசறு சிறப்பின் வானவ ராடும்
பூசத் தீர்த்தம் புரக்கும் பொன்னி
அயிரா வணத்துறை யாடு மப்ப
கயிலாய வாண கௌரி நாயக
நின்னை வணங்கிப் பொன்னடி புகழ்ந்து
பெரும்பதம் பிழையா வரம்பல பெற்றோர்
இமையா நெடுங்க ணுமையா ணங்கையும்
மழைக்கட் டடத்துப் புழைக்கைப் பிள்ளையும்
அமரர்த் தாங்குங் குமர வேளும்
சுரிசங் கேந்திய திருநெடு மாலும்
வான்முறை படைத்த நான்முகத் தொருவனும்

தாரகற் செற்ற வீரக் கன்னியும்
பூவின் கிழத்தியு நாவின் மடந்தையும்
பீடுயர் தோற்றத்துக் கோடி யுருத்திரும்
ஆனைப் பெருந்திறல் வானோர் தலைவனும்
செயிர்தீர் நாற்கோட் டயிரா வதமும்
வாம்பரி யருக்கர் தாம்பன் னிருவரும்
சந்திர னொருவனுஞ் செந்திக் கடவுளும்
நிருதியுஞ் சமனுஞ் சுருதிக ணன்கும்
வருணனும் வாயுவு மிருநிதிக் கிழவனும்
எட்டு நாகமு மட்ட வசுக்களும்
மூன்று கோடி யான்ற முனிவரும்
வசிட்டனுங் கபிலனு மகத்தியன் றானும்
தும்புரு நாரத ரென்றிரு திறத்தரும்
வித்தகப் பாடன் முத்திறத் தடியரும்
திருந்திய வன்பிற் பெருந்துறைப் பிள்ளையும்
அத்தகு செல்வத் தவமதித் தருளிய
சித்த மார்சிவ வாக்கிய தேவரும்.

சூதசங்கிதை.

வளங்கனியும்வைகுந்தப்பெருநகரசீமருவிவாழுமாறும்
விளங்குசதுமறைக்கிழவன்சத்தியலோகத்திருக்கைமேவுமாறும்
உளங்கவர்மற்றைப்பதங்களிந்திரன்முன்னோர்மருவிமேவுமாறும்
களங்கனியைநிகர்களத்தாற்பூசித்தபலனென்றுகருதிடாய்சொல்.

காஞ்சிபுராணம்.

வான மேத்தயான் வைகுந்த வாழ்வுபெற் றதுவும்
ஞான நான்முகன் சத்திய வுலகநண் ணியதும்
ஏனை விண்ணவர் த்த்தம வாழ்க்கையெய் தியதும்
ஆனு யர்த்தவ னருட்குறி யருச்சனைப் பயனால்.

இவை முதலியவற்றானு மறிக.

சிவாலயத்தை மெய்யன்புடனே ஒருசாமம் அங்கப் பிரதக்ஷணஞ் செய்வோர், தமது தீவினைகளெல்லாம் நீங்கப் பெற்றுச் சிவசாலோக்கிய பதவியை யடைந்தினிதிருந்து பின்னர், உலகம் சுத்தமாயைக்குள் ஒடுங்கும்போது அத்துவிதமுத்தியையும் அடைவர்.

அருணகிரி புராணம்.

ஒருயாமம்வலம்புரியினுடலினுற்றீவினைகளொருவுமெல்லாங்
கருவாதையிலர்மண்ணிற்சிவலோகமடைந்துகளிப்புறவேவாழ்வர்
பெருகார்வத்தொடுமேலைச்சிவலோகம்பெற்றிருப்பர்பேதமற்றே
பரமேசன்பதமடைவரண்டமெலாமாயையினுட்படியும்போதில்.

விபூதியில்லாத நெற்றிபாழ், சிவாலயமில்லாத கிராமம்பாழ், சிவபெருமானைப் பூசியாத பிறவிபாழ், சிவத்தையுற்றுக்கூறாத சாஸ்திரம்பாழ் என்று வேதம்கூறிய கருத்தை யுட்கொண்டன்றோ, "திருக்கோயி லில்லாத திருவிலூரும்" என்னும் தேவாரம் எழுந்தது.

கடவுளை எப்படித் தெரிந்து கொள்ளுகிறது அவர் எப்போது தோன்றுவாரென்றால், விறகின்கண் மறைந்து கிடந்த தீ அவ்விறகினை ஒன்றோடொன்று தேய்த்துக் கடைந்தவழி அதிற்றோன்றி நின்றவாறு போலவும், பாலின்கண் மறைந்து அளாவி நிறைந்த நெய் யதனைக் காய்ச்சிக் கடைந்தவழி யதன்கண் வெளிப்பட்டு நின்றவாறு போலவும், எள்விதையின்கண் உள்ள எண்ணெய் தோன்றாவிடினும் செக்கிலிட்டாட்டும்வழி எண்ணெய் வெளிப்பட்டு நின்றவாறுபோலவும், யாண்டும் பரந்து வியாபிக்கும் ஈசுரன் ஆன்மாவைக் கீழரணியாகவும் பிரணவ வுணர்ச்சியை மேலரணியாகவுங்கொண்டு, அன்பென்னுங் கயிறுகட்டி யிழுத்துக் கடையவே வெளிப்பட்டுத் தோன்றி நின்றனுக்கிரகஞ் செய்வார். இதுபற்றியே

"விறகிற்றீயினன் பாலிற்படுநெய் போன்
மறையநின்றுளன் மாமணிச்சோதியான்
உறவுகோனட்டுணர்வு கயிற்றினன்
முறுகவாங்கிக்கடைய முன்னிற்குமே".

என்னுந் தேவாரத் திருவாக்கு மெழுந்தது.

எங்கும் வியாபித்து அரூபமாய் விளங்குங் கடவுளை ஓரிடத்திலாவாகனஞ்செய்து வணங்கல் பொருந்துமோவெனின், பொருந்தும். நாம் நம்முடைய ஆருயிர்த்தோழரொருவரை நேரிற்காணாவிடினும் அவருடைய பிரதி விம்ப

மாகிய ஓர் படத்தைக் கண்ணுறின் நாம் அவரை நேரிற் கண்டபொழுது நமக்கு எவ்வளவு அன்பும், பிரியமும், ஆனந்தமு முண்டாகுமோ அவ்வளவுண்டாகின்றது. அங்ஙனமே ஈசுரனைப் பிரத்தியட்சத்தில் நம்மால் காணச்சிறிதும் ஏலாதாயினுமவர் விம்பத்தைக்கண்டால் அச்சமயம் நமக்கு ஓர்விதமான அன்பும், இன்பமும், பத்தியும் பிறக்கின்றன. இதுகாரணம் பற்றியே நாம் ஆலயங்களில் விக்கிரகங்களைத் தாபித்துப் பூசிப்பது என்பதை யறியவும்.

கடவுளுக்கு முக்கியமாக பிரிதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மாவாகிய எட்டும் சரீரமாக விளங்குவதாய்ப் பெரியோர்களால் கூறப்பட்டிருக்கின்றது. சகல பொருள்களிலும் ஞாயிறு மிகப்பிரகாசமானதும், அதிபரிசுத்தமானது மாகையால், பரமான்மாவிற்கு அதுவே பிரதான சரீரமாகக் கொள்ளப்படுகிறது. இதுபற்றித்தான் இருக்குமுதலிய வேதங்களில் காயத்திரி மந்திரத்தைச் சிறப்பித்துச் சொல்லப்படுகிறது. காயத்திரி மந்திரத்திற்கு சூரிய நமஸ்காரம் விடயமாகும். சூரியனைப் பூசிப்பது எனெனில், அவ்வடிவின்கண் வீற்றிருக்கும் பரமான்மாவை யுத்தேசித்தே பூசித்தலாம். இதுபற்றியே,

அருக்கன்பாதம் நினைகுவரந்தி
லருக்கனுவா னரனுருவல்லனோ
யிருக்குநான் மறை யீசனையேதொழுங்
கருத்தினையறி யார்கன்மனவரே.

என்னுந் திருவாக்குமெழுந்தது. மேற்சொன்ன எட்டிடங்களும் கடவுளுக்கு முக்கிய சரீரமாக விளங்குகிறது என்பது அப்பர்சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய

"இருநிலனாய்த் தீயாகி நீருமாகி யியமான னாயெறியுங் காற்று மாகி, யருநிலைய திங்களாய் ஞாயிறாகி யாகாச மாயட்ட மூர்த்தி யாகிப், பெருநலனுங் குற்றமும் பெண்ணுமாணும் பிறருருவுந் தம்முருவுந் தாமே யாகி, நெருநலையா யின்றாகி நாளையாகி நிமிர்புன் சடையடிகள் நின்ற வாறே"

என்னுந் தமிழ்வேதத்தால் அறியப்படுகிறது.

ஏன் நாம் ஈசுரனைப் பிரத்தியட்சத்தில் காணக்கூடா தெனின் இரண்டு சிநேகிதர்கள் தங்கள் சரீரத்தை மாத்தி ரம் ஒருவருக்கொருவர் பார்க்கிறார்களே யன்றி ஒருவரு டைய ஆன்மாவை மற்றவர் பார்த்தலு மரிது. தன்னுடைய ஆன்மாவைத் தான் பார்த்தலுமரிது. கேவலம் சீவான் மாவே புலப்படுதல் அசாத்தியமெனின், பரமாத்துமாவைக் காணவுங் கருதவும் சாத்தியமாகுமா? ஒரு சிறிதும் சாத்தி யப்படாது. பரமான்மா பரஞானிகளுக்குப் பிரத்தியட்சத் தில் தோன்றுவாரேயன்றி ஏனையோருக்குத் தோன்றார்.

இனி ஆலயம், அண்டாலயம், பிண்டாலயம், என இரு திறப்படும். அண்டத்தில் உள்ள சகலமும் சரீரமாகிய நம் முடைய பிண்டத்திலும் அடங்கியிருப்பதாகக் கொள்ளப் படுகிறது. அண்டமானது இடகலை, பிங்கலை, சுழிமுனை யென்னும் மூன்று நாடிகளால் கட்டப்பட்டிருக்கின்றது. இடகலை, பிங்கலைநாடிகள், முறையே இமயகிரிபர்வதச்சார லிலும், இலங்கைத் தீவிலும் செல்லுகின்றன. சுழிமுனை நாடி சிதம்பர க்ஷேத்திரவழியாய்ச் செல்லுகின்றது. இதே மாதிரி நம்முடைய தேகத்திலும் இடகலை பிங்கலை நாடிகள் வலதுகால் பெருவிரலி லாரம்பித்து இடது நாசிவழியாக வும், இடதுகால் பெருவிரலி லாரம்பித்து வலது நாசிவழி யாகவும், செல்லுகின்றன. சுழிமுனைநாடியானது சரீரமத் தியிற்சென்று உச்சியில் ஊடுருவிச் செல்லுகின்றது. அண் டத்தில் பாற்கடல், தயிர்க்கடல், நெய்க்கடல், நல்ல தண் ணீர்க்கடல், உப்புக்கடல், தேன்கடல், கருப்பஞ்சாற்றுக் கடல், என்னும் சப்தசாகரங்கள் அடங்கியிருக்கின்றன. அவ்விதமே நம்முடைய பிண்டத்தில் சுக்கிலம், இரத்தம், மச்சை, இலம்பிகை, மூத்திரம், சிலேட்டுமம், இரசம், என் னும் ஏழும் முறையே மேற்சொன்ன சப்தசாகரங்களாகக் கொள்ளப்படுகின்றன. அண்டத்திலுள்ள 1008-சிவக்ஷேத் திரங்களுள் ஆறுசிவக்ஷேத்திரங்கள்தான் சிறந்தன. அவை யாவன: (1) திருவாரூர், (2) திருவானைக்கா, (3) திருக்

காளத்தி, (4) திருவண்ணாமலை, (5) காசி, (6) சிதம்பரம். இந்த ஆறு க்ஷேத்திரங்களும் பிண்டமாகிய நம்முடைய சரீரங்களி லிருப்பதாகப் பெரியோர்களால் சொல்லப்படு கின்றன. இவைகள் முறையே

(1) மூலாதாரத்தில் திருவாரூரும், (2) சுவாதிட்டானத் தில் திருவானைக்காவும், (3) மணிபூரகத்தில் திருவண்ணா மலையும், (4) அனாகதத்தில் சிதம்பரமும், (5) விசுத்தியில் திருக்காளத்தியும், (6) ஆக்ஞையில் காசியுமாக கருதப்படு கின்றன.

(1) மூலாதாரம் :–இதில் கணபதி ஓம் என்னும் பிர ணவ மயமாய் வீற்றிருக்கின்றார். (2) சுவாதிட்டானம் :– இதில் பிர்மா வீற்றிருக்கின்றார். (3) மணி பூரகம் :–(உந் திக்கமலம்) இதில் மகாவிஷ்ணு வீற்றிருக்கின்றார். (4) அனாகதம் :–(இருதய கமலம்) இதில் ருத்திரன் வீற்றிருக் கின்றார். (5) விசுத்தி :–(கண்டத்தானம) இதில் மகேச்வ ரன் வீற்றிருக்கின்றார். (6) ஆக்ஞை :–(நெற்றி) இதில் சதாசிவம் வீற்றிருக்கின்றார்.

நம்முடைய இருதயத்தானத்தில் தாமரை மலர்போ ன்ற பையொன்று தொங்குகின்றது. அதன் மத்தியில் ஈசு ரர் ஓர் அங்குட்டப்பிரமாணம் (கட்டைவிரலளவில்) வீற் றிருக்கிறார். இந்தத் தானந்தான் சிதம்பரமாக பெரியோர் களால் சொல்லப்படுகிறது. இவ் வாறுக்ஷேத்திரங்களுள் ளும் சிதம்பர க்ஷேத்திரந்தான் கழிபெருஞ் சிறப்புடைத் தாம். இந்த க்ஷேத்திரத்திலிருந்துதான் பரமான்மா எங் கும் வியாபிக்கிறார். சிதம்பரமாகக் கருதப்படும் நம்முடைய இருதயத்தில் ஈசுரர் சதா வீற்றிருக்கிறார்.

நம்முடைய சரீரத்தில் (1) அன்னமயகோசம், (2) பிராணமயகோசம், (3) மனோமயகோசம், (4) விஞ்ஞான மயகோசம், (5) ஆனந்தமயகோசம் என்னும் பஞ்சகோசங் கள் அடங்கியிருக்கின்றன. பிண்டமாகிய நம்முடைய சரீ

ஙங்களில் எப்படி பஞ்சகோசங்கள் அடங்கியிருக்கின்றன வோ அவ்விதமே அண்டத்தில் உள்ள ஆலயங்களிலும் பஞ்சகோசங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இது காரணம்பற்றித்தான் ஆலயங்களில் ஐந்து பிராகாரங்களும், ஐந்து வாசற்படிகளும் அமைக்கப்பட் டிருக்கின்றன. ஆலயத்துட் சென்றவுடன் நாம் கணபதியை வழிபடல்வேண்டும். எதுபற்றியெனின் ஆறுதாரங்களுக்கும் மூலாதாரமே பிரதானம், அம் மூலாதாரக் கடவுள் கணபதி, மேலும் அவருக்கு விக்கினேசுரர் என்னும் மறு பெயர் ஒன்றுண்டு. அந் நாமகரணத்திற்கேற்ப நம்முடைய பத்திக்கு யாதொரு விக்கினமும் நேராவண்ணம் அருள்புரிவார். இதுபற்றித் தான் நாம் ஆலயத்துட் சென்றவுடன் கணபதியை வணங்கல் வேண்டும்.

சிவலிங்கம் நந்தி பலிபீடம்.

ஆலயங்களிலே சிவலிங்கமும், அதற்குநேரே பலிபீடமும், நந்தியுமிருக்கின்றன. அவைகளுள் சிவலிங்கம் பதிஎனவும், நந்தி பசு எனவும், பலிபீடம் பாசம் எனவுங் கொள்ளப்படுமுண்மையால், வேதாகமங்களிற் பிரதிபாதிக்கப்படுவன பதி பசு பாசம் என்னுந் திரிபதார்த்தங்களே என்பதும், அவை மூன்றும், நேராக விளங்கலால், பதி எப்போதுண்டோ அப்போதே பசுபாசங்களும் உளவாய் மூன்றும் அநாதிநித்தியமென்பதும், அவைகள் வியாத்தி வியாப்பிய வியாபக பேதமுடையனவென்பதும் பிறவும்விளங்கப்படும்.

திருமந்திரம்.

ஆய பதிதா னருட்சிவ லிங்கமா
மாய பசுவு மடலே றெனநிற்கு
மாய பெலிபீட மாகுநற் பாசமா
மாய வரனிலை யாய்ந்துகொள் வார்கட்கே.

என்றதனாலறிக.

ஐந்து கோபுரவாயில்களிலும் முதல் வாசற்படி அகன்றதாயும், இரண்டாவது கொஞ்சம் குறுகியும், மூன்ருவது

அதைவிடக் கொஞ்சம் குறுகியும், நான்காவது அதைவிடக் கொஞ்சம் குறுகியும், ஐந்தாவதாகிய மூலத்தானவாசற்படி எல்லாவற்றை விடக் குறுகியும் இருக்கிறது. இவ்விடம் அமைக்கப்பட் டிருத்தல், முதல் வாசற்படியாகிய அன்ன மய கோசத்தையும், இரண்டாவது வாசற்படியாகிய பிராண மய கோசத்தையும்; மூன்ருவது வாசற்படியாகிய மனோமய கோசத்தையும், நாலாவது வாசற்படியாகிய விஞ்ஞானமய கோசத்தையும், ஐந்தாவது வாசற்குள் ஆனந்தமயகோச த்தையும் கடந்து அங்குள்ள பரசிவலிங்கத்தைக் கண்டு அடைந்தவர்களாகிறோம் என்பதைக் குறிப்பிக்கிறது. இறு தியில் சன்னிதானத்தை அடைந்தவுடன் நாம் அங்குள்ள விக்கிரகத்தைப் பூரண பத்தியுடன் வணங்கல்வேண்டும்.

"மரத்தை மறைத்தது மாமதயானை
மரத்தில் மறைந்தது மாமதயானை
பரத்தை மறைத்தது பார்பஞ்சபூதம்
பரத்தில் மறைந்தது பார்பஞ்சபூதம்".

என்னும் திருவாக்கின்படி ஒருவன் ஓர் யானைவாகனத் தைக் கண்ணுற்று அதன் அவயவாதிகளை உற்றுநோக்கி இதன் துதிக்கை பலமாயிருக்கிறது, காது அகன்று அழ காயிருக்கிறது, என்று கவனிப்பானுயின் அது அவனுக்கு உயிருள்ள யானைபோலவே தோன்றும். அதைவிட்டு இந்த வாகனமானது எந்தமரத்தால் செய்யப்பட்டது, தேக்கா, முதிரையாவெனக் கவனிப்பானுயின் அவன் யானையை மற ந்தவனுகிறுன். அது அவனுக்கு மரமாகவே தோன்றும். அதுபோலவே விக்கிரகத்தைக் கண்டு ஈசுர சொரூபமாக பாவிப்போமாயின் அது ஈசுரவடிவாகவே தோன்றும். அ தைத் தவிர்த்து இந்த விக்கிரகம் செம்பால் செய்யப்பட் டதா அல்லது பித்தளையினுல் செய்யப்பட்டதா, என நினை ப்போமாகில் அது செம்பாகவும், பித்தளையாகவுந்தான் தோன்றும். ஆதலால் ஆலயத்துக்குச் சென்று ஈசுரனை உள்ளன்புடன் வணங்குதலைவிடச் சிறந்தது ஒன்றுமில்லை யென ஏற்படுகிறது. சிவஞான போதத்தும் பன்னிரண்

டாஞ் சூத்திரத்தினிறுதியில், "ஆலயந்தானும் அரனெனத் தொழுமே" எனவும் கூறப்பட்டுள்ளது.

"ஆன்மா ஐக்கியப்படும் மார்க்கத்தில் பொருந்துதல்" என்பது பொருள் என்பதூஉம், ஆன்மா பரமான்மா, சீவான்மா, என இருதிறப்படுமென்பதூஉம், காணவுங் கருதவும் முடியாத முழுமுதற்கடவுள் ஒருவரே பரமான்மாவென்பதூஉம், மும்மல சம்பந்தமாய் பிறப்பிறப்புகளில் கிடந்துழல்வது சீவான்மாவென்பதூஉம், மிகவும் மேலான பரமான்மாவுடன் மிகவும் தாழ்வான சீவான்மாசமனெய்த மாட்டாதென்பதூஉம், சீவான்மாவானது பரமான்மாவிடம் பத்தியைச்செலுத்தி அவரிடமுள்ள பேரின்பசுகத்தை அடையப் பிரயத்தனப்படுகிறதென்பதூஉம், ஈசுரனைத் தெரிந்து வணங்குதற்கு பெறுதற்கரிய இம் மானிடப்பிறவியே சிறந்ததென்பதூஉம், பரமான்மா பரஞானிகளுக்கே அருட்கோலங்கொண்டு காட்சியளிப்பார் என்பதூஉம், ஆரியகண்டத்தி லுள்ளவர்கள் ஏனைய அநாரிய கண்டத்தோரைக் காட்டிலும் அறிவிலும் ஞானத்திலும் மிகவும் சிறந்தவர்களென்பதூஉம், ஆலயங்களுக்குப் போய் விக்கிரக ஆராதனைபுரிதல் வேண்டுமென்பதூஉம், அண்டத்திலுள்ள சகலமும் பிண்டத்திலும் அடங்கியிருக்கின்றன வென்பதூஉம், ஆலயமும், அதில் அமைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு மூர்த்தங்களும் சிலகாரணங்களைக்கொண்டே அமைக்கப்பட்டிருக்கிறதென்பதூஉம், மானிட தேகமெடுத்த ஒவ்வொருவரும் ஆலயங்களுக்குச் சென்று ஈசுரனை மிகுந்த பத்தியுடன் வணங்கவேண்டுமென்பதூஉம், அப்படி வணங்கிவந்தால் பரமான்மாவின் பேரின்பசுகம் சித்தித்தல் சத்தியமென்பதூஉம், நாம் ஒவ்வொருவரும் ஆலயத்திற்குப் போய் ஈசுரனைவணங்கப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறோமென்பதூஉம், ஒருவாறு விளக்கப்பட்டன. ஆதலால் இவ்வாலய வழிபாட்டைவிட கடவுளைக் காண்பதற்கு வேறு வழி ஒன்றும் நல்லதல்ல என்பதை உணர்த்தற்கே சாலவு நன்று என்றார்.

---

3. இல்லற மல்லது நல்லற மன்று.

இல்லறமல்லது - மனையாளோடு கூடிச் செய்யும் இல்லறமல்லாத துறவறமானது, நல்லறமன்று - எளிதிற் செய்யத்தகும் அறமன்றாகும்.

எனவே, இல்லறமல்லதாகிய துறவறமானது பிறன் பழிக்கத்தக்ககூடா வொழுக்கமில்லாதிருத்த லரிதாதலால் இதைப்போல் நல்லறமல்லவாம். ஆதலால்

"அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்ப தில்லாயி னன்று".

என்னுந் திருக்குறளான் உணர்க.

இல்லறமென்பது வீட்டிலிருந்து மனைவியுந் தானும் மனமொத்துச் செய்யுந் தருமம். அதாவது, இல்வாழ்வான், என்பான், பிரமசாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி என்னும் மூன்றாச்சிரமத்தாருக்கும் நோய்க்கு மருந்தும், குளிருக்கு உடையும், பசிக்கு ஆகாரமுங்கொடுத்துக் காப்பாற்றலாம். இம்மூன்று ஆச்சிரமவாசிகளை அவரவ ரொழுக்க வழிகளிலே தப்பாமல்நடத்தவேண்டும். ஆதாரமானவராலே விடப்பட்டவர்க்குப் பாவமொழிய அவர்க்கு ஆதாரமாய் நின்று வேண்டுவன செய்தலாலும், வறுமைப்பட்டவர்க்கு உணவு முதலானவை கொடுத்தலாலும், இறந்தவர்க்கு நீர்க்கடன் முதலானவை செய்து நல்ல கதியை அடைவித்தலாலும், இல்லறமே நல்லறமாகும். பிதிர்க்கும், தெய்வத்திற்கும், விருந்தினர்க்கும், இனத்திற்கும், தனக்கும் ஆகிய இவ்வைவகை வழியினும், தான் பாவத்திற்குப்பயந்து புண்ணியத்தாற் றேடிய பொருளைப் பங்கிட்டுண்ணும் ஒருவன் சந்ததி குறைவுபடாது வளரும். ஒருவனுடைய இல்வாழ்க்கையானது அன்பும் அறனும் உடையதேயானல் மிகவும் நலமாம். ஒருவன் இல்வாழ்க்கையைத் தருமவழியாக நடத்துவானகில் அவன் துறவறத்திற்போய்ப் பெறும்பயன் வேறென்ன விருக்கின்றது. இல்லறத்து வழுவாது வாழ்பவன்

பின்னே தேவனாய்ப் பிறந்து அதன் பயனை நிச்சயமா யநு பவிப்பான்.

இல்லிற் கேற்றாள் இயல்புடை மனையாள்.

இல்லறத்தோன் கற்கவேண்டிய நூல்களைக் கற்று அன்பும் அறனுந்தாங்கி இன்சொற்றவறாது விருந்தினரை யுபசரித்து அருந்தவரை யாதரிக்கவும், பிரமயாகம், தேவ யாகம், பிதுர்யாகம், மானுடயாகம், பூதயாகம் என்னும் ஐவகை வேள்வியுஞ் செய்யவும், தனக்கென வேதாகமங்க ளில் விதித்த தர்மங்களை வரையாதியற்றற்கும் மனதொத்த கற்புடைய மனைவியின் றுணையானன்றி இயலாவாம். இல் வாழ்க்கையானது தர்மமெனும் சரக்கிடும்வண்டி இதைக் காந்தனும் காதலியுமான இருவரான் நற்றொழிலென்னும் நுகத்தடியைப் பற்றி இழுத்தா லன்றி சிறிது தூரமுஞ் செல்லாதாம்.

"தருமமெனும் பண்டமிடுஞ் சகடமா மனைவாழ்க்கைக்
கருமநுகம் பிணித்துமனைக் காதலியுந் தானுமென
இருவராய் முறைசெலுத்தி னெத்துணைத்தூ ரமுஞ்செல்லும்
ஒருவராய்ப் பூண்டிழுப்பி னோரிறையுஞ் செல்லாதால்".

எனக் கூர்ம புராணத்தானும்,

"மருவிய காதன் மனையாளுந் தானும்
இருவராய்ப் பூண்டேர்ப்பி னல்லான்—ஒருவரான்
இல்வாழ்க்கை யென்னு மியல்புடைய வான்சகடஞ்
செல்லாது தெற்றிற்று நின்று".

என அறநெறிச்சாரத்தானு மறிக.

மணமோத்திருத்தல் மனையின்மாட்சி.

உயிரின்றி உடலில்லை, உடலின்றி உயிரில்லை. அது போல மனைவியு மணாளனும் ஒரேவடிவமன்றி வேறன்று. ஆதலால் இவர்கள், மலருந்தேனும், பண்ணும் இசையும், பரிதியும் மதியும், திலமுந் தயிலமும், தீயும் இரும்பும், நீரும் உப்பும், ஆகாயமுங் காற்றும், கண்ணொளியுங் கதி

ரொளியும், சொல்லும் பொருளும்போல் ஒத்திருந்து எவ்வகைக் காரியங்கள் செய்யவுமியலும். இல்லாவிடின் உடலு முயிரும் போராடி யழிந்ததுபோலாகும். இருவரும் மனதொருமித்து வாழ்வாரேல் இவர்கள் வறியவர்களே யாயினும் பெரிய செல்வர்களே என்றெண்ணப்படுவார்கள். கீரியும் பாம்பும்போல் பகைமையுற்றிருப்பார்களே யாயின் எவ்வளவு செல்வந்தர்களே யாயினும் வறியவர்களே; அன்றியும், உயிர்போன சவத்தின்மேலே ஆபரண முதலியவைகளால் அலங்கரித்தலையு மொக்கும்.

நீதிநூல்.

"ஆவியின்றி யுடலமிலை யுடலமின்றி யாவியிலை யதுபோற் பத்தா, தேவியெனு மிருவருஞ்சேர்ந் தோருருவாஞ் செழுமலருந் தேனும் போல, மேவியவ ரிருவருமே நள்ளாது முரண்செய்யல் விளங்கு மெய்யுஞ், சீவனுமொன் றேடொன்று போராடி யழிந்த தொக்குஞ் செப்புங் காலே."

"மணியு மொளி யும்போலாண் மகனுமனை வியும்பொருந்தி வாழு வாரேற், பிணியுறுமா தலரெனினும் பெருஞ்செல்வர் நகுலமும்வெம் பெரும்பாம் பும்போற், றணியாத பகைமையுற்று நன்னாரே லுயிரற்ற சவத்தின் மீது, பணிகண்மிகப் பூட்டியலங் கரித்தலொக்கு மவர்செல்வப் பயன்று னம்மா."

காகமென்னும் பறவையின் இருகண்களுக்கும் ஒரே மணியிருந்து எவ்வண்ணம் அக்கண்களுக்குப் பார்வையைத் தருகின்றதோ அதுபோல் இருவருடைய உடல்களில் ஒரே உயிர் இருத்தல்போல மணமகனுக்கு நேரும் இன்பதுன்பங்கள் மனைவிக்கும் மனைவிக்குநேரும் இன்பதுன்பங்கள் மணமகனுக்கும் பொருந்த நிற்றல்தான் மனையின்மாட்சி.

திருச்சிற்றம்பலக் கோவையார்.

"காகத் திருகண்ணிற் கொன்றே மணிகலந் தாங்கிருவர்
ஆகத்து ளோருயிர் கண்டன மியாமின்றி யாவையுமாம்
ஏகத் தொருவ னிரும்பொழி லம்பல வன்மலையில்
தோகைக்குந் தோன்றற்கு மொன்றாய் வருமின்ப துன்பங்களே".

இல்வாழ்வோனுடைய விதிகள்.

ஒருவன் விருந்தாளியாக வந்தடைந்தால் சந்தோஷித்தல், நல்ல வார்த்தைகளை இனிதாகச்சொல்லல், குளிர்ச்சியாகப் பார்த்தல், வருகவென்று கூறல், பீடத்திலிருந்து எழுதல், அவன் சமீபத்திலிருத்தலுடன் பீடம், கால் கழுவ நீர், அன்னம், மலர்ச்சயனம், இடம், நீர், விளக்கு, எண்ணெய், தாம்பூலம், இவ் வொன்பதையும் கொடுத்தலாம். அன்றி, பரதாரகமனஞ்செய்தல், நிலைதவறிநடத்தல், பொய்வார்த்தை பேசல், கோபித்தல், பகைத்தல், கோளுடன் தகாதவார்த்தைகளைச் சொல்லல், மாயமும் வஞ்சகமுஞ்செய்தல், இவைகளை நீக்கி தினமும் ஸ்நானஞ் செய்தல், சந்தியாவந்தனை, மந்திரஜெபம், அக்கினி காரியம், தோத்திரம், பூசை, அதிதிபூசை, பிதுர்த்தர்ப்பணம் இவைகளைச் செய்வார்கள். மந்திரம், தன்னை அயலோர் அவமதித்தல், மாதரைக்கலத்தல், தனது வஞ்சனை, தனது ஜீவகாலம், பிறந்தநாள், வீட்டிலுள்ள குற்றங்கள், தனது செல்வம், மனையாட்டியின் குணங்கள் இவைகளை வெளியிற் சொல்லார்கள். தனது கடன், கடனை ஒழிக்கும்வகை, செலவு, பெண்ணை மணஞ்செய்து கொடுத்தல், தனது நடக்கை, தனதுவமிசத்திற் செய்த பாவம், பிறரது நல்லகுணங்கள் ஆகிய இவைகளை நல்லோரிடத்திற் சொல்லுவார்கள். ஆகிய இவைகள் இல்லறத்தார்க்குரிய மாண்புகளாம். இல்லறத்திலிருந்து முத்தி பெற்றோர்கள் ஒவ்வொரு சமயத்திலும் பற்பல பேர்களாம்.

இல்லறத்தைவிட்டுத் துறவறநிலையை யடைந்து விதித்திருக்கும் விதியை அநுசரித்து நடப்பது மகாகஷ்டம் மகாகஷ்டம். இதை நோக்கியன்றோ பட்டினத்தடிகளும்,

"மலர்தலை யுலகத்துப் பலபல மாக்கள்
மக்களை மனைவியை யொக்கலை யொரீஇ
மனையும் பிறவுந் துறந்து நினைவரும்
காடு மலையும் புக்குக் கோடையில்

கைம்மே னிமிர்த்துக் காலொன் றுமுடக்கி
ஐவகை நெருப்பி னழுவத்து நின்று
மாரி நாளினும் வார்பனி நாளினும்
நீரிடை மூழ்கி நெடிது கிடந்தும்
சடையைப் புனைந்துந் தலைமயிர்ப் பறித்தும்
உடையைத் துறந்து முண்ணு துழன்றும்
காயுங் கிழங்குங் காற்றுதிர் சருகும்
வாயுவு நீரும் வந்தன வருந்தியும்
கனரிலுங் கல்லிலுங் கண்படை கொண்டும்
தளர்வுறு மியாக்கையைத் தளர்வித் தாங்கவர்
அம்மை முத்தி யடைவதற் காகத்
தம்மைத் தாமே சாலவு மொறுப்பர்."

எனக் கூறினர்.

என்ன கஷ்டம் பாருங்கள். துறவற நிலையார்க்கென விதித்தவைகளில் ஒன்றேனும் தவறி ஒருவர் நடப்பாராயின் அவர்களுக்கு எவ்வளவோ பாவஞ்சொல்லி யிருக்கிறதே, இல்லறத்தார்கள் தமக்கென விதித்தவைகளில் சற்றுத் தவறி நடப்பின் பிராயச்சித்தங்களினல் அகற்றிக்கொள்ளலாம். துறந்தவன் தருமஞ்செய்யப் புகின் முடியுமா? இல்லறத்தோன் எவ்வளவோ தருமங்களையும் மிகவும் இலேசாகத்தானே செய்யலாம். ஆதலால்தான் இல்லற மல்லாத துறவறமானது நல்லறமன்று என்றூர்.

சரிதமுஞ் சிறிது சாற்றுவம் யாமே.

பூவுலகிற் சிறந்த கடகபுரி யென்னும் பட்டணத்தில் குச்சகரென்னும் பெயரையுடைய முனிவர் ஒருவரிருந்தனர். அவருக்கு ஒரு புதல்வர். அக்குமாரர் வேதங்களை ஒதியுணர்ந்தவர், கவுசிகரென்னும் பெயரையுடையவர், எவராலும் எல்லைகாணமுடியாத பிறவிப் பெருங்கடலைக் கடக்கு முறைமையால் சிவபெருமானைக் குறித்துத் தவஞ்செய்யும் பொருட்டு அங்குள்ள ஓர் தடாகக்கரையை யடைந்து, பசுக்கள் தினவுக்கு உராய்ந்து கொள்ளுங் குற்றியைப்போல்

அசைவில்லாமல் சுவாசத்தை யடக்கி உலகமனைத்தையும் பித்தாகக் கருதிக் கெடாத பேரின்பக்கடலில் மூழ்கிச் சிவபெருமானது ஸ்ரீ பஞ்சாட்சரத்தை உச்சரித்துக் கொண்டு சித்திரப்பதுமைபோல மவுனமுற்று ஊணுமுறக்கமு மொழிந்து குற்றமறத் தவஞ்செய்து கொண்டிருந்தார். மரைகடமைமுதலிய மிருகங்கள் தத்தமது உடம்பிலுள்ள தினவு நீங்கக்கருதி அவரது தேகத்தில் உராய்ந்துகொண்டு போகும். இவ்வண்ணம் அருமையாகத் தவஞ்செய்துகொண்டிருக்கையில் ஸ்ரீமகாவிஷ்ணுவானவர் ஆகாய மார்க்கத்தில் வந்து கவுச்சிகமுனிவருடைய த்வத்தைப் புகழ்ந்து அவர் தேகத்தைத் தடவி, ஐய! உனக்கு இதுமுதல் மிருககண்டேயமுனிவன் என்னும் பெயருண்டாகக் கடவதென்றும் சிவபெருமானது பூரண கடாக்ஷம் பெறுகவென்றும் உன்னுடைய பாவங்களெல்லா மொழியக்கடவதென்றும் வரங்கொடுத்தருளி மறைந்தனர்.

இவ் வரத்தைப்பெற்ற மிருககண்டேயர் தமது கிருகத்தை யடைந்து தந்தையை வணங்கி தவத்தில்நடந்த விஷயங்களைச் சொல்லினர். அதுகேட்ட தந்தையாகிய குச்சக முனிவர் மகிழ்ந்து புத்திரனைத் தழுவிக்கொண்டு, அப்பா புதல்வனே! உனக்குக் கூறவேண்டிய தொன்றுளது அது யாதென்னில், வேதத்தில் விதிக்கப்பட்டது, யாவராலும் நீக்கத்தகாதது, நம்போன்ற வேதியர்கள் அநுசரிக்கத்தக்கது. அது நான்கு பகுப்பாயுள்ளது. முதல் பிரமசரியம், இரண்டாவது கிரகஸ்தம், மூன்றாவது வானப்பிரஸ்தம், நான்காவது சந்நியாசம் என்பனவாம். இந்நான்கனுள் நீ இதுவரையிலும் பிரமசரிய நிலையில் நின்றனை. பின்னுள்ள வானப்பிரஸ்தம் சந்நியாசம் என்னும் இரண்டு நிலையும் நீ பின்னே அநுசரிக்க வேண்டியது. மத்தியில் இப்போது கைக்கொள்ளவேண்டியது கிரகஸ்தம் என்னும் ஆச்சிரமம் ஆதலால் நீ அதைப் பெறக்கடவது என்றார். அதைக் கேட்ட மிருககண்டேயர் தந்தையே! உமது புதல்வனாகிய

அடியேன் கடைத்தேற மார்க்கத்தைப் பெறக்கூடாதெ ன்று எண்ணி தீமையைப் பற்றவேண்டுமென்று சொல்லு தல் முறையோவென்று பின்னுஞ் சொல்லுவார்.

பிதாவே! முன்னர் எடுத்த ஜனனங்களிற் கட்டுண்ட பாசபந்தத்தை இந்த ஜன்மத்தோடு விடவேண்டிய யான் இன்னும் பந்தப்படுவேனேயாயின் எவ்வாறு சிவபெருமானை அடைவேன். தவத்தினாலல்லாமல் பொய்யாகிய இல்லொ ழுக்கத்தை மேற்கொண்டு இருவினைகளை நீக்குவது உடம் பழுக்கைக் கழுவுதற்கு நல்லநீர் இருக்கச் சேற்றுநீரைக் கொள்ளுந் தன்மையல்லவோ? உலகத்திற் பொருந்திய அளவற்ற பெரிய பாவங்களையன்றோ பிரமன் பெண்ணுரு வாகப் படைத்தனன். தாங்களதனை யறிவீர்களே, ஐயோ! அப்பெண்களை மனதில் நினைப்பதனா லுண்டாகின்ற பாவ மானது எழுபிறப்பினும் நீங்கத்தக்கதா? ஐம்புலன்களா கிய பூதக்கூட்டங்கள்தான் என்னை இழுக்கின்றதே அவை போதாதென்று பெண்களென்னும் பேய்களும் என்னைப் பிடிக்கவேண்டும். பெண் விருப்பமானது அநேககாலம் துன்பத்தில் மூழ்கச்செய்து பின்பு நரகத்தில் புகச்செய் யுமே. சொல்வதொன்றும், நினைப்பதொன்றும், செய்வ தொன்றுமாகிய கொடிய பெண்களது மயக்கமுற்றவர்க ளல்லவோ ஜனனமரண சாகரத்தில் வீழ்ந்து வருந்துபவர் கள். பிரமன் தான்படைத்த பெண்ணாகிய திலோத்தமையை இச்சித்து நான்குமுகங்களை யுடையவனாயினனே, இந்திரன் அகலிகையை இச்சித்து உடம்பெல்லாம் பெண்குறியடைந் தானே, எத்தனையோ முனிவர்களும் தேவர்களும் பெண்க ளாற் பட்டபாடும் கெட்டகேடும் உமக்குத் தெரியாதா, ஐயோ அடியேன் ஒருபோதும் அந்த மாதர்மயக்கத்திலழுந் தேன் இல்லொழுக்கத்தைவிரும்பேன் என்று சொல்லினார்.

அதுகேட்ட தந்தை தவத்திற் சிறந்த புதல்வனே! நீ திருமகள்போன்ற ஒரு பெண்ணுக்குத் திருமாங்கலியந் தரித்து அவளைப் புணர்ந்து நமது குலமுறை ஓங்கும்படி

புதல்வர்களைப் பெற்றபின்னன்றோ தவத்தைச்செய்து முத்தியை யடையவேண்டும். இவ் வுலகத்திலுள்ள அறிவில்லாத மனிதர்களைப்போல காமவின்பத்தை யநுபவித்து அதில் மூழ்கி இருப்பதற்கா உன்னைக் கலியாணஞ் செய்துகொள்ளச் சொல்வது, அதற்கல்லவே, காலஞ்சென்ற பிதுர்களுடைய துன்பமும் அவர்கள் நரகமடைதலையும் நீக்குகின்ற புதல்வர்களைப் பெறுவதற்கன்றோ, புத்திரர்களென்று கூறப்பட்ட சொல்லிற்குள்ள பொருளை மறந்தனை போலும்.

"பத்திசெய் சமயபேதப் பகுதிக்குப் பொதுவாய்நிற்கும்
புத்தெனு நரகைநீக்கிப் பொருவறு வீட்டைநல்கும்
உத்தம வனந்தஞான வுருவெடுத் திலகாநிற்கும்
சத்திய மிகத்திற்பேறு தருவதில் வாழ்க்கையென்பார்."

என மேலோர்கள் கூறும் அரிய பொருளின் பாங்கினை நீ யறியாயோ? மகனே நீ இப்பொழுதே தவநெறியிலொழுகச் சிந்தித்தல் மலையின்மேலிருக்க விரும்புவோர்கள் படியின்வழி யேறாது அதன் உச்சியை யடையும்பொருட்டு அதன்சாரலிலிருந்து பாயுந்தன்மைக் கொப்பாயிருக்கிறது. சுழற்சியைத் தருகின்ற பிறவி யென்னுந் துன்பக்கடலைவிட்டு நீங்கவேண்டுமாயினும், கழிக்கவேண்டிய நாள்களைக் கழித்தல்லாமல் விரைவாகத் துறக்கக்கூடுமோ? பழைய முறைப்படி நமது பூர்வீகர்களைப்போல நீயும் இல்லறவொழுக்கத்தைக் கடைப்பிடித்தே தீரவேண்டும்.

"தேவரு முனிவர் தாமுஞ் செங்கண்மா லயனு மற்றும்
யாவரு மடந்தை மாரோ டில்லறத் தொழுகுந் தன்மை
மேவரப் பணித்தா னன்றே விமலையோ டொருதி மேனாள்
தாவரும் புவனமாதி சராசரம் பயந்த நாதன்."

என்றபடி சராசரமாகிய அநேக உலகங்களை சிவசத்தியுடன் கலந்து பெற்றருளிய சிவபெருமான் தேவர்களும் முனிவர்களும் திருமாலும்பிரமனும் மற்றவர்களும் தங்கள் மனைவிமார்களுடனிருந்து இல்லற நடத்தவேண்டுமென்று

தாமருளிய வேதாகமங்களில் கட்டளையிட் டிருக்கின்ரூரே. அந்தவிதியை மறுக்காதே, சந்ததியுண்டாகவேண்டுமென்று எண்ணும் எனது வார்த்தையை வெறுக்காதே, உலகத்தின் செய்கையை விலக்காதே, விரோதமாகத் தடுக்காதே, சிறிதும் எதிர்மொழி கூருதே, எமது முன்னேர்களைத் துறந்துவிடாதே, முனிவர்களிற் சிறந்த வசிட்டர் தமது தர்மபத்தினியாகிய அருந்ததியை விட்டு நீங்காமலிருந்தும் தவவிரதத்தை மேற்கொண்டு நின்றனரேயன்றி பழியடைந்தாரா? பிறவியை ஒழிக்க எண்ணும் பெரியோர்கள் விருப்பு வெறுப்புக்களை மாத்திரம் விட்டிருப்பார்களாயின் மாதர்களுடன் புணர்ந்தாலும், தவத்தைச் செய்தாலும் மனவுணர்ச்சி வேறுபடுமோ? விதிப்படி விவாகஞ் செய்துகொண்ட மனைவியை யுடையவனுக்குத் தானமுண்டாகும், அதனுல் தவமும் சொர்க்கமும் பூமியும் உண்டாகும், துன்பமென்பதே இல்லை. அவர்களுக்கு அருமையானது ஒன்றுமில்லை. தமது கணவர்களைத் தெய்வங்களைப்போலத் துதிக்கின்ற கற்பினையுடைய மாதர்களது சத்தியவசனத்துக்கு இவ்வுலகத்துள்ள தெய்வங்களும் பெரிய மழையும் அடங்கி நடக்குமாயின் அம்மாதர்களுக்குப் புருஷர்களும் ஒப்பாகமாட்டார்கள். மாதர்களுடன் இன்பமடைந்திருக்கின்ற இல்லறத்தை முதலில் நடத்ாதவனுய் தவமார்க்கத்திற் பிரவேசிப்பையாயின் காமமாகிய விஷம்வந்து சேரும். அதனைப் பிரமதேவன்வந்து தடுத்தாலும் தடுக்க முடியுமோ, துறவு பூண்டவர்கள் விரும்புகின்ற உணவைக் கொடுத்து பிதுர்க்கள் விரும்புகின்ற கடமைகளைச் செய்து பல தருமங்களையு மியற்றி விருந்தினரை யுபசரிக்கு முறைமையே யல்லாமல் உலகத்தில் பிறந்த தன்மையினு லுண்டாகும் பேருதவியாதோ.

"இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றி னின்ற துணை"

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லுனென்ருங்
கைம்புலத்தா றோம்ப றலை"

"அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்"

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும்"

என்னும் வேதவாக்கியங்களை மறந்தனையோ.

மகனே! முதலில் நல்ல தவமுறையாகிய இல்லறத்தினை நடத்திப் பின்பு சுற்றத்தினர் நீங்கும்படி துறக்கின்ற துறவே சிறந்த துறவு. அவ்வாறு செய்வாயாயின் உனக்குப் பழிகள் சம்பவியா? அதனைத் தடுத்துக் கூறாதே நம்மீது ஆணையென்றார். என்று இப்படியாகக் குச்சகமுனிவர் கூறலும் மிருககண்டேயமுனிவர் அவைகளை யுணர்ந்து, இவர் முதலிலேயே வேதமுதலியவை கூறுகின்ற துணிபொருளென்றும், சிவபெருமானது கட்டளையுமென்று கூறினார். இனி யாது செய்வதென்று சிந்தித்து, அன்புள்ள தங்கள் பெரியோர்கள் செல்வத்தை யிழந்து சமுத்திரத்தில் வீழ்வாயென்று சொல்லினும் விருப்பத்தோடு அதனைச் செய்வது புத்திரர்கள் கடமையாகும். அன்றியும் தந்தை சொல்லை மறுப்பவர்கள், தாயின் வார்த்தையைத் தடுப்பவர்கள், ஆசாரியரது கட்டளையைக் கடந்தவர்கள், வேதநெறியை மாற்றினவர்கள் நரகத்திலடைவார்களே.

கந்தபுராணம்.

"தந்தைசொன் மறுப்பவர்க டாயுரை தடுப்போர்
அந்தமறு தேசிகர்த மாணையை யிகந்தோர்
வந்தனைசெய் வேதநெறி மாற்றினர்கண் மாறாச்
செந்தழல வாயநிர யத்தினிடை சேர்வார்".

என்றும் பெரியோர்கள் கூறியிருக்கின்றார்களே ஆதலால் தடுப்பது முறையன்றென்று துணிந்து தந்தையின் பாதங்களை வணங்கி, ஐய! கோபங்கொள்ளாதீர் தேவரீர் கட்டளைப்படி நிற்கின்றேன். ஆனாலும் உம்மிடத்தில் சொல்லவேண்டிய தொன்றுண்டு. அதாவது யாதெனில், கண

வனது சொல்லை பேற்று நடவாத மனைவியுடன் கூடிவாழ்வ திலும் நரகத்தில் விழுவதே நலமாகும். அவளுடன் கூடி வாழ்கின்ற புருஷர்களுக்கு வேறே யொரு இயமனும் பிணி யுமுண்டோ. எனது வார்த்தையில் கொஞ்சமுந் தவறி நட வாத நற்குணமமைந்த ஒரு பெண்ணிருப்பாளாயின் அவளை அக்கினி சாக்ஷியாக நான் மணம்புரிந்து கொள்ளுவேன் என்று கூறினர். அதுகேட்ட குச்சகமுனிவர், மனங்களித் துக் கூறுவார்.

புதல்வனே! எனது வார்த்தையைத் தடுக்காமல் உன் மனதிற் கொண்டனை, அதனால் யானும் உய்ந்தேன், எனது சுற்றமுமுய்ந்தன, உன் தாயும் உய்ந்தாள், தவங்களும் உய் ந்தன, விண்ணுலகமும் மண்ணுலகமும் உய்ந்தன, இந்திர னும் உய்ந்தான். ஆதலால் நீ விரும்பியது எதுவோ அதைச் சொல்க. நீ சொல்லியபடி எத்தன்மைகளும் நிறைந்த சிறி துங் குற்றமில்லாத ஒரு கன்னிகையை நிலவுலகத்தில் தே டிக்கொண்டு வந்து உன்னிடத்திற் சேர்ப்பேன். அதனைச் செய்யாதொழியின் அபரபக்ஷத்துச் சந்திரனைப்போல என து தவங்குறைந்து ஈனனாவேனென்றனர். அதைக்கேட்ட மிருககண்டுயே முனிவர் உள்ள மகிழ்ந்து உரைப்பதாயினர்.

தந்தாய்! அடியேனுக்காகத் தாம் பார்க்குங் கன்னி கை, தந்தைதாயிறக்கப் பெற்றவளும், மூத்தவரில்லாதவ ளும், சகோதரிக ளில்லாதவளும், ஆண்மக்களுடன் பிற வாதவளும், உடன்பிறந்தவர்க ளிறக்கப்பெற்றவளும், பந் துகளில்லாதவளும், செல்வமில்லாதவளும், நல்ல குடியிற் பிறவாதவளும், பிணிகள்மிக்க தாய்தந்தைகளிடத்திற் பிற ந்தவளும், சிவபெருமான் முதலிய தேவர்கள் பெயரைக் கொள்ளாமல் மிருகத்தின்பெயரைக் கொண்டவளும், அற்ப சமயத்திற் பிறந்தவளும், நோய், ஊமை, முடம், செவிடு இக்குற்றங்களை யுடையவளும், அயல்வீட்டிற் செல்கின்ற வளும், வேசியைப்போல் விழிக்கின்றவளும், தலைவாயிலில் நின்று தெருவிற்போகும் புருடர்களைக் காம விச்சையாற்

பார்க்கின்றவளும், அழகுண்டாக அலங்கரித்துக் கொள்ப வளும், பேருண்டியுடையவளும், பெருந்தூக்க முடையவ ளும், எனக்குமேல் வயது முதிர்ந்தவளும், ஒருமைப்பட்ட கோத்திரமுடையவளும், உயரமானவளும், குள்ளமானவ ளும், பருத்த அல்லது சிறுத்த தேகமுடையவளும், இவை யன்றி கறுப்பு, பொன்போல் அழகு, பசலே, வெண்மை, சிவப்பு ஆன இவ்வடிவமுடையவள், வெட்கமில்லாதவள், சதா போக இச்சையுடையவள், சிரிப்புடையவள், வலிமை யில்லாதவள், மிக்க வலிமையுடையவள், தாய்தந்தைகளின் உத்தரவை மீறுபவள், முன்கோபமுடையவள், கூத்து முத லிய வேடிக்கை பார்ப்பதில் பிரியமுடையவள், சிவபெருமா னிடத்து அன்பில்லாதவள், பெரியோர்களைப் பழிக்கின்ற வள், ஜீவகாருணிய மில்லாதவள், குலவொழுக்கத்தில் நில் லாதவள், கற்பில்லாள், நல்லகுணமில்லாள், ஆசாரியனே மனிதனுக நினைப்பவள், பத்துவயதுக்கு மேற்பட்டவள், ருதுவாகும் பருவமுடையவள், புருடனுக்கொத்த குணமில் லாள், அஞ்சுதலில்லாள், இடிபோற் பேசுகின்றவள், செரு வமுடையவள், மடமும் பயிர்ப்புமில்லாள், பிறவிக்குருடி, பிறந்தபின் குருடி, பூவிழுந்தகண்ணி, படலமறைத்தகண் ணி, நிதானித்து விழிக்கின்ற கண்ணி, சாய்வான பார்வைக் கண்ணி, பூனைக்கண்ணி, சிறுகண்ணி, பேயைப்போல் சுழல் கின்ற பெருத்தசிவத்தகண்ணி, அன்றி, பம்பைத்தலைமயிர், நரைத்தகூந்தல், அழுக்குக்கூந்தல், அதிககூந்தல், குறைந்த கூந்தல், விரிந்த கூந்தல், செம்பட்டமயிர், தாழ்ந்த கூந்தல், பிளவுபட்ட கூந்தல், உரத்தகுரல், பெரியமூக்கு, நெருங்கிய புருவம், குறுகியகாது, உயர்ந்த பற்கள், கோணற்கழுத்து, பொலிவிழந்தமுகம், தேமல்படராத மார்பு, பெரிய இடை, கல்லைப்போல் கனத்தவயிறு, வாய், உள்ளங்கை, நகம், உள்ளங்கால் இவைகள் சிவப்பில்லாமை, கால்களில் ரோ மம், அன்னம்போல் நடையில்லாமை, கால்விரல்கள் பூமி யிற்படாமை இப்படிப்பட்ட தன்மையையுடைய பெண்ணை ஒருவன் மணஞ்செய்துகொள்ளப் படாததென்று சாஸ்தி

ரங்கள் கூறுகின்றன. ஆதலால் இப்படி யில்லாமல் சர்வ லட்சணங்களும் வாய்ந்திருக்கின்ற பெண் கிடைத்தால் மணஞ்செய்ய விரும்புவேன். ஆதலால் அப்படிப்பட்ட கன்னிகையைத் தேடிவருவீராக என்று கூறினர்.

இவ்வாறு தனது புத்திரராகிய மிருககண்டுயர் சொல்லியதைக்கேட்ட தந்தையாகிய குச்சகமுனிவர் சந்தோஷங் கொண்டவராய், மைந்த! உன் கருத்தின்படி நல்ல அவயவ லட்சணமமைந்த ஓர் கன்னிகையைத் தேடிக்கொண்டு வருகிறேனென்று சோழதேயத்தில் அகாமயமென்னும் வனத்தில் வசிக்கின்ற உசத்திய முனிவரிடத்தில் முன்சொன்ன நற்குணங்களமைந்த கன்னிகை யிருக்கிறுளென்று கேள்வியுற்று அவரிடத்தில் வந்து தனது குமாரருக்கு அப்பெண்ணைக் கேட்டனர். அவரும் கொடுக்கிறேனென்று சம்மதிக்க, ஒருநாள் விருத்தையென்னும் பெயரையுடைய அக்கன்னிகை தோழிப்.பெண்களுடன் தடாகமடைந்து ஸ்நானஞ்செய்து திரும்பிவருகையில் ஓர் மதயானை எதிரில்வர அதைக்கண்டு பயந்து ஓடி ஒரு பாழுங்கிணற்றில் விழுந்து இறந்தனள். இது சங்கதி தோழியர்களால் மங்கலை யென்னும் தாயும் தந்தையும் மற்றுள்ளவர்களும் கேட்டு வருந்தி அழுது தேடிவந்து புத்திரியைக் கண்டெடுத்து துக்கப்படுகையில், குச்சகமுனிவர் அவர்களுடைய அழுகையை நிறுத்தி கன்னிகையின் உயிரை மீட்டுத் தருகிறேனென்று அவளுடம்பைத் தயிலத்தோணியி லிட்டுவைத்து ஒரு தடாகத்திலிறங்கி இயமனை நோக்கித் தவஞ்செய்கையில் அந்த யானை அவரிடம்வந்து அவரை எடுத்துத் தன் முதுகிலேற்றிக்கொண்டு நெடுந்தூரத்திற் சென்றது.

அப்பொழுது முனிவர் அந்த யானையின் வரலாற்றைத் தமது ஞானத்தினுல்தெரிந்து தனது ஒருநாளைய தவத்தை அதற்குக் கொடுத்தனர். அதனுல் யானை தேவ வுருவம் பெற்று சொர்க்கலோகத்தை யடைந்தது. (இந்த யானையின் விருத்தாந்தத்தை "ஈயார்தேட்டைத் தீயார்கொள்வர்"

என்னும் வாக்கியத்திற்கு எழுதிய சரிதத்திற்காண்க.) அச்சமயத்தில் இயமதருமராஜன் முனிவர் முன்தோன்றி தவத்திற்கிரங்கி அவர் விரும்பியவண்ணம் விருத்தையை எழுப்பித் தந்தனன். இதைக்கண்ட தாய்தந்தையர்களாதியோர் மனமுவந்து குச்சகமுனிவர் புதல்வராகிய மிருககண்டூய முனிவரை வரவழைத்து அவருக்கு அக் கன்னிகையை மணம்புரிவித்தனர். அவர் தமது பத்தினியுடன் இல்லறத்தை இனிதாக நடத்தி மிருகண்டு என்னும் முனிவரைப் பெற்றுப் பிறகு தவத்திற் சென்றனர். இந்த மிருகண்டு முனிவர் தவச்சிரேஷ்டராய், முற்கல முனிவர் புத்திரியாகிய மருத்துவதி யென்பவளை மணம்புரிந்து மார்க்கண்டேய முனிவரைப் பெற்றனர். அவர் சிவகிருபையால் எமபயமொழிந்து நித்தியராய் வாழ்ந்துகொண்டிருக்கிறார். இவ்வளவும் இல்லறத்தை இனிது நடத்தின காரணத்தினலல்லவோ நன்மையாயிற்று.

---

4. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.

ஈயார் = கொடாதவருடைய, தேட்டை = சம்பாத்தியத்தை, தீயார் = கள்வர் முதலிய தீயவர்கள், கொள்வர் = அபகரிப்பார்கள்.

அதாவது, தாமுமுண்ணாது பிறர்க்குங் கொடாதவர்களுடைய பொருளைக் கள்வர், கொள்ளைக்காரர், கொடுங்கோன் மன்னர் முதலியோரே கவர்ந்து பறித்துக்கொண்டு போவார்கள் என்பதாம்.

உலகில் பொருள் சம்பாதிப்பவர்கள் அப்பொருளை இரப்பவர்க்கீந்து அதனலாகிய பயனை அநுபவிக்கவேண்டும். அப்படியல்லாமல் ஒரு சிறிய தருமமேனும் செய்யாமலும், இரப்போர்கள் வந்து தம்மைப் புகழ்ந்து பேசிக் கேட்பின் அதைப் பொருட்டு செய்யாமலும், கிருபையென்பது கொஞ்சமுங் கொள்ளாது தம்மெல்லையைக் கடக்கத்

தாரத்தியும், சுற்றத்தினரைக் காவாதும் இருக்கின்ற பேயர்கள் செல்வர்கள் ஆவார்களா? அந்தோ,

பட்டினத்தடிகள்.

"பிறக்கும் பொழுது கொடுவந்த தில்லை பிறந்துமண்மேல்
இறக்கும் பொழுது கொடுபோவ தில்லை யிடைநடுவே
குறிக்கு மிச்செல்வஞ் சிவன்றந்த தென்று கொடுக்கறியா
திறக்குங் குலாமருக் கென்சொல்லு வேன்கச்சி யேகம்பனே".

என்றபடி உலோபிகள் தாங்கள் தாயார் வயிற்றிலிருந்து பூமியிற் பிறக்கும்பொழுது ஏதாவது கொண்டுவந்தார்களு மில்லை; இறக்கும்பொழுது கொண்டு போவார்களுமில்லை. இவர்கள் உலகில் இருக்குங்காலத்தில் தாங்கள் பெற்ற செல்வம் ஈஸ்வரன் கொடுத்தான் என்றும் அவற்றை ஏழைகளுக்குக் கொடுத்து அவர்கள் பசியை யகற்றுச் சந்தோஷித்திருத்தலே நலமென்றும் எண்ணுமற் போகின்றனர்களே அவர்களடையுங் கதியை என்னவென்று சொல்கின்றது. இவர்களுக்குச் செல்வம் இருந்தாலுமென்ன? ஒழிந்தாலுமென்ன? "ஈத்துண்ணார் செல்வமு நல்கூர்ந்தாரின்னலமும் பூத்தலிற் பூவாமை நன்று" என்றல்லவோ நீதிவாக்கிய மெழுந்தது. இதைப்பற்றி யல்லவா, "ஈயாத புல்லிருந்தென்ன போயென்ன வெட்டிமரம், காயாதிருந்தென்ன காய்த்துப் பலனென்ன" என்றார் படிக்காசுத் தம்பிரானும்.

பொருளொன்றினால் இவ்வுலக நன்மையெல்லா முண்டாகுமென்று தெரிந்து அதனை மிகவும் அருமையாகச் சம்பாதித்துப் பிறனு பிறருக்குக் கொடாது உலோபத்துவஞ் செய்து அவ் வாசைமயக்கத்தில் ஆடும்பாவிகள் அதிகயான பிறவியில் வருந்துவார்கள். அல்லாமலும், பிறருக்குக் கொடுத்தலையும், தான் அநுபவித்தலையும், அறிந்து செய்யாத லோபகுண மிக்க மனமுடையவர் சேர்த்து வைத்த மிகுந்த ஐஸ்வரியமானது, தேனீக்கள் தாம் வருந்திக்கொணர்ந்த தேனைத் தாமுங் குடியாமல் பிறருக்குங் கொடுக்க யன

யில்லாமல் பாதுகாத்திருக்கையில் வேடர்கள் அவைகளை வருத்திக் கொன்று அத்தேனைக்கொண்டு போதல்போல் கள்ளர்களாலும், துஷ்டர்களாலும், பகைவர்களாலும், அரசர்களாலும் வலியவர்களாலும் கொண்டுபோகப்படும். ஒருவன் தான் சம்பாதித்த பணத்தைத் தானும் அநுபவியான், மதிப்பையும் நிலைபெறச்செய்யான், கீர்த்தியையுஞ் சம்பாதியான், உறவினரது துன்பத்தையும் போக்கான், கைம்மாறு கருதாமல் தானமுஞ் செய்யான், இவ்வாறு செல்வத்தைக் காவல்செய்து வைத்திருப்பானேயானால் அவன் அடியோடு ஐயோ அச்செல்வத்தை இழந்தானென்று அறிவுடையோர்களாலே நினைக்கப்பட்டவனாவான்.

நாலடியார்.

"உண்ணா னொளிநிறா னோங்குபுகழ் செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான்—கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ
இழந்தானென் றெண்ணப் படும்".

என்றதனா லறிக.

தாமுடைய பொருளைக் கொடாது வைத்துப் பின்னை இழந்துவிடும் அருளில்லாதவர்கள், வறியவர்க்கு வேண்டிய பொருள்களைக் கொடுத்து அவர் மகிழ்தலினால் அருளுடையாரடையும் மகிழ்ச்சியைக் கண்டறியார்களோ? பொருளின் குறைவை நிறைக்கவேண்டி இரந்தவர்க்குக் கொடாமல் தாமே தனித்தவராகி உண்ணுதல் ஒருவருக்கு நிச்சயமாகப் பிறரிடத்தே போய் இரத்தலினும் துன்பஞ் செய்வதாம். என்பனவற்றை,

"ஈத்துவக்கு மின்ப மறியார்கொ றாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்"

"இரத்தலி னின்னாது மன்ற நிரப்பிய
தாமே தமிய ருணல்"

என்னுந் திருக்குறள்களா லறிக.

மணிமேகலை.

"ஆற்றுநர்க் களிப்போ ரறவிலை பகர்வோர்
ஆற்ரு மாக்க ளரும்பசி களைவோர்
மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை
மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே"

எனவும்,

"இளமையு நில்லா யாக்கையு நில்லா
வளவிய வான்பெருஞ் செல்வமு் நில்லா
புத்தே ளுலகம் புதல்வருந் தாரார்
மிக்க வறமே விழுத்துணை யாவது
தானஞ் செய்யென".

எனவும் கூறியவற்றை யுணர்க.

கையில் திரவியம் பெற்ற பொழுதே தேவாலயத்தின் தர்ம கயிங்கரியத்துக்கும், புராணங்களைக் கேட்பதற்கும், இரப்பவர்களுக்கீதற்கும் உபயோகப்படுத்துபவர்கள் எவர் களோ அவர்கள் இயமதர்மனது தண்டத்துக்குத் தப்புவார் கள். இரப்பவன் புவியிலீனன், அவனுக்கில்லையென்பவன், அவனிலு மீனன்.

"நம்ப னடியவர்க்கு நல்காத் திரவியங்கள்
பம்புக்காம் பேய்க்காம் பரத்தையர்க்காம்—வம்புக்காம்
கொள்ளைக்காங் கள்ளுக்காங் கோவுக்காஞ் சாவுக்காங்
கள்ளர்க்காந் தீக்காகுங் காண்".

ஆதலால் ஒருவன் சம்பாதித்த பொருளை நல்வழியிற் செலவிட்டு மகிழ்தலே மேன்மையுடைத்து.

கலிங்கதேசத்திலுள்ள அரிபுரம் என்னும் ஒருநகரில் தேவதத்த னென்கின்ற வணிகன் பெற்ற தருமதத்தனென் பவன் ஒருவன் இருந்தான். அவன் யாருக்கும் ஒரு காசும் கொடாத உலுத்தன், மகாபாவி, அந்த உலுத்தனைப்போல் எவ்வுலகத்திலும் ஒருவரு மிரார்கள். அப்படியிருக்க, ஒரு தினம் இவன் வீட்டுத் தெருத்திண்ணையில் ஒருவன் தாடி

மீசை யுடையனாய் சடைவளர்த்து காவியுடை யுடுத்து வந்து உட்கார்ந்திருந்தான். பேராசைப் பேயன் இவனைக் கண்டு நீர் யார் உமக்கிவ்விடத்தி லென்னவேலை எழுந்து போம். ஏமாந்தால் ஏதாவது கொள்ளையிட வந்தீரோ எழுந்திரும் என்று அதட்டிச் சொல்லினான். அதைக் கேட்ட வேடதாரி, அட பயித்தியக்காரா நீ எவ்வளவு பணங்கேட்டாலும் நான் கொடுக்கச் சித்தமாயிருக்கிறேன் என்னையா திருடனென்கிறாய், நீ மிகவும் நல்லவனென்றும் அநேக பணங்களைப் பிறரால் மோசம் போயிருக்கிறா யென்றும் கைலாசபதி உன்மேல் தயவுவைத்து என்னை அநுப்பி உனக்கு வேண்டிய பணங்கொடுத்து வரும்படிச் சொல்லியிருக்கிறார். அதற்காகத்தான் நான் வந்திருக்கிறே னென்றான். அப்படியானால் சுவாமி! சந்தோஷம் அதற்கு நான் செய்ய வேண்டிய தென்னவென்றான்.

இந்த வேடதாரி, அப்பா! ஒருவராகனெடை பொன்னை கோடிவராகனெடையாக்க சுவாமி எனக்குக்கற்றுக்கொடுத்திருக்கிறார். ஆதலால், இப்போது உன்னிடத்திலிருக்கும் பொருளைத் தந்தால் அந்தப்பொருளை வைப்பதற்கு உன் வீட்டில் இடமில்லை யென்னும்படி செய்கிறோம் என்றான். செட்டி அந்த வார்த்தையை நம்பி தன்னிடத்தில் உள்ள பொருள்போக இன்னும் மாளிகைகள், கடைகள், நிலங்கள், ஆபரணங்கள் இவைகளையும், தனது பெரியோர்கள் செய்திருந்த தருமத்தையும் விற்று அப்பொருளையெல்லாம் திருட்டுவேஷ முள்ளவனிடத்தில் கொடுத்தான். அவன் அதை ஒரு குகையிலிட்டு ரசங்கூட்டி நெருப்பில் வைத்துப் புகையை வணிகனுக்கு நேரே மிகுதியாகப் போகும்படி ஊதிச் செலுத்தினான். அந்தப் புகை தன்முகத்தில் பட்ட அளவில் வணிகன் மயக்கங்கொண்டிருந்தான். அப்போது இரசவாதி அந்த வளப்பமுள்ள குகையை யெடுத்து மறைத்து வைத்துக்கொண்டு மறைத்த குகையைப் போலவே யிருக்கிற வேறொரு குகையைப் பெருமைபெற அவனெதி

சில் வைத்து அதிகமாக மேலெழும்பிய புகையைத் தணித்து இந்தக் குகையை இந்தப் பெருந்தீயில் வையென்றான். அவன் அப்படியே எடுத்து வைத்தான்.

அப்பொழுது இரசவாதி பேராசைப்பேயனை நோக்கி, அப்பா! நீ மூன்றுதினம் நம்மைத் தியானஞ்செய்துகொண்டிரு, நாம் காளிச்சந்நிதியில் ஒரு ஓமஞ்செய்து மூன்றுதினமகன்றவுடன் இவ்விடத்துக்கு வருகின்றேமென்று அவனையங்கே வைத்துப் போய்விட்டான். வணிகன் மூன்றுநாள் வரையினு மிருந்து அந்தப் பொய்யனை எங்குந் தேடிக் காணாமையால் துன்பமடைந்து அக் குகையை எடுத்துப் பார்த்ததில் அப் பெரிய குகையானது இரும்புமயமா யிருக்கக்கண்டு மிகுந்த துயரடைந்து இறந்து தருமத்தை விற்றதனால் யானையுருவடைந்து அவதிப்பட்டனன். இவ்வாறு தருமஞ் செய்யாதவனுடைய பொருள் எந்தக்கதியாயிற்று. ஆதலால் உலகினர்கள் பழிக்கும் பாவத்துக்கும் பயந்து நடந்து தருமஞ் செய்யவேண்டும்.

---

5. உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு.

உண்டி = (கணவனுடைய ஆதாயவளத்தினில்) உண்ணப்படுவது, சுருங்கின் = சுருங்கச் செலவுசெய்ய வல்லவளாயின், பெண்டிர்க்கு = (அது) வாழ்க்கைத் துணைவியராகிய பெண்டுகளுக்கு, அழகு = பேரழகாம்.

உண்டி, உண்ணப்படுவது. உண்டிசுருங்கின் என்றதனால் ஆதாயவளத்தில் என்பதும், பெண்டிர்க்கழகு என்றதனால் சுருங்கின் என்பதற்குச் சுருங்கச் செலவுசெய்ய வல்லவளாயின் என்பதும் பெற்றும். நற்குண நற்செயலுடையவளாயினும், கணவனுடைய ஆதாயவளத்தை யறிந்து அதனின்மேற்படாமற் செலவுசெய்து குடித்தன்மைசெய்யு மழகுடையவளே வாழ்க்கைத் துணையாவாள் என்பதாம். இதை நோக்கியன்றே தெய்வப்புலமைத் திருவள்ளுவரும்

"மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை."
என மொழிந்தனர்.

இல்லறத்துக்குத் தகுந்த நற்குண நற்செய்கைகள் ஒருவனது மனையாளிடத்து இல்லையானால், அவ் வில்வாழ்க்கையானது செல்வத்தால் எவ்வளவு பெருமையை யுடையதாயினும் அது பெருமையை உடையதல்ல. நற்குணங்களாவன யாவையெனில், துறந்தவரை யுபசரித்தலும், வறியவரிடத்தே அருளுடைமையும் முதலானவையாம். நற்செய்கைகளாவன, யாவையெனில், வாழ்க்கைக்கு வேண்டும் பொருளறிந்து காப்பாற்றி வைத்தலும், உண்டிசமைத்தல் வல்லமையும், உபகாரஞ்செய்தலும் முதலானவையாம்.

இனி, சாப்பாடு அளவிற் குறைந்து சாப்பிடுதல் பெண்டுகளுக்கு அழகாம் எனவும் கூறுவர். அதாவது பெண்டுகள் போசன விடயத்தில் குறைந்தே இருத்தல் வேண்டுமென்பதாம். எப்படியெனில், அரைவயிறு அன்னமும், கால்வயிறு ஜலமும், உச்வாச நிச்வாசங்களைக் கஷ்டமில்லாமல் செய்வதற்கு கால்வயிறு வெறுமையாகவும் இருக்க வேண்டும். அப்படியில்லாமல் அளவுக்கதிகமாகப் போசனஞ் செய்யின், ஸ்திரீகள் தங்களுக்கென விதித்திருக்கும் செய்கைகளைச் சரிவர நிறைவேற்றார்கள். அவையாவன, கணவனுக்குமுன் காலையிலெழுந்திருத்தல், அவனிடத்து அன்புகூர்ந்திருத்தல், சமயல் முதலிய வீட்டு வேலைகளைக் கவனித்தல், விருந்தினரை உபசரித்தல், இவை முதலிய பலவாம். அன்றியும், சரீரம் ஒழுங்கின்மை, அழகுகுன்றல், சோம்பல், அதிநித்திரை, அசீரணம், பெருவயிறு ஆகிய இக்குற்றங்களுக் குள்ளாவார்கள். இவற்றால் கருப்போற்பத்தி இல்லாமற் போகும். பெண்டுகள் தங்கள் உடம்பை எவ்வளவு தொழிலுக்கு ஈடுபடுத்தவேண்டுமோ அவ்வளவும் படுத்தவேண்டும். இவ்விதியை மேனாட்டுச், சாஸ்திரிகளும் ஒப்புக்கொண் டிருக்கிறார்கள்.

"மீதூண் விரும்பேல்" என இவ்வம்மையாரே ஆத்தி சூடி என்னும் நூலில் கூறியுள்ளார்.

"மிகினுங் குறையினு நோய்செய்யு நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று."

என மாதாநுபங்கியாரும் வாய்மிரம்ப வழங்கியுளார்.

6. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.

ஊருடன் = தானிருக்கும் ஊராருடன், பகைக்கின் = ஒருவன் விரோதித்தால், வேருடன் = அவன் வமிசத்துடன், கெடும் = அவன் கெடுவான்.

எவனொருவன் தான் வசிக்கும் ஊரினுள்ளவருடன் விரோதிக்கிறானோ அவன் அடியோடு கெடுவான். எனவே ஊராருடன் சிநேகமாயிருக்க வேண்டுமென்று புலப்படுகின்றது. அதாவது, ஊரினுள்ளவர்கள் எக் காலத்தில் எதன் நிமித்தம் எவ்வெவ்விதமாகச் சமுதாயவகையில் கலந்து என்ன ஏற்பாடு செய்கிறார்களோ அவர்கள் கருத்தின்படி எவனொருவன் நடவானோ அவனுக்குப் பலவகையினும் துன்பமேயன்றி இன்பமென்பது கிஞ்சித்தேனும் இராவாம். ஊர்ப்பகைவன் வீட்டில் நடக்கும் சுபாசுப விடயங்களுக்கு ஆங்குள்ளார் எவராலும் செய்யப்படும் விக்கினங்களுக்குள்ளாவான். இவன் எவ்வளவு ஆஸ்திவந்தனாயினும், அயலார் சகாயமின்றி யாதொரு நன்மையும் பெறான். ஊரார் ஒரு கக்ஷியாகவும் தானொருகக்ஷியாகவும் இருக்கின், நீர்க்கட்டு, நெருப்புக்கட்டு, கடைக்கட்டு, வண்ணான் நாவிதன் படியாள் இவர்கள் இவனுக்கு யாதொரு தொழிலுஞ் செய்யக்கூடாமையாகிய கட்டு, திருடு, கொள்ளை, தீயிடல் முதலிய கெடுதியும் சம்பவிக்கும். எவ்விடயத்திலும் தீமை நேரிடும். இதைப்பற்றியன்றோ "ஒப்புரவொழுகு" "தேசத்தோ டொத்துவாழ்" "நாடொப்பனசெய்" "ஊருடன் கூடிவாழ்" என ஔவையாரும்,

ஆன்மாக்களுக்கு பல சன்மங்கள் சித்தம். அச் சன்மங்கள் பிறக்கும் இடங்கள் பலவாகலின் ஊரென்றார் பெரியோர்.

உடல், பேர், உறவு, வினை, கருத்து, சீர், சொர்க்கம், நரகம், தெய்வம், சமயம், இவற்றின் தோற்றங்களே ஊரிலடங்கியன. வினைக்கிடான வடிவும், பெயரும், அதற்கேற்ற உறவும், கருத்தும், கருததிற்கேற்ற தெய்வமும், சமயமும், சீரும், சொர்க்க நரகங்களையே ஆன்மாக்கள் அடைகின்றன.

இதை யோர் கதையால் விள்க்குவாம்.

கௌசாம்பி நகரத்திலேயுள்ள சாண்டில்ய வனத்தின் பக்கத்தில் இருந்த குமாரப்பிரத்தம் என்னும் ஊரிலே, மதிதயன் என்னும் அரசன் இருந்தான். அவன் குணவதி என்னும் மாதை விவாகம் முடித்து இருபது ஆண்டளவும் புத்திரோர்ப்பத்தி யில்லாமையால் மனம் வருந்தினவனாய் தன் முக்கிய மந்திரியுடன் யோசிக்கையில், வஞ்சகசித்தனென மந்திரி தன தாசனை காட்டிற்கனுப்பி தவஞ்செய்யுமாறு தூண்டி குமாரப்பிரத்தத்தை ஆண்டுவந்தனன். அரசனும், அரசியும் 'திருமாலுக்கடிமைசெய்' என்றபடி, திருமாலினை நோக்கி தவஞ்செய்தனர். திருமால் கருடவாகனத்திலிவர்ந்து இலக்குமி சையுத்தராய் தோன்றினர். அரசனும் மனைவியும் அவர் பாதத்தில் வீழ்ந்துவணங்கி ஐயனே ! பாரத்தசாரதீ! பஞ்சவர்தூதாவோ, அடியேங்கட்குப் புத்திரபாக்கியம் தந்தருள வேண்டுமென்று இரந்தார். சேடசயனர் அவர்களைநோக்கி நமக்கு இப்பிரவியில் ஒருபுத்திரனையும், ஓர் புத்திரியையும் தருவோம். அவர்களால் உங்களுக்கு தீமையே விளையும். ஏனெனில், அரசனாகிய நீ தந்தையைக் காட்டிற் கனுப்பி தரணியாண்டனை. உனது மனைவியோ, தாய்த்தந்தை நற்புத்தி கேளாது மாமன் மாமியரை காட்டிற்கனுப்பபோதித்தனள். வேந்தனுக்குள்ளஉத்தமகுணங்களை கைவிட்டு வஞ்சகசித்தனென மந்திரியின் ஆலோசனைக்

குட்பட்டாய். அவன் சித்தப்படியே சகலமும் செய்தாய். நீதியைத் துறந்தாய். தெய்வத்தை மறந்தாய். புத்திரரென் னும் பேராசையால் என்னை நினைந்தாய். ஆதலால் நீ கோறி யபடி புத்திரர் தரித்த உடனே உயிர் துறப்பாய், நின் மனைவி செய்த கொடுமைகளுக்கு பிரதிபலனை புத்திரர் மூலமாக அடையுமாறு வரம் தந்தேனெனக் கூறி மறைந்தனர்.

இவர் இருவரும் தம்வீடு சார்ந்து இருக்கும் காலையில் மின்னலையாள் வயிற்றில் கருப்பந் தரித்தது. அதுகாண் டற்குமுன் அரசன் இறந்தான். அரசி பெரிதும் வருந்தி, கணவனிறக்க உயிர் வைத்திருத்தல் கற்புடைய மங்கை யர்க்கு தகுதியன்றென நினைத்து உடன்கட்டையேற நினைந் தும், அரிய தவஞ்செய்து அடைந்த கருப்பத்தின் ஆசை யினாலும், அரசாட்சிக்கு உரிமையுடையா ரின்மையினாலும் உடன்கட்டை ஏறாது விதவாவிரதங் கொண்டிருந்தாள். பிள்ளை சிலநாள் சென்று பிறந்தது. அதனை யெடுத்து நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்துவந்தாள். குமாரனும் அருமையுடன் வளர்ந்து வருங் காலத்தில் சர்ப்பந் தீண்டப்பட்டு வைகுண்டத்தை யடைந் தான். அதனாலே அரசி துக்கசாகரத்தில் மூழ்கினாள். அந்தோ! பெறற்கரும் பொருளாகிய கணவனை யிழந்தும், பேதையேன் குமாரனை துணையென்று நம்பியிருந்தேன். குமாரரவோ! நீயு மிறந்தனை. இனி யாரை நம்பி யுயிர் வாழ்வேன். வாய்த் தவிடும்போய் அடுப்பில் நெருப்பும் போய்த் துன்புறுவார் கதியானேன். முண்டகக் கண்ண னே! பாற்கடலிற் பள்ளிகொள்ளும் பாம்பணையாய்! சர்ப் பங் கடித்ததும் நின்மாயந்தானே. ஆயினும் கருடக்கொடி யுயர்த்தக் கடவுளே! நின் வாகனமாகிய கருடனையாதல் விடுத்து என் கவலைக் கடலைச் சுவற்றாயோ? என்று ஏங்கி, ஏங்கி யிரங்கி இப்போதே தவத்தரைச் சார்ந்து குமாரனை பிழைப்பிப்பேனென்று செத்துக் கிடக்கும் குழந்தையை யெடுத்துக்கொண்டு கதறிக் கதறிக் கூந்தல் நிலத்திற்

புரள, கண்ணீர் யாருக ஓட, மெல்லென நடந்து அன்ன மோ பிடியோவென் றயிர்ப்பச்சென்ருள்.

சான்ருேரு முண்டுகொல் சான்ருேரு முண்டுகொல்
ஈன்ற குழவி யெடுத்து வளர்க்குறாஉம்
சான்ருேரு முண்டுகொல் சான்ருேரு முண்டுகொல்
தெய்வமும் உண்டுகொல் தெய்வமும் உண்டுகொல்
வைவேலை யாட்கொள்ளுந் தெய்வமு முண்டுகொல்
நம்மகவு பிழைப்பிக்குந் தெய்வமு முண்டுகொல்.

என்று சென்றகாலை மந்திரி, படைத்தலைவர், குடிகள் யாவரும் சூழ்ந்து துயருற, வாகிசமுனிவர் இருந்து தவஞ்செய்யும் ஆச்சிரமவழியாகச் செல்லுங்காலை, ஆங்கு வராநின்ற முனிவரது சிடர்கள் மனம் பதைபதைத்து இரங்கி, நடந்த வரலாறை கேட்டனர். அரசியும் புத்திர சோகத்தால் வருந்தி இக்குழந்தையை பிழைப்பித்தற்கு மருந்து யாதேனும் உங்களிடத்தில் உண்டா என்று கேட்டனள். சீடர்கள் பரிதபித்துத் திரியும் அவள் நிலைமையைக் கண்டு பொருதவராய், அரசியே! உனக்கிது நேர்ந்தமைப்பற்றி வருந்துகின்ருேம். நீ அஞ்சற்க. நம்முடன்கூட வருதி. அம்மருந்து வைத்திருக்கும் முனிவர் ஒருவர் உள்ளார். அவரிடம்வரின் நின்றுயரத்தைப் போக்குவார். இது சத்தியம் என்று அழைத்துச்சென்று முனிவர்முன் விடுத்தனர். அரசி தவத்தின் மிக்க அவரது அடிக்கமலங்களை வணங்கி, "அடிகாள்! என்தருமைக் குழந்தையை யுயிர்பெறச்செய்யும் மருந்து தங்களுழையுண்டோ?" என்ருள். முனிவர் அவள் நிலைமையையறிந்து உண்டு என்ருர். அரசி "அங்ஙனுளதேல் விரைவில் அளித்து என் செல்வனை யென்னுடன் கூட்டி யனுப்பியருள்க. தேவரீர் எந்தவேர், எந்தப் பச்சிலை எப்பொருள் வேண்டுமெனினும் அழைப்பிப்பேன்" என்ருள்.

அதற்கு முனிவர் புன்முறுவல்கொண்டு, "நங்காய்! நின்மனத்துயரை விடுத்தி. பிறந்தவர் இறப்பது திண்ணம். இறந்தவர் பிறப்பது திண்ணம். பிறப்பில்லாதவர் இறப்பு

யில்லாரே. இறப்பில்லாதவர் பிறப்பில்லாதவரே. ஆதலால் நீ வருந்துவது எதற்கு? செயற்கருஞ் செயல்களை யெல்லாஞ் செய்த சித்தர்கள் பலர் இருதியில் பேச்சு மூச்சின்றிப் புறண்டழிந்தார். இந்திரசாலம், மயேந்திரசாலம், பரகாயப்பிரவேசம், வித்துவேடணம், மாலிகாஞ்சனம், அக்கினித்தம்பம், வாயுத்தம்பனம் முதலிய பற்பல அரிய வித்தைகளை யாடிநின்று, உலகர் யாவரும் இவன் வல்லமை என்னே யென்னே யென்று கொண்டாடும்படி யிருந்த வல்லவர்கள் எண்ணிறந்தோர் சூத்திரப்பாவைபோல் விழுந்து மாண்டுவிட்டார். இந்திரியங்களெல்லாங் கெட்டு அந்தக்கரணமுழுதுங் குறைந்து நாவுலந்து, அலமந்து, வாய்பூட்டிடப்பட்டு, ஐயகோ! அவர் படுந் துயரத்தை யாவரே யறிய வல்லவர், ஓ அரசியே! பூவுலகிலுள்ளவர்கள் யாவரும் இறப்பார். மேலுலக வாசிகளாகிய தேவர், முனிவர், கருடர், கின்னரர், கிம்புருடர், விஞ்சையர், கந்தருவர், சித்தர், வித்தியாதரர் முதலிய பதினெண் கணத்தவர்களும் இறப்பார்கள். அவர்களும் நமக்கு துணையல்லர், சுவர்க்காதிபதி ஆகிய இந்திரனும் இறப்பன். அங்ஙனம் எத்தனையோ இந்திரர் இறந்தார்கள். பிரமாவின் ஒரு பகலிலே பதினான்கு இந்திரர்கள் இறப்பார்கள். அப்படி நூறுகோடி பிரமர்கள் இறந்துவிட்டனர். பிரமர் தொகை யிவ்வளவாயின் இந்திரர் தொகையு மெண்ணத்தகுந்ததோ? ஆகலின் இந்திரர் பிரமா என்னும் இவர்களும் நமக்குத் துணைவாகார். திருமாலும் நூறுகோடிய சிறந்தனரென்று வேதம் நுவலாநிற்கும், உருத்திரரும் பலர் கழிந்தனர். ஆகலின் விட்டுணு உருத்திரர் என்பவரும் நமக்கு துணையாகார். ஓரறிவுடைய தாவரமுதல் ஆறறிவுடைய தாமோதராராதியர் இறுதியாகவுள்ளார் யாவரும் இறப்பார். இறக்காதவர் எவர் எனில், பிரம, விட்டுணு, உருத்திரர்களுக்கு மேலவராய பரசிவம் ஒருவரே. அவரேதானு. இறவாதவர் பிறவாதவர். அவரே நமக்கு என்றுந் துணை. நங்கையே! புத்திரன் என்னும் பொருளாசையை விட்டுவிடு, பிள்ளைகளால்

சுகமடைவேம் என்று பலர்நினைப்பார். அறிவறிந்த பிள்ளைகளா லங்கனமடைதல் உண்மையே. மற்றையபிள்ளைகளால் யாது பயன்? பிள்ளைக் கருத்தரித்தற்குத் தவஞ்செய்வதுந் துன்பம், தரித்த காலத்துச் சுமந்து உயிர்ப்பதுந் துன்பம், உயிர்த்தகாலை யூட்டி யுறக்கி வளர்ப்பதுந் துன்பம், வளர்த்தகாலை நோயினுதல், காமத்தினுதல், பகைவராதல், இடி, அக்கினி, காற்று முதலிய பூதங்களினுதல் துன்பங்கள் வந்தகாலைக் கேட்டலும் பார்த்தலுந் துன்பம். பிரியிற்றுன்பம். எக்காலத்துத்தான் இன்பம்? அவரெல்லாம் சந்தையிற் கூட்டம்போல் தம்வினையும் எம்வினையும் ஒழியிற், பேசாது ஓடுவர். ஆதலால் ஓ அரசியே! பிள்ளைகள் என்பார் ஓர் நிலைத்துணையாகார். என்றும் நமக்கு நீங்காது துணையாயிருப்பவர் இறவாதவரே. அவரை நாடி தவஞ்செய்து பேரின்பப்பெருவாழ்வை யடைவாயாக" என்றுகூறிய முனிபுங்கவரை அரசிளங்கைம்பெண் அகலாது முனிவரை நோக்கி "ஓ உத்தமதவத்தரே! பிள்ளை பிழைக்கும் வழியைக்கேட்க பேரின்ப வாழ்வடையும் நீதிகளை போதிக்கின்றீர் இம்மகவால் நான் அடைய வெண்ணிய வனத்தும் ஆற்றில் கரைத்த புளிபோலாயின. எனது சுற்றத்தோர் நாட்டை யாளவும் யான் தவவேடம்பூண்டு தாணியில் சஞ்சரிக்க ஒருபோதும் சம்மதியேன் நின் தவத்திற்கு வேண்டுவன யாவும் அளிப்பேன் உம்மை நாடிவந்த நான் மகிழ்வடையுமாறு என் புத்திரனை பிழைப்பித்தருளல் வேண்டு" மென்று மன்றாடினாள். அதற்கு முனிவர் புன்முறுவல் கொண்டு "நங்காய்! எனக்கு வேண்டுவ தொன்றுண்டு. அதனை விரைவில் தருவையேல் நின் மனத்துயரை அகற்றுவேன். அதாவது ஒரு கைப்பிடி கடுகுவேண்டும்" என்றார். அவள், "அதனை விரைந்துகொண்டுவருக", என்று சேனைக் காவலரையும் ஆயவெள்ளத்தையும் பார்த்து கூறும்போது, முனிவர் தடுத்து, "மாதரசே! அவர்கள் ஒருவரும் கொண்டு வருதல் தகாது. நீயே வாங்கிவருதல் வேண்டும், அதுவும் ஒருவரும் இறந்து படாத வீட்டிலிருந்து வாங்கி வருதல்

வேண்டும்'' என்றார். அப்போது புருடனையிழந்த துயரும், புத்திரனை யிழந்த துயரும் விட்டு நீங்கின.

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
ரெவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
யருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணா யினார்.

என்றபடி தான் மேற்கொண்ட கருமத்தினாலே வருத்தம், அவமதிப்பு முதலியனவற்றையும் நோக்காது ஓர் வீட்டிலே சென்று வாயில் ஏறினாள். ஆங்குள்ளார் அரசி வந்தனளெனப் பதைபதைத்து எழுந்து என்னவேண்டுமென்று வணங்கிக் கேட்ப, "ஒரு பிடி கடுகுவேண்டும்" என்றாள். அவர் விரைவிற் கொண்டுவந்தனர். அரசி இந்த வீட்டில் யாரேனும் இறந்திருக்கின்றனரோ என, அணங்கே! இவ் வீட்டில் மைந்தர் இருவர் இறந்துளார் என்றார். அரசியகன்று அடுத்தவீட்டிற்சென்று "இறவாதவீடா" என்றுகேட்டாள். அவ் வீட்டினுள்ள பெண்கள், உலகாளும் ஒப்பற்ற மயிலே! இவ் வீட்டில் நான்கு இளங்காளையரும், ஒருபாலனும் இறந்தனர் என்றார். அரசி துக்கித்து ஒவ்வோர் வீடுகளினும் சென்று கேட்டகாலை, ஆங்குள்ளார் இறவாதாருமிவ்வுலகிலுளரா? பிறந்தார் யாவரும் இறப்பரன்றோ? இறவாத வீடு சுவர்க்கம், வைகுண்டம், சததியலோகம் முதலிய எவ்விடத்தும் கிடையாதே என்றார். இன்னுஞ் சில வீடுகளைச்சென்று பார்ப்போமென்று விசாரிப்பின் ஒவ்வோர் வீட்டினும் பேரன் இறந்தான் என்றும், பிதா இறந்தார் என்றும், மாதா இறந்தனள் என்றும், பிள்ளைகள் மறித்தன என்றும், மனைவி இறந்தனள் என்றும், அடிமைகள் வீந்தன என்றும், மிருகம் பறவைகள் உயிர் நீங்கின என்றும் இவ்வாறு எல்லா வீட்டுக்காரரு முரைத்தார்.

இவைகளைக் கேட்ட அரசி நாம் விசாரித்த இவ்வூரல்லாத வேற்றூர்களில் இறவாத வீட்டுக்காரர் இருப்பார் என்று நினைத்து ஒருவரும் இறக்காதவீடுடையவர் யாரேனு

மிருப்பின் இப்போது வருவரேல் அவர்க்கு என் அரசிற் கீற்பாகம் கொடுப்பேன் என்று எவ்விடத்தும் பறையறை வித்தாள். ஒருவராவது வந்திலர். விரைவில் வருவரேல் அரைப்பாகம் கொடுப்பேன் என்று அரைவித்தாள். அப் போதும் வந்திலர். முற்றும் கொடுப்பேன் என்று தெரிவித் தாள். அப்போதும் வந்திலராக மனஞ்சலித்து உலகத்து யாவரும் இறப்பர், எத்தனையோ மகுட மன்னவர் எல்லாம் தம்முடலை விட்டு வரும்படி யமன்பாசம் வீசி யெரிந்து கொண்டு செல்லுமேல் யாவர்தாம் இறக்காதார்? ஒருவரு மிலர். ஆதலால் என் பிள்ளையும் இறக்கவேண்டியது இறந் தது என்று மனந்தெளிந்தும், "கடந்த ஞானியும் கடப் பரோ மக்கள்மேல் காதல்" என்றபடி புத்திரபாக்கியத்தை மண்ணிற் புதைக்க மனம் சகியாது யோசிக்கலாயினுள். நானும் எனது காதலனும் செய்த தவப்பயன் வீணுயிற்று, தாமரைக் கண்ணன் கொடுத்த வாக்கும் பழுதாயிற்று. வஞ் சகசித்தனை மந்திரியே அரசாளலாயிற்று, எனதருமை மைந்தனே அரவின் வாய்கிரையாயிற்று, எனது புத்ரியோ தந்தையில்லாக் குறையாலும், சகோதரனை பிரிந்த துக்கத் தாலும், மாதா புலம்பும் பரிதாபத்தைக் கண்டு யேங்கலா யிற்று. இத்தகைய துக்கத்திற்குக் காரணம் யானே என் பதை இப்போதுதான் உணர்ந்தேன். எனது வஞ்ச எண் ணங்களே அரவாய்வந்து மகனை நஞ்சின் கடலில் ஆழ்த்தி விட்டன. இங்கு பல பலவாய் யோசிப்பதில் பயனென்? முனிபுங்கவரிடம் சென்று நடந்தவற்றை அறிவிப்பேன். அவரிடம் எப்படியேனும் என் மகன் பிழைக்கும்வழியைத் தேடுவேன். என்று துணிந்தவளாய் முனிவரிடம் சென்ற னள். மின்னனையாள் வருவதை யறிந்த தபோநிதி, "ஊழ் வினைபைய நுழையும்" என்பதை யறிந்தோராதலால் அர சியை நோக்கி "புத்திரசோகத்தால் மூழ்கிய ஓ மாதரசே! நாம் ஆக்கியாபித்தபடி இறவாதார் வீட்டின் ஓர் பிடி கடுகு எங்கே?" என்றனர். இதைக்கேட்ட மாது, "தவத்தோர் நேசிக்கும் தயாநிதே! தாங்கள் திருவாய்மலர்ந்தருளிய உத்

தமபோதனையை உணராது ஊரூராய்உழன்று, பலர்நகைக்க பெயரெடுத்தேனேயன்றி பிரயோஜனத்தையடைந்திலேன். என்னை இனியும் சோதிப்பதில் யாதுபிரயோஜனம்? பேதையாகிய யான் பிள்ளைகளென்னும் மாயவலையில் சிக்கியுள்ளேன். தயவுகூர்ந்து என் மகனை பிழைப்பித்தருளல் வேண்டு" மென்று வேண்டினள். இதைக் கேட்ட முனிவர் மனதிரங்கி கருட மந்திரத்தால் அரச குமாரனை பிழைப்பித்து படைகளுடன் நாடடையும்படி ஆக்கியாபித்து தமது தவத்தமர்ந்தார்.

சந்தோஷசாகரத்தில் மூழ்கிய அரசி தமது அருமைக் குமாரனுடன் நகரம் சேர்ந்து தமது குமாரத்தியுடனும், குமாரனுடனும் வாழ்ந்துவரும்நாளையில், குணசுந்தரனென்னும் அரசகுமாரன் தன்தாயைநோக்கி, "மாதாவே! எனது தந்தையர் எவ்வாறு காலம்சென்றார்? மந்திரியாகிய வஞ்சக சித்தன் ராஜ்யமாளும் காரணமென்ன? இதனை விரைவாய் உரைத்தருளல் வேண்டு" மென்றான். இதைக்கேட்ட தாய் நமதுகுமாரனுக்கோ யுக்தவயசுவந்துவிட்டது. இனிநடந்தவற்றைத் தெரிவித்து நாடாளும் பாக்கியத்தை நாம் காணவேணுமென்னும் பேராவலால் தூண்டப் பட்டவளாய் யாவற்றையும்கூறி முடித்தனள். இவற்றை யுற்றுக்கேட்ட மைந்தன் நாடாளும் சிறப்பினும் காட்டில் தவம்புரிதலே நலமென்றுணர்ந்து காட்டிற் ககன்று தவவேடம் கொண்டான். தாயாகிய குணவதி இவற்றை மந்திரிக் கறிவித்து துக்கசாகரத்தில் மூழ்கி சுகுணாம்பாள் என்னும் தன் புத்திரியுடன் காலம் கடத்தி வந்தனள்.

மந்திரியும், மகனும்.

அரண்மனை ஆட்களால் விஷயமறிந்த மந்திரி தன் மகனாகிய சத்தியசீலனிடம் அடியில்வருமாறு ஆலோசிக்கலாயினான். எனது அருமைப் புதல்வனே! நான் பன்னாளாய்

இந்த குமாரப்பிரத்தம் என்னும் ஊரின் அரசனிடம் மந்திரியாகவிருந்தும் அரசன் நாட்டையாண்ட காலத்திற்கு மேல் நானே இப்பதிக்கு அரசனுயிருந்து ஆண்டுவந்தேன். இடையிடையே நேர்ந்த குடும்ப கலகங்களிலும், அரசாட்கூியைச் சார்ந்த கலகங்கட்கும் உத்தமநீதி போதிப்பதைப் போல் அரசனிடம் நடித்து வந்ததனுல், என் வார்த்தையை நம்பி காட்டிற்கேகி வரம்பெற்று மைந்தரைப் பெருமுன் மாண்டனன். அதனுல் ஒருவாறு சந்தோஷசித்தேனுயினும் அரண்மனையிலுள்ள அரசியின் கர்ப்பத்தை சிதைத்துத் தொலைத்து நானே இப்பதிக்கு அரசனுக வெண்ணிச் செய்த சூழ்ச்சிகளும் பயன்படாது போயின. அரசிக்கோ உத்தமகுணம்வாய்ந்த ஆண்மக வொன்றும், பெண்மக வொன்றும் பிறந்தன. இக் காட்கூியைக்கண்டு என்னுல் சகிக்கக்கூடாது செய்த வஞ்சகங்கள் ஒன்றும் பலித்தில. தெய்வானுகூலமாய் அரசிளங்காளை அரவு தீண்டி இறந்தும், வனத்துள்ள தபசியால் ஆயுள் பெற்றனன். அதனுல் நான் இந்த ராஜ்பத்தை யாள இனி முடியாதெனவும், அரசகுமாரனின் ஆளுகைநாள் வரப்போகின்றதே என வருந்தி, பிரதிதினமும், சூரியனையும், சந்திரனையும் நான்கு ஜாமங்கள் அதிகமாய் இருந்துபோம்படி மன்றுடுவேன். இப்படியிருக்க தெய்வகதியாய் அரசகுமாரன் தவவேடம் பூண்டு காட்டிற்கு சென்றதாய் அரண்மனை வேவுகாரர்களால் அறிந்தபின் மனம் குளிர்ந்தேன். இவ்வளவும் எதற்காகவெனிலோ! என் மைந்தனுகிய நீ இப்பதியை ஆளவேண்டுமென்னும் பேருவல் ஒன்றேயாம். ஆனுல் தற்போது நீ செய்ய வேண்டிய காரிய மொன்றுண்டு. தவவேடம்பூண்ட குணசுந்திரனிடம் சென்று உலோகாயத மதக்கொள்கையை அவனுக்குபோதித்து அழகுவாய்ந்த வேசியின்மோகத்தில் வீழ்த்திவிடுவாயாகில், தையலின் மையலிலாழ்ந்து குணசுந்திரனே அவ்வழியே நாசமடைவான். நான் சொன்னபடி முடிப்பாயாகில் இந்நாட்டை நீயே ஆண்டு சுகமடைவாய் என்றுன்.

இதைச் செவியுற்ற சத்தியசீல னென்னும் மந்திரிகுமாரன் தந்தையை நோக்கி, தந்தாய்! தங்கள் மதியூகத்தை என்னென்று கொள்வேன்! எவ்வாறு புகழ்வேன்! நன்று, நன்று. இக்குமாரப் பிரத்தத்தை யாண்ட அரசர் தம்மைப் போன்ற ஒருவரை மந்திரியாக எவ்வாறு கொண்டனர்? அரச குடும்பத்தினர்க்கு செய்த திங்கை பிரரறியாவிடினும் தெய்வமறியாதோ? உலகுள்ளளவும் மாறாப்பழியை நீர் சம்பாதித்துக்கொள்வது எதற்கு? இம் மண்ணிற்காகவா! மன்னுதி மன்னர்களெல்லாம் எப்படி யழிந்தனர் என கவனியாது விட்டதேன்? பிறர் மாதை அபகரித்த குற்றத்தால் அழிந்த இலங்கை மன்னனும், மண்ணாசைக்கொண்டு மடிந்த துரியனும், சகோதரனை வஞ்சித்த வாலியும் எக்கதியடைந்தனர்? அவர்பால் தர்மதேவதை தயவுகாட்டியதா? அவர்தம் தவப்பயன், அவப்பயனானதை மறந்தீரே, நீதியைத் துறந்தீரே, மந்திரி என்னும் உத்தமப்பெயர் கெட நடந்தீரே, என்னையும் பாவத்திற்குட்படுத்த முயன்ற தந்தையரே! உமது பெருங்கருணைத் திறத்திற்கு வந்தனம். வந்தனம். பிறரை வஞ்சித்துப் பொருளை கவரும் நெஞ்சம் படைத்தவன் யானல்லேன்.

உண்பது நாழி யுடுப்பது நான்குமுழ
மெண்பது கோடிநினைந் தெண்ணுவன—கண்பொதிந்த
மாந்தர் குடிவாழ்கை மண்ணிற் கலம்போல
சாந்தனையும் சஞ்சலமே தான்.

ஆசையென்னும் பெருங்காற்றில் இலவம்பஞ்சு அலைவதுபோலொத்த மனம்படைத்த தந்தையே! நீர் கற்றதும், கேட்டதும் வீணாயின. தெய்வ அருள் ஒழிந்தன. பாபமென்னும் குன்று நம்மேற் சாய்ந்தன. ஆன்மலாபம் அழிந்தன. பேராவல் என்னும் பேய்ப்பிடித்து பாப செய்கையை செய்யத் துணிந்தீர். பலபலவாம் கோடிஎண்ணங்களை நினைந்தீர். உணவையும் உறக்கத்தையும் மறந்தீர். நீர் எண்ணியபடி உமது செய்கை முடித்து இப்பதிக்கு அரசனாகுக.

ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல.

என்றபடி ஒரு கணப்பொழுதும் உடம்பும், உயிரும் கூடி யிருக்கையை அறியமாட்டாதிருந்தும் பலகோடி தீய எண்ணங்களை நினைந்து துன்புறச் சம்மதியேன். ஆதலால் என்னை மன்னித்தருளல்வேண்டும். பிதாவே! மக்களுக்குத் தந்தையர் சேகரித்துத் தருஞ் சம்பத்துக்கள் இறண்டுள. அவை தெய்வ சம்பத்தென்றும், அசுர சம்பத்தென்றும் பொருள்படும். அவைகளை யான் பெரியோரிடம் கேட்டுணர்ந்தமட்டும் தங்களுக்குதெரிவிக்கின்றேன். அவற்றைக் கேட்டு என்னை மன்னித்தருள்வீராக வென்று சொல்லத் தொடங்கினன். தெய்வப்புலமையராம் நமது நாயனர்,

"குற்ற மிலனய்க் குடிசெய்து வாழ்வானை
சுற்றமாச் சுற்று முலகு." என்றார்.

உலகம்தன்னைச் சுற்றும் பாக்கியம் பெரும் ஒருவன் தான் உலகத்தை ஒட்டிஒழுகல் முறையாதலின் பெரியோர் செய்த நீதிநூல்களை கற்பதும், அதன்படி நடப்பதுமே அன்னோற் செய்யவேண்டியது. இதையே நமது ஔவைப் பிராட்டியரும் பேரியோரைத் துணைக்கோள் என்றார். பெரியோரைத் துணைக்கொள்வதால் ஞானமென்கிறவாள் கைக்குவரும். அதனல் சம்சார மென்கின்ற விருட்க்ஷத்தை சேதிப்பதற்கு தகுதியுடையோராகி மோக்ஷத்தை யடைவார்கள். இதைத்தான் தெய்வசம்பத்தென்றார் பெரியோர். தெய்வ சம்பத்திற்கு மாறுபாடாக தன்னை நாசப்படுத்தி நரகத்திற்குள்ளாவதே அசுரசம்பத்தாகும். இவ்விருவகை சம்பத்துக்களையும் சிறிது கூறுவாம்.

தெய்வ சம்பத்து.

மோக்ஷத்தைக் கொடுக்கும் தெய்வ சம்பத்துடையவன் சதா சத்துவகுணத்தோடு கூடியிருப்பன். அவன் சித்தத்தில் பயமில்லாதிருப்பன். உலகம் இத்தன்மை யுடை-

யது, கடவுள் இத்தன்மையுடையவர் என்று அறியக்கூடிய விசேஷஞான முண்டாயிருக்கும். சத்பாத்திரம் கொண்டு தானம் கொடுப்பன். மனதும் இந்திரியங்களும் கெட்ட வழிகளிற் செல்லாமல் சதா புண்ணிய கருமங்களினும் நற் சிந்தனைகளிலுமே லயித்துக்கொண் டிருக்கும்படி செய்வன் சகல சீவர்களுக்கும் பஞ்ச எக்ஞங்களும் வேதாப்பியாஸ மும் தபசும் செய்துகொண்டிருப்பன். ஓர் பிராணிக்கும் தன்னாலே ஹிம்ஸை யுண்டாகும்படி செய்யான். அவனிட த்தே எப்பொழுதும் சத்தியமான நடவடிக்கையேயுண்டா யிருக்கும். எவ்விஷயங்களைப் பற்றியும் விசனத்தை யடை யான். சகல ஜீவர்களுக்கும் தன்னிடத்தி லுள்ளவைக ளெல்லாம் கொடுக்கும்படி சந்தோஷ முடையவனாகவும், சாந்தசித்தனாயு மிருப்பன். பிறர் செய்த தோஷங்களை யெண்ணாமலும் சகல பூதங்களிடத்தும் தயவுண்டானவனா யும், விஷயங்களில் ஆசையில்லாமலும், அநுசிதவிஷயங்க ளில் லச்சையின்றியும், சபலத்துவம், லோபத்துவம் இவை களின்றியும் தாழ்மையான போக்குடையவனாகவும் இருப் பன். தேஜஸோடும், பொறுமையோடும், ஆண்மையோடும், சுசித்துவத்தோடும், குரோதமின்றியும், களங்க மின்றியு மிருப்பன். ஓர் விஷயத்திலும் அபிமான மில்லாமலும் தியாகபுத்தி யுடையவனாகவு மிருப்பன். இவ்வித குணங் களே தெய்வசம்பத்தை சேர்ந்தவைகளாகும்.

அசுர சம்பத்து.

இனி நரகத்தைக் கொடுக்கும் அசுர சம்பத்தை கவ னிப்போம். இடம்பம், அபிமானம், குரோதம் இவைகள் எவனிடத்தில் நிரம்பி யிருக்கின்றனவோ அவனே அசுர சம்பத்துடையவன். சாதுக்களை துச்சமாய் வசனிப்பவ னும், தன்னை யெப்பொழுதும் புகழ்த்திப் பேசுபவனும், நரகலோக காட்க்ஷிகளை கண்டு அனுபவிக்கும் அழைப்புக் கடிதத்திற் கருகனாவான். அசுர சம்பத்துடையவனிடத்து தருமமும், சுசித்துவமும், ஆசாரமும், சத்தியமும், சீவர்க

ளிடத்தில் தயவும் இருக்கமாட்டாது. இவ் வுலகத்தில் விளங்கப்படாநின்ற வேதசாஸ்திரங்கள் பொய்யென்றும், நற்செய்கை, துற்செய்கை இவைகளின லுண்டாகும் புண்ணிய பாவங்கள் கிடையாவென்றும், இச் சகத்திற்கு கர்த்தாவாகிய ஈஸ்வரனொருவ ருண்டென்பது கிடையாதென்றும், காமத்தினல் ஸ்திரீ புருஷர்களுடைய சேர்க்கையே சிருஷ்டிக்கேதுவென்றும் தர்க்கஞ் செய்வான்.

இவ் விதமான துஷ்டர்கள் தமது ஆணவத்தினல் மோக்ஷ சாம்பிராச்சியத்திற்கு வேண்டிய எத்தனங்களில் மனதைச் செலுத்தாமல் புத்தியீனர்களாகி மோசமும் நாசமுமடைந்து உலகத்தில் ஏதாவது கிஞ்சித்மாத்திரம் சற்கிருத்தியங்களை செய்து வரப்படாநின்ற ஜீவர்களையும் கெடுத்து தாமும் கெட்டு நரகத்தையடைவர். எவ்வளவு பாக்கியங்கள் வந்தபோதிலும் திருப்தியடையாமல் மென்மேலும் தாங்கள் அடையக்கூடாத வஸ்துக்களை இச்சித்து அதனல் அநேகவிதமான துக்கங்களை அடைந்துகொண்டு அஞ்ஞானத்தினலே மோகத்தை அடைந்து அநியாயமான வழிகளில் பிறரைக் கெடுத்தும், பிறருக்கு மனப்பூர்வமாய் தோஷஞ்செய்தும், பணங்களை சம்பாதித்து சற்பாத்திரங்களின் அற்பமாயினும் செலவு செய்யாமலும், சாஸ்த்ரோக்தமான ஆசாரங்களையும் விரதங்களையும் கைவிட்டு அபவித்திரமான விரதங்களுடன் வன்கணமையும் இம்ஸாகரமுமாகிய கொலைக் காமங்களைச் செய்துகொண்டும் ஜகத்துக்குச் சத்துருவாய் ஜனனத்தையும் மரணத்தையு மடைந்துகொண்டிருப்பார்கள்.

மரணபரியந்தம் ஓய்வில்லா துஷ்டகருமத்தை கைக்கொண்டு அபிமானம், இடம்பம், மதம், அழுக்காறு, கோபம் இவை முதலிய காமக்குரோதாதி குணங்களோடும் கூடினவர்களாகி சாஸ்திரங்களிலில்லாத உக்ர விரதங்களை யாசரித்து அதற்கு வேண்டிய பூதப்பிரேத பிசாசாதி தேவதைகளை ஆராதனை செய்துகொண்டு மிருப்பார்கள். இன்ன

மும் விஷயங்களினு லுண்டாகும் காமபோகங்களையே பர புருஷார்த்தமென்றும் இதுவே மோக்ஷமென்றும் இதை யன்றி வேறே கிடையாதென்றும் நிச்சயித்து தேகசுகத் துக்காதாரமாகிய சாதனங்களை சம்பாதிப்பதிலும் அதற்கு வேண்டிய அர்த்தங்களை சம்பாதிப்பதிலுமே சிரத்தை கொண்டவர்களாய் இருப்பார்கள்.

அசுர சம்பத்துடையோர் அகங்கார முடையோராகி, ஆசைகளென்னும் கயிறுகளால் கட்டப்பட்டு காமபோகங் களை அனுபவிக்கின்ற நிமித்தமாய் அநியாயமான தனங்களை சம்பாதித்து கூட்டிக்கொண் டிருப்பார்கள். அவர்களின் அபிப்பிராயமோ இன்றைக்கெனக் கிவ்வளவு திரவியமிருக் கின்றது. இதை வரும் ஆண்டிற்குள் இத்தனையாக வர்த்திக் கப் பண்ணுவேன். இவைகளைப் பார்க்கிலும் இன்னும் அதிக பொருளை சம்பாதிப்பேன். இதனுல் என்னை யாரும் அதிக பணக்காரனென்று மதிப்பார்கள். நானே பொரு ளுடையவன் யானே உயர்ந்த ஜாதி. பெண்ஜாதி, பேரப் பிள்ளைகள், பந்துக்கள முதலியவர்களை உடைத்தாய் இருப் பதில் எனக்கு நிகருள்ளவர் யாவர்? நான் எக்யங்கள்செய் வேன், நான் ஆட்டக்காரன், பாடகன் முதலியோர்க்கு தர் மங் கொடுப்பேன் என்று அஞ்ஞானத்தினுலே மோகத் தை யடைந்துகொண் டிருப்பார்கள். இன்னும் இந்த சத் துருவானவன் என்னுலே நாசத்தை யடைந்தான். மற்ற வர்களையும் நான் இல்லாமல் செய்துவிடுவேன். நான் எவ ரையும்விடப் பெரியவன். நான் நினைத்த காரியத்தை ஓர் கடிகைப் போதிலேயே முடித்துப் போடுவேன். நான் தேகபெலமுடையவன். நான் சுகமனுபவிப்பதைப்போல் வேறு எவரும் அனுபவிப்பதில்லை என்று இன்னன மனப் பேய்பிடித்து மோகத்திலும் காமத்திலும் அகப்பட்டு பாச மென்னும் வலையினுல் சுற்றப்பெற்று விஷயங்களென்னும் போகங்களை அனுபவித்துக்கொண்டு ருசியென்னும் ரவு ரவாதி நரகங்களில் வீழ்வர். இத்தகைய அசுரசம்பத்து

டைய பதகர், தாமே திரவியவான் என்கிற பெருமையி ஞலே அகந்தை, மமதை, கெருவம் இவைகளை யடைந்து எத்தகையோ ரிடத்தும் தயை தாக்ஷணியம் முதலியன அணுத்துணையேனுமின்றி துர்வசனங்களை வசனிப்பதும், தன்னிடத்தும் இதரமான சகல வஸ்துக்களிடத்திலும், (பகவான்) அந்தரியாமியாய் யிருக்கின்ருர் என்பதை யறி யாமல் எவரையும் துச்சமாய் பேசி, தெய்வநிந்தை செய்து கடவுளடியாரை தூஷித்து அவர் வார்த்தைமீறி கீர்த்திக் காய தர்மங்களும், யக்கியங்களும் சிலவேளை செய்வர். இவ்வித மூடசிரோமணிகளுக்கு ஒருக்காலும் நல்ல கதி கிடையா! இவர்கள்தான் மோக்ஷத்திற்கு தூராளான மகா பாபிகள். இந்த அதமர்களை ஜனன மரணத்தோடுகூடிய சம்சார சாகரத்தி லகப்படுத்தி பாபயோனிகளிடத்து பிற க்கும்படி கடவுளின் ஆக்கினையானது நேரும். அவரின் ஆக்கினையின் பலனுகவே மூடமான பாம்பு புலியாதிகளா கப் பிறப்பர். அப்பாலும் ஜன்ம ஜன்மங்கள்தோறும் நிகி ருஷ்டமான கிருமிகீடாதி சென்மங்களையு மடைவர். ஆத லால் யாவரும் அசுரசம்பத்தை யடையாது தெய்வசம்பத் தை அடையமுயல்வதே நன்று என்று சத்தியசீலன் சொல் லக்கேட்டும் தந்தையாகிய வஞ்சகசித்தனின் மனம் திரும் பில. சற்றுநேரம் மௌனமுற்றிருந்து தன் மைந்தனை நோக்கி எனது புதல்வசிகாமணியே! நின் மதியூகத்தை இன்று கண்டேன். ஆநந்தம் கொண்டேன். நான் அரச குமாரனை தேற்றி இப்பதியை ஆள போதித்து அழைத்து வருமளவேனும் குமாரப்பிரத்தத்தை அரசனின் பிரதிநிதி யாக இருந்து ஆண்டுவருவாயாக என்று ஆக்கியாபித்து மைந்தனைவிட்டு கபட எண்ணங்கொண்டு நாட்டைவிட்டு காட்டை நோக்கிச் சென்றான். சென்றவன் அரசகுமார னின் உத்தம தவவேடத்தைக் கண்டு பிரமித்தான். பிரமை கொண்டும் அஞ்சிலன். வஞ்சக நஞ்சுடைய மந்திரியோ அரசகுமாரன்பால் சென்று ஆசீர்வதித்து, என் அன்புள்ள அரசகுமாரனே! தாய் தமக்கையரையும், மேன்மையான

அரசையும் வெறுத்தனை. இவற்றை வெறுத்துப் பின் எது பெறுதற்காகத் தவஞ்செய்ய நினைத்தாய். துன்பப்பட்டவன்தான் பின்னர் இன்பத்தையும் அடைவன். அது உன்னளவன்று. இந்த மூவுலகத்திற்கும் உரிய இயற்கையாகும். தேவர்களுள்ளும் முனிவர்களுள்ளும் யாவர்தாம் மங்கையர் இன்பத்தை வெறுத்துவிட்டவர்? ஒருவருமில்லை. எவரினும் மேம்பட்ட பிரமன், விட்டுணு, உருத்திரன் என்னும் மும்மூர்த்திகளன்றோ, தம் மனைவியர் வேறாக இருத்தற்குச் சகிக்காது நாவிற் குடியிருத்தியும், மார்பில் அரசுசெய்ய வைத்தும், பாதியுடம்பாகியும் மருவி வாழ்கின்றார். மங்கையரைப் பெறும் இன்பமே யின்பம். மற்றனவெல்லாந் துன்பம். செல்வமியாதெனில் அழகுடைய மடந்தையரை யதிகமாகப் பெறுதல். வறுமையென்பது எதுவென விசாரணை செய்யுங்கால் அன்னவரை யில்லாமையே. அதுவே கொடிதினுங் கொடிதாய வறுமையாகும்.

மங்கையரிடம் ஆலிங்கனம், சும்பனம், தாடனம், மைதுனம், நகவர்ணனை யென்னும் பஞ்சலீலைகளையும் பஞ்சமுத்திரையாகக்கொண்டு அவர்கள் கண்ணோக்க வருள்பெறுகையே சட்சுதீக்ஷை, அவரடியா லுதைபடலே திருவடித்தீக்ஷை, அவர் மெய்தொட்டுப் பயிறலே பரிசதீக்ஷை, அவரது இனிய மழலைச் சொற்களைக் கேட்டலே வாசகதீக்ஷை, அவரிட்ட வேவல்செய்தலே தவம், மற்றையனவெல்லாம் அவம், அவர்களை முத்தியிடுவதே சுகமுத்தி, அவர்கள் உறுப்புக்களே பதமுத்தியாகும். இருதனங்களே பரஞானம், அபரஞானம், இருவரும் கூடுவதே மகாயோகம், இவர்கள் லீலைசெய்கையே சற்கருமம், அவையில்லாமல் வேறொன்று கொள்வதே துர்க்கருமம், அவரால் வருமின்பமே பேரின்பம்.

இங்ஙனம் பிரத்தியக்ஷமா யிருக்கிற இவ் வின்பங்களை வெறுத்து வேறோர் இன்ப மிருக்கின்றதென்று துறந்து பூசிப்பவர் யாவரும், காணப்பட்ட தண்ணீரையுண்டு கனை

தீர்ந்து சுகமுறுது. கானற்சலத்தை நீரென்று அலேந்து அலேந்து தாகம் வருத்தச் சாவதுபோலும். மும்மூர்த்திகளும் பெரியவராய் விளங்கியது எதனுல்? பெண்களாகிய தஞ்சத்திகளே நீங்காது இருத்தலானன்ருே? மங்கைமார் போகம் கூடாதென்று வெறுப்போர் நோயாளிகளும், வலிமையற்றவர்களும், புருடத்துவ மில்லாதவரும் பேடு அலிகளுமேயாம். அவரின்பத்தால் வருஞ் சிறப்பை யறியாதவரே அவ்வின்பத்தைச் சிற்றின்பமென்று இகழ்வர். காம தந்திரங் கூறியவாறு கலப்பாராயின் அதுவே பேரின்ப மென்றதற்கு இழுக்கென்னே? மகளிரோடு கலந்து உண்டுடுத்து வாழ்வதே சுவர்க்கவின்பம். அது பெருது பகைவராலும், நோயாலும், வறுமையாலும், நூற்கொள்கைகளாலும், பிறவற்ருலும் வருந்துவதே நரகத்துன்ப மெனப்படும். சுவர்க்க நரகங்கள் இவையேயன்றி வேறில்லே.

கண்ணுற் காணப்படுவன எவையோ அவைகளே யுண்மையெனப்படும். அவற்றைவிட்டு அநுமானமென்றும் ஆகமம் என்றும், ஐதிகமென்றும், சம்பவமென்றும், பாரிசேடமென்றும், அபாவமென்றும் பற்பல அளவைகள் கட்டிக் காணுத பொருள்களே யெல்லாம் உண்மை உண்மையென்று கத்திக் கத்தி மண்ணுய் மடிந்தார் பலர். கடவுள் இருக்கிருர் என்று கதறுவர். அப்படி யொன்றுளதேல் கண்ணிற்குக் காணப்படுமன்ருே? அங்ஙனமில்லாமையால் கடவுள் உண்டென்பது பொய். அது ஆகாயத்தில் மரம்பூத்துக் காய்த்துப் பழம் பழுத்தது என்பதுபோலவும், மலடி மகன் முயற்கொம்பேறி ஆகாயப்பூவைப் பறித்தான் என்பதொக்கவும் இருந்ததென் றறிக.

மண், நீர், நெருப்பு, காற்று என்னும் நான்கு பூதங்களும் பிரத்தியக்ஷமாகக் காணப்படலால் அந்நான்கு பூதங்களுமே தெய்வமாம். இவையே எப்போது முள்ளனவாம். இவை யொன்ருேடொன்று சேர்ந்த காலத்தே உடம்பு தோன்றும். இவற்றுள் ஒன்று பிரிந்துவிடின் அவ்வுடம்

பும் அழியும். வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு என்னும் முப்பொருள்களுங் கூடியவிடத்தே சிவந்த நிறமொன்று தோன்றுவதுபோல நாற்பூதங்களுங் கூடியவிடத்தே யோருணர்வுண்டாம். அது உடம்பு வளர வளரத் தானும் வளரா நிற்கும். உடம்பு தேயத்தேயத் தானும் தேய்ந்தொழியும். உடம்பிற்கு வேறே யுயிரென்பதும் பொய் சரீரத்திற்கு இன்பதுன்பங்கள் இயல்பாகவுள்ளன. இன்ப துன்பங்களுக்கு வினையே காரணம் என்பது முழுப்பொய். கையின்கணுள்ள விரல்களும், காலின்கணுவள்ள விரல்களும், ஏற்றதாகவும், குறைவாகவும், துற்கந்த நற்கந்தங்களும், சுவைப் பொருள்களும் ஒன்றற்கொன்று ஏற்றமாகவும், குறைவாகவும் இருத்தலால் அவை யங்ஙன மிருத்தற்கு என்ன கன்மஞ்செய்தன? ஆதலால் இவ்வேற்றக் குறைவுகள் இன்ப துன்பங்களெல்லாம் நாற்பூதங்களின் ஏற்றக் குறைவுகளன்றி வேறல்ல. குயிலைக் கூவுவித்தாரையும், மயிலைச் சித்திரித்தாரையுங் கண்டிலேம். ஆதலால் கடவுளொருவனுட்டி யுறக்கியாட்டுகின்றா னென்பது பிதற்றே. எல்லாம் இயற்கையாகவே யமைந்துள்ளன. இந்தத் தேகம் விட்டுப் பின்னொரு தேகம் எடுப்போ மென்று கூறுவது அவிந்துபோன விளக்கு ஓரிடத்திற்போயிருந்து மீளவும் வேறோர் திரியிலே பற்றி யெரியுமென்பதை யொக்குமாதலால் மறுபிறப்புண்டென்பதும் பொய். இவ்வுண்மையுணரா அறிவீனர் மறுபிறப்புண்டென்று தவங்கள் பட்டினி முதலியவற்றான் வருந்துவர்.

கற்ப முதலிய மருத்துவ நூல்கள் வலிமையில்லாதொய்ய அறிவினராற் கட்டப்பட்டன. இரணியதானம், அன்னதானம், பூதானம் முதலியவற்றை யுயர்வாகக்கூறும் நூல்கள் பசியினால் வருந்திய வறியவராற் செய்யப்பட்டன. மடம், சத்திரம், ஆவுரிஞ்சுதறி, சுமைதாங்கி, கிணறு, நந்தவனம், பொய்கை, தலம், தீர்த்தம் முதலியவற்றை மேன்மையாகக் கூறும் நூல்கள் நடந்து நடந்திளைத்துச் சோர்ந்த

வழிப் போக்கராற் செய்யப்பட்டவை யாகும். வினைகள் பிறவிகடோறும் வந்து சேருமென்றல் ஒரு இடத்திற்போட்ட எரு மற்றொரு இடத்துப் பயிருக்கும் வந்து பலிக்குமென்பது போலுதலால் அதுவும் பொய்யாம். ஆதலால் தேகமே யான்மா, பூதமே தெய்வம், போகமே முத்தி என்று இன்னனவற்றை யெல்லாங்கூறி மன்னவன் மைந்தன் மனத்தைத் திருப்பி மாதர்மீது விருப்புறச் செய்தான்.

இக் குறிப்பைக் கண்ட மந்திரி அரசகுமாரனை, குமாரப்பிரத்தத்திற் கழைக்க அவ்வண்ண மிசைந்து மந்திரியுடன் அந்தப்புரமடைந்து அன்னையாரையும் தன்னுடன்பிறந்த மங்கையையும் கண்டானந்தித்த பின்னர் அங்குள்ளோர் அனைவரும் மந்திரியின் மதியூகத்தைக் கொண்டாடி அவரில்லமேக விடைதந்து மேற்கொண்டாக வேண்டியவைகளைக் கவனிக்கும்படி வேண்டிக்கொண்டனர்.

அன்றிரவெல்லாம் மிக்க கவலையுடன் தனது வஞ்ச எண்ணங்கள் கைகூடுமாறு யோசித்து மனோதிடம் செய்துகொண்டு குமாரப்பிரத்தத்தை ஆண்டுவரும் அரசனின் பிரதிநிதியான தன் மைந்தன்பால் சென்று ஓர் சுற்றுத்தரவை வெளியிடுமாறு கூறினன்.

சுற்றுத்தரவு.

"குமாரப்பிரத்தத்தின் இளவரசர் துறவறம்பூண்டு வனத்திலேகித் தவம்புரிந்து வந்தமையை இந்நாட்டின் பிரஜைகள் அனைவரும் அறிவர். நாடாளும் பாக்கியம்பெற்ற அரச சந்ததியார் இல்லாக்குறையை அறிந்த மந்திரியார் தமது புதல்வனாகிய என்னை அரசரின் பிரதிநிதியாய் இருந்துவரும்படிச் செய்து தாம்வனமேகி இளவரசரை நாட்டின் செங்கோல்முறை தாழாது ஆளப்போதித்து அழைத்துவந்தனர். துறவறத்தை அகற்றவும் இல்லற இன்பங்களை அனுபவிக்கவும் செய்யவேண்டி இருத்தலின் நமது பிரஜைகளில் சங்கீத சாகித்திய பரதநாட்டியத்திற் சிறந்த அழகிய பெண்மணிகள் அரசகுமாரர் மணம்புரியுமளவும் வேண்டும். அவர்களின் தொழிலோ இளவரச

ரைச் சந்தோஷிக்கச் செய்யக்கூடியதாய் இருத்தல்வேண்டும். சாமார்த்தியத்திற்கேற்ற சன்மான மளிக்கப்படும். அபேக்ஷிப்போர் அரசரின் சபைக்கு வருக."

இப்படிக்கு,
சத்தியசீலன்.
அரசரின் பிரதிநிதி.

இவ் விளம்பரத்தைக் கண்ணுற்ற ரூபாவதி என்னும் தாசிக்கு ஓர் குமாரத்தியுண்டு. அவள் வெகு ரூபவதி வனப்புக்களஞ்சியம், அவளை கண்ணாரக் காணவேண்டுமேயன்றி எண்ணிக்கருதி எழுதிமுடியா ! மோகமேதிரண்டு வந்ததற்கேற்பப் பூரணச்சந்திரனைப்போற் பொலிவுபெற்ற திருமுக வெழிலும், மாந்தளிரின் நிறத்தையுங் கவனுறச்செய்யும் திருமேனியோ பன்முறையு முருக்கிய பத்தரைமாற்றுப் பொன்மேனி! வடிவைக்கண்டோர் இரணியப்பதுமையோ, அரம்பைத்தலைவியோ, என மெய்ம்மறந்து நிற்பர். கடைக்கண்ணால் கண்டாலோ கண்டவர் இமைகொட்டாது விழிப்பர், அவளணியும் மணிகளோ அவள் பொன்மேனியையிரந்தே ஒளிபெற்று விளங்கும், மொழிகளைக் கேட்டோர்க்கு கரும்பும் கற்கண்டும் கலந்ததை யொக்கும். விழிகளோ காந்தத்தை நிகர்வன, குரலோ குயிலும்வெட்கி நாணமடையும், தொழிலோ மூஷிகத்தைத் தோற்கச்செய்யும் சமர்த்துடையன, குணமோ பரமசிவனுண்ட நஞ்சினுங்கொடிது.

இத்தகைய பேரெழில்வாய்ந்த பெண்மணியை வாய்க்கப்பெற்று இருபது ஆண்டளவேயாயினும் அவளை நேசிக்கும் ஓர் ஆண்காளை கிட்டாது தாமரையிலையில் விழுந்த ஜலத்துளியொப்ப ரூபாவதி தத்தளித்து ஏங்கிக்கொண்டிருந்தனள். ஏன் ? மோகனமாலையைக் கோரும் புருடர் செல்வத்தில் தாழ்ந்தவ ராதலாலேயாம். குணத்திலும், அழகிலும், வித்தையிலும் சிறந்தோர் எண்ணி லடங்கார். அவளைக் கோரி அடையமுடியாது ஏங்கி வாடுவர். சுற்றுத்தாரவைக் கண்ட ரூபாவதி என்னும் தாய்க்கிழவி

விரைவில் தனது புதல்விக்கு விடயங்களைத் தெரிவிக்க முயன்றனள். அவளுடைய பேராவலென்னும் பெரும்பேய் முன்னுக்கிழுக்க ஆசை எனும் காற்றில் அகப்பட்ட இலவம் பஞ்சு எப்படி அல்லல்படுமோ அவ்வகைப்பட்டுத் தள்ளாடித் தள்ளாடி, நஞ்சேதிரண்டு ஒருருவாய்வந்த மோகனமாலையை அணுகினளாயினும் கையிலுள்ள துண்டுப்பத்திரத்தைக் கைநீட்டித் தரவும் முடியாது கண்ணிற் படும்படி செய்தாள். கண்டாள் மோகனமாலை! என்ன அம்மா இத் துண்டுக்கடிதம்! தாங்கள் அதி குதூகலத்துடன் வருவது யான் செய்த பாக்கியம். சூரியனைக்கண்ட தாமரை மலர்போல் முகமானது பிரகாசிக்கினும் விரைவில் என்னுடன் வார்த்தையாடாது இருப்பதேன்! தங்கள் கையிலுள்ள கடிதத்தை யான் பார்க்கக்கூடியதாயின் சற்றுத் தயை செய்யுங்களென்றாள். இம் மதுர மொழிகளைக் கேட்ட தாய்க்கிழவி பின்னும் ஆனந்தித்துக் கரத்தைநீட்டி 'ராஜ விளம்பரத்தைத் தந்தனள்.

இதைக் கண்டவுடனே ஆனந்தம் கொண்டனள். இன்றல்லவோ நான் புண்ணியவதியானேன், இப்பதிக்கு யானே அரசியாவேன், எனது மோக மையலில் இளவரசர் சிக்குண்டு எனது சொற்படி நடக்கச்செய்வேன். அன்னையாகிய நீரே மந்திரிபதவியை வகிக்க நேரிடும். ஆதலால் எனது அன்னையே இன்று மாலையே அரசரின் சபைக்குப் போகவேண்டியதற் கேற்றவண்ணம் சித்தப்படுத்திப்போவோமெனக் கூறித் தாயுடன் சர்வ அலங்கார ஆடம்பரங்களுடன் ராஜசபைக்கேகினள். இவர்களைப்போலவே சுற்றுத் தரவைக்கண்ட் பல தாசிகளும் சென்றனர்.

மந்திரியின் சூது.

ஏற்கனவே பலவகையிலும் வஞ்சித்தும் தன் மகனாகிய சத்தியசிலனால் பயன்பெறாது போயினும் மந்திரியாகிய வஞ்சகசித்தன் தனது புதல்வனிடம்சென்று எனது

தவப்புதல்வனே! இன்று அரசகுமாரனிடம் உனது ராஜ பதவியை ஒப்புவித்து அவனுக்கேற்ற குலமகளைத் தேடி விவாகச்சடங்குகளை விரைவில் முடித்து அவன் அரசாளவும், நீ மந்திரியாகவு மிருக்கும் பாக்கியத்தை யான் கண்ணால் காணும்படி செய்வாயாக! நீ கூறிய உத்தமபோதனையின் பலனாக வனத்திலிருந்த அரசகுமாரனை அழைத்துவந்தேன்; அவன் தவவேடத்தைக் குலைத்து அரசகோலம் கொள்ளும்படி செய்தேனாதலின் அவன் மனம் உலகவிஷயங்களிற் களிப்புறும்படிக்கு ஆடல் பாடல்களில் வல்லவர்களை வரும்படி சுற்றுத்தரவை அனுப்பும்படித் தெரிவித்தேன். உத்தம எண்ணம் கொண்ட யானோ நீ வருமளவும் மந்திரி பதவியை வகித்து வருவேனென்றான்.

'தந்தைசொன்மிக்க மந்திரமில்லை' என்றபடி அன்றே அரசபதவியினின்று நீங்கி தந்தை கூறியவாறு அரசருக்கேற்றமனைவியைத்தேடுவதில் மனதைச்செலுத்த ஆரம்பித்தனன். தாசிவேசிகளின் கூட்டமோ தர்பாரை அணுகியது! மந்திரியோ, அரசனை மாதர்வலையிற் சிக்குண்டு நாசமடையும்வண்ணம் ரூபவதிகளைப் பார்த்து தற்பாருக்கனுப்பும் தொழிலில் மிகக சிரத்தைகொண் டுழைக்கலானான். ஒருவாறு சபைக்கேற்ற மாதரை அமைக்கும் தருவாயில மோகனமாலையும் மெல்லென வந்தணுகினள். கண்டான் மந்திரி! ஆநந்தம்கொண்டு அகமகிழ்ந்தான். இவளால்தான் நாம் நினைத்த காரியம் முடிவுக்கு வருமெனத் தீரஎண்ணங் கொண்டு ராஜசபைக்குப்போக அனுமதிதந்து தானும் அரசன்பால் அமர்ந்தான். சபையிலுள்ள அனைவரும் மோகனமாலையைக்கண்டு வியப்புற்றனர். அரசனோ அவளின் ஆடல் பாடல் அபிநயங்களையும் ரூபலாவண்யத்தையும் கண்டு மையல் கொண்டான், மந்திரிமகனோ தந்தையார் ஏதோ காரணார்த்தமாய் இம்மாய அமைப்பை அமைத்தாரென்றும் தாசிகளின் சூழ்ச்சி அரசனாகிய குணசுந்தரனைச் சிக்குண்டு நாசமடையச்செய்யுமென்றும் வெறுப்புற்றனன். ஒருவாறு

நடனசபையும் கலேந்தது. அதற்கு முன்னரே அரசரும் அந்தப்புரம் சென்றார். சென்றாராயினும் காமாந்தகாரத்தில் ஆழ்ந்தார், விலேமாதரை நினைந்து நினைந்து நொந்தார், நீதியை நினைந்து அஞ்சினர், காமத்தீயோ அணேந்தில, மந்திரியார் போதித்த லோகாயத மதக்கொள்கையை எண்ணினர், அச்சத்தைத்துறந்தார், மந்திரியை அழைத்துத் தனது விருப்பத்தை வெளியிட்டார், புன்மதியோன் மோகனமாலேயை அரசன் விருப்பத்திற்கு இணங்கச்செய்து வஞ்சநெஞ்சு படைத்த வேசியின் மோகவலேயில் வீழ்த்தி விட்டனன். அன்றுமுதல் அரசன் சபையைத்துறந்து நீதியை மறந்து காமாந்தகாரமென்னுங் கள்ளுண்டு களித்து அரண்மனேயிலுள்ள ஆடை ஆபரணங்களே மோகனமாலேயின் சொற்றவருது கொடுத்துவந்தனன். பொக்கிஷத்திலுள்ள தொகைகளோ ஒழிந்தன. இவைகளேச் சமபாகமாக மந்திரியும் மோகனமாலேயும் கவர்ந்து வந்தனர். பொக்கிஷத்திலுள்ள தொகை ஒழியவே குடிகளிடம் ஆறில் ஒரு கடமை வாங்குவதைவிட்டு மூன்றி லொன்று வாங்க அரசன் அனுமதியை மந்திரியாகிய வஞ்சகசித்தன் பெற்று வசூலித்துத் தானும் மோகனமாலேயும் சூறைகொண்டு வந்தனர். அரண்மனேச் செலவிற்கே கஷ்டம்வந்து நேர்ந்தது. அரசன் தாயும் தமக்கையும் வருந்தலாயினர். குடிகளோ அதிக வரிப்பளுவைத் தாங்கமாட்டாது வறுமை என்னும் நோயால் பீடிக்கப்பட்டுக் கலங்கலாயினர். சிலர் அயல்நாட்டிற்குக் குடிபுக ஆரம்பித்தனர். இத்தருணத்தில் அரசனே தன் மாளிகையை விட்டு மோகனமாலேயின் மாளிகையையே தனது ஸ்திரவாஸமாளிகையாகக் கொண்டனன். தாயையேனும் தனது தங்கையையேனும் கண்காணித்திலன். வருடமோ இரண்டாயின. கையிலுள்ள பொருள் யாவும் வறண்டன. இனி மோகனமாலேக்குக் கொடுக்கவேண்டியது குமாரப்பிரத்தம் ஒன்றேயாகும். மோகனமாலேயும் குமாரப் பிரத்தத்தைத் தனக்குப் பட்டம் கட்டும்படி அரசனே வற்புறுத்தி வந்தனள். மந்திரியின் சகாயமின்மையால் பயன் பெறவில்லே.

என்? மந்திரியாகிய வஞ்சகசித்தன் நெடுநாளாகக் குமாரப் பிரத்தகத்தை தானும் தன் சந்ததியாரும் நிரந்தரமாக ஆள வேண்டுமென்னும் ஆவல்கொண்டிருந்தலால். எது எப்படி யாயினுமாகுக, மோகனமாலையின் கையில் குமாரப்பிரத்தம் விழுந்துவிடக்கூடிய தருணத்தில் வந்துவிட்டது. மந்திரி யின் சூழ்ச்சிகள் யாவும் பயனற்றுப்போம்படி மோகன மாலை கவனித்து வந்தனள். ஆகவே மந்திரி மோகனமாலை யின்மீது கொண்டிருந்த நம்பிக்கையைத் துறந்தான். அதி ரூபலாவண்யமுள்ள மாதர்கள் எங்குளரென்று வேவுகா ரரை அறிந்து வரும்படி அனுப்பினன். மந்திரித்தொழிலோ பேராசையால் சகுனிமாமன் தொழிலாயின. இவ்வாறிரு க்க அரசனாகிய குணசுந்தரனை அரண்மனையிலுள்ள தாயும் தங்கையும் காண அவாவுற்றும் தாசியின் வீட்டிற்கேக நா ணித் துக்கித்து சுகுணம்பாள் நிருபமொன்று விடுத்தனள்.

எனதன்புள்ள அண்ணா!

"தங்கள் சந்நிதானத்திற்கு வந்தனம். தங்களுடைய ஆசீர் வாதத்தால் சுகம். தங்களின் க்ஷேமத்தைக் கருதி அடியாளும் அன்னையாரும் சதா எல்லாம்வல்ல இறைவனைத்துதித்து மன் றாடுகின்றோம். தங்கள் முகதரிசனம் காணாது வாடிய பயிர் போல் வதங்குகின்றோம். கருணைகூர்ந்து தங்களுடைய அன் பென்னும் அமுததாரையைப் பொழிந்தால்தான் இவ்வையகத் தில் உயிர்பெற்றுலாவ முடியும். கன்மவயத்தால் வரும் தீக் குணத்தை இறைவனருளால் நீக்க முயற்சிசெய்வதே தங்க ளைப்போன்ற பெரியோர்க்குச் சொல்லாமலே விளங்குமாயி னும் அடியாளுக்குள்ள பந்தத்தால் ஞாபகமூட்டினேன். அத ற்காக அடியாளை க்ஷமிக்கப் பிரார்த்திக்கிறேன். இல்லற தர் மத்தை முறையாய் நடத்துவதைவிட்டுத் தீக்குணத்தோரை அணுகி, நன்மை பொருந்திய ஐஸ்வரியம், வீரியம், கீர்த்தி, புண்ணியம் முதலியவைகளை வேசியின் காமத்திற்கிரையாக்கி விட்டீர்கள். அத்துடன் ஒழியாமல் தந்தையில்லா இப்பேதை யைக் காப்பாற்றி சீராட்டி உத்தமரொருவர்க்கு என்னை நன் மணமுடிப்பித்து நற்புகழெடுப்பதைவிட்டும், தங்களை பாரா ட்டி யாதரித்து நமனுலகுக்குச்சென்ற தங்கள் உயிரை மீட்

டுக்கொணர்ந்த அன்னையை அறவே மறந்திருக்கின்றீர்கள். எனதன்புள்ள சோதரரே! குலமகளுடன் கூடிவாழும் பாக்கியத்தையும் அரச தர்மத்தையும் கைவிடாது அற்பநேசத்தை ஒழித்து எங்களுக்கு நுமது திருமுகம் காட்டுக."

இங்ஙனம்: தங்களன்புள்ள தங்கை

சுகுணாம்பாள்.

இவ்வகையானநிருபத்தைக்கண்ட குணசுந்திர அரசனோ! கடிதத்தைக் கண்காணிக்கவும் மனமின்றி ஒருவாறு வாசித்து வீசி முற்றத்தில் எறிந்து விட்டனன். இச்செய்கையைக் கேட்ட சுகுணாம்பாள் மனங்கசிந்து வருந்தினள்.

மந்திரி குமாரனின் வருகை.

அரசனுக்கேற்ற குலமகளைத் தேடச்சென்ற மந்திரி குமாரனாகிய சத்தியசீலன் பற்பலநாடுகளை நாடி அங்குள்ள இராஜகுமாரத்திகளின் ரூபலாவண்ய குணாதிசயங்களைக்கேட்டு மனம்பிடியாது இன்னும் பல தேசங்களிற் சென்று ஏற்ற கன்னிகையைத் தேடுமுன் ஒருமுறை குமாரப்பிரத்தம்சென்று அரசனையும் தனது தந்தையையும் தெரிசித்த பின் போக எண்ணினான். ஏனெனில், மோகனமாலையின் மையலில் அரசன் ஆழ்ந்ததையும், மந்திரியாரும் அதற்குடன்பட்டு வீழ்த்தியதையும் நினைக்குந்தோறும் சத்தியசீலனுக்கு உறக்கம்வருவதில்லை. நித்திரைக்குறைவால் பல வகை சுகவீன முற்றனன். இஃதன்றியும், மோகனமாலையின் ரூபலாவண்யத்தைவிட மேலான மாதினை அரசன் அடைந்தாலொழிய வேசியின்மீதுள்ள காமத்தீ அணையாதென்று தெரிந்துக்கொண்டவனாதலால் ஏற்ற மாது கிடையாது வருந்தினன். வருந்தியும் மோகனமாலையினும் சிறந்த அழகி கிடைக்குமென நம்பி பல தேசங்களுக்கும் போக நினைந்தான். தந்தை செய்யும் அடாத காரியங்களை எண்ணி சந்தேகித்ததினால் மற்றுமோர்முறை க்ஷேமலாபங்களை அறிந்து செல்லத் துணிந்து குமாரப்பிரத்தத்தை

வந்தனுகி எல்லையை மிதிக்கும் முன்னரே குமாரப்பிரத்தம் கிஞ்சுமாரப்பிரத்தம்போல் தோன்றியது.

எல்லைக்குட் சில அடிகள் வைக்குமுன்னரே வாடிய குடிகளைக் கண்ணுற்றான். அவர்களால் குணசீலனின் நிலைமையையும், தன் தந்தையின் சூதையும் அறிந்தான், அவர் லோகாயத மதக்கொள்கையை அரசனுக் குணர்த்தும்படியேவியதை ஞாபகத்திற் கொணர்ந்தான், சாந்தத்தைமறந்தான், தெய்வத்தை நொந்தான், அரண்மனையை நோக்கி விரைவில் நடந்தான், சூரியனில்லாத உலகுபோல் சபையில் அரசரைக் காணுது மெய்ம்மறந்தான், மைந்தனைக் கண்ட வஞ்சகசித்தனுகிய மந்திரி மகனை மார்போ டணைத்துத் தேற்ற முயன்றான். சித்தஞ்சோர்ந்த உத்தமனுகிய சத்திய சீலன் தந்தையை நோக்கி, தந்தாய்! நீர் செய்வது நன்று! நன்று!! அன்பின் வழிநில்லா உமக்கும் ஓர் புத்திரன்வேண்டுமோ? நீர் செய்யும் அடாத காரியத்திற்காக உமக்கு எரிவாய் நரகு சித்திக்குமேயன்றி வேறு புண்ணியத்தையாவது புருஷார்த்தத்தையாவது அடையவேமாட்டீர்.

"அறனறிந் தான்றமைந்த சொல்லானெஞ் ஞான்றுந்
திறனறிந்தான் றேர்ச்சித் துணை."

உத்தமகுணம் வாய்ந்தோரும் சர்வஜீவப்ராணிகளிடம் அன்பு பூண்டோரும், தருமங்களை யறிந்து தொழில்செய்வோரு மல்லவா மந்திரி பதவியை வகிக்க அருகராவார். அன்பற்ற மந்தமதியினராகிய நீரோ மந்திரி? ஏற்கனவே உமது குரூர குணத்தையறிந்தே யான் எனது ஆசாரியரிடம் கேட்டுணர்ந்த அருமையான நீதிகளை உமக்கு விஷய தானமுஞ் செய்தேன்.

"அன்பிலாரெல்லாந் தமக்குரியர்" என்றார் பெரியோர். அன்பாவது தம்பயன் விரும்பாது பிறரிடத்தே தோன்றும் உள்ள நெகிழ்ச்சியாம். இவ்வன்பொன்றே மக்கட்கு வேண்டப்படுவதாயுள்ளது. அன்பில்லாத பிறவியால் மட்டுணையும் பயனின்றாம்' அஃது உயிரில்லாத உடப்புபோலாகும்.

அன்பில்லாது சீவித்தவாழ்நாள் வாழ்ந்தநாளெனப்படாது. அந்நாட்கள் பிறவாநாட்களேயாம். ஆதலால் அன்பிற் சிறந்ததொன்றுமில்லை. அதனாற்றான் அன்புஞ் சிவமு மிரண்டேன்ப ரறிவிலார் என்றார் திருமூலரும். அன்பே பரம்பொருளாகும். அதைக்கொண்டவர் யாவரும் பிறர்க்குஎன்பானும் உரியர், "அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையார், என்பு முரியர் பிறர்க்கு" என்னும் உத்தரவேதத்தை உய்த்துணர்ந்திலீர் போலும். இதனாலன்றோ கண்ணப்பநாயனார் காளத்தியப்பர்க்குத் தங்கண்ணையிடந்து சாத்தினார். அதனை "கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை கண்டபின்" என்று திருநெறித் தமிழ்வேதமும் முழங்கிச் சிறப்பித்தது. ததீசி முனிவரும் உயிரை விடுத்துத் தேவர்களைக் காக்கவில்லையா? சிபி என்னும் சக்ரவர்த்தியும் தன் உடற்சதைகளை யரிந்துவைத்தும் துலை நிறையாகாமையால் தன் என்போடு தன்னையும் உதவவில்லையா? வாசுதேவப்பெருமாள் அர்ச்சித்தகாலத்தில் மலரொன்று குறைய அதற்காகத் தன் கண்ணைத் தோண்டிப் பரமபதியாகிய சிவபெருமானது இடப்பக்கத் திருவடியில் அர்ச்சித்து உபய கண்ணப்பர் (இரண்டாவது கண்ணப்பர்) கண்ணர் தாமரைக்கண்ணர் எனத் திருநாமம்பெற்றுச் சிறந்த அடியவராய் விளங்குகின்றாரே! இவ்வாறு செய்த அன்பினர் சரித்திரம் எத்தனையோ உள. அவைகளெல்லாம் அன்பின் மாட்சியைத் தெரிவிக்கின்றன. ஆதலால் யாவரும் எவரிடத்தும் அன்புவைத்தொழுகவேண்டும். அஃதாவது ஒருவர்க்கு தெய்வத்தாலாவது பிற உயிர்களினாலாவது, தம்மாலாவது துன்பம் நேர்ந்தவிடத்து அவற்றைநீக்கி யின்புறுத்தலன்றோ அன்பு! தந்தையே! அன்பிற் சிறந்தது ஒன்று உண்டு. அஃதென்னெனின் "அறிவை வளர்த்தல்" நோய், பசி, கொலை முதலிய துன்பங்களினின்று நீக்குதல் சிறந்ததன்று. தடாகமெடுத்தல், அன்னதானஞ் செய்தல், சத்திர மமைத்தல், உடையுதவல், குடை, தொடுதோல், ஆசன மிவை கொடுத்தல் முதலியனவும் அத்துணைச் சிறப்பினவல்ல. அவை எல்

லாம் சிறிது பொழுது சிற்றலானும், அவற்றைப் பெறுவது பெற்ற காலத்துப் பேணுவதும், பேணுத சோர்வில் இழத்தலும் துன்பமே யாதலானும் அவையெல்லாம் இன்பத்தை விளைவிக்கா இதற்கு உதாரணமாக ஓர் சிறியகதை சொல்லுகிறேன் கேளும்.

முன்னர்க் காலத்திற் கோகுலாபுரத்தை யாண்டிருந்த பகூதன் என்னும் அரசன் ஒருவன் உலகவின்பம் துன்பமே யெனத் தன் மனதிலெண்ணிப் பத்திரகிரியார்போல் துறந்து தவஞ்செய்வான் காட்டையடைந்தான். பக்குவ வடைவினுலே பகூதன் என்னுஞ் சந்நியாசியாய்க் கோவணமொன்றன்றி வேமுென்றுங் கொள்ளாருயினுன். அதனைக் கண்ட அன்பர்கள் கௌபீனதானஞ் செய்துவந்தனர். அவற்றை யெலிகள் கறித்துவரக்கண்ட சந்நியாசி மனம்வருந்தி யவற்றைக் காப்பாற்றுதற்குப் பூனைக்குட்டி யொன்றைத் தேடுவானுயினுன். திரிந்து திரிந்து அரிதிற்கிடைத்த பூனையைக் கொண்டுவந்தான். அது மாய் மாய் என்று ஓயாது கூச்சலிட அதைத் தணித்தற்குப் பால் வேண்டுமேயென்று ஆடு தேடினுன். அதனை வளர்த்தற்கு ஓர் சிறுவனையும் கொண்டுவந்தான். அவன் பருவம் முதிர அவனுக்கு விவாகம்பண்ண ஓர் பெண்ணையும் சம்பாதித்தான். அவளும் பூப்பிளக்கவரு மேழைப் புற்றீசல்போலப் புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெற்றுள். பகூதன் பார்த்துப் பரக்கப் பரக்க விழித்தான். அச்சோ! இவ்வளவு துன்பங்களும் கௌபீனதானஞ் செய்தாரது கொடுமையே என்று வருந்திக் கௌபீன மினிவேண்டாமென்று ஓட்டம் பிடித்தான். ஆதலால் ஆன்மாக்களின் துன்பங்களை யகற்றுதற்கு என்ன தானங்கள் செய்யினும் அவை துன்பத்தையே கொடுக்கும். அறிவாகிய ஞானபோத மூட்டலே அன்பிற்குச் சிறந்ததாகும். அந்தத் தானமொன்றே துன்பத்தைக் கொடுக்காது. ஞானமுளதேல் அவர்க்கு ஓர் துன்பமும் அணுகாது. ஆதலால் சிவஞான தானமாகிய அறிவை விளங்கச் செய்தலாகிய தானத்தைச் செய்து அறிவை வளர்த்தலும்,

வளர்ப்பித்தலுமே மேலான அன்பாகும். தாங்கள் அரச குமாரனிடம் வைத்த அன்போ கல்லினுங் கடியவன்பாம்: தாங்கள் செய்த விஷயதானமோ விஷமான காமத்தீ, அத் தீயால் ஓர்பிரகாசமுமின்று. அத்தகைய அந்தகாரமென்னும் வீட்டில் அறிவற்றவன் வாழ்வதற்கொப்ப அரசகுமாரனை வாழும்படி செய்து இக் குமாரப்பிரத்தத்தை நீதி என்னும் வரம்பு கடந்து ஆண்டுவருகின்றீர். உமது ஆளுகை எம் மட்டுமென எண்ணிக் கருதினீரா, இல்லை இல்லை. இத்த கைய சூதும் பொறாமையும், தந்நயங் கருதுதலுக்குத் தக்க தண்டனையை அடையும் காலத்தில் உமக்கு எவர் உற்ற துணைவராய் இருந்து மீட்பர்? குணசீலனுக்குப் போதித்த லோகாயத மதக்கொள்கையாவது, வேசியாவது, இந் நகர மாவது உமது பிள்ளைகளும் சுற்றமும் உமக்குப் பிரயோ ஜனப்படுமோ? உம்மைப்பற்றித் தொடவர்வது பாப புண் ணியமன்றோ? இத்தகைய அநியாயங்களில் தலையிடும் உம் மைப்போன்றவர்களுக்குத் தர்மதேவதை தயவுகாட்டுமா? சகல ஜீவர்களையும் நசிக்கச்செய்யும் மிருத்யுதேவதை உம் மை இலேசில்விடுமோ? மரணத்துன்பத்தை நீர் நினைந்திருந் தால் இத்தகைய தீத்தொழில் செய்யத் துணிவீரா? முன் செய்த தவப்பயனல்லவோ உம்மை மந்திரி பதவிக்குயர்த் தியது? நீர் எங்குசென்று ஒளிந்தாலும் உம்மைப்பக்ஷிக்க மிருத்யு எதிர்பார்க்கிறதை அறியீரோ! உதாரணமாக இன்னுமோர் கதை சொல்கின்றேன் அதையும் கேட்டுத் தெளிவீராக.

மயேந்திரபுர வாசியான ஓர் க்ஷத்திரியன் உலக இன் பத்தை வெறுத்துத் தவக்கோலங் கொண்டு இரத்தினபுரத் தருகிலுள்ள காட்டில் தவம்புரிந்து வந்தனன். தவமகிமை யால் இரத்தினபுரத்தோருக்கும் மற்ற நகர வாசிகளுக்கும் பல நன்மைகளைச் செய்து வரவே சகலஜனங்களும் தப சியைக்கொண்டாடத்தொடங்கினர். இதைக்கண்ட தபசிக் கோ மமகாகர்வம் என்னும் பேய்பிடித்தன. இரத்தினபுரம் சென்று தன் பெருமையை நிலைநாட்டிப் பிரஜைகள் தன்னை

வணங்குவதைக் கண்டு ஆநந்திக்க விரும்பி இரத்தினபுரம் செல்ல ஆரம்பித்து அவ் வெல்லையை யடையுமுன் மிருத்தியுதேவதை ஓர் சுந்தரமான புருடவடிவங்கொண்டு தவசியைக்கண்டு அஞ்சலிசெய்து மிக்க பணிவுடன் தபோநிதே! தங்களுடைய ஆஸ்ரமத்தைவிட்டு இப்புரமெய்தற்கு யாங்கள் செய்த பாக்கியமே பாக்கியம். தங்களுடைய பாத தாமரைகள் இரத்தினபுரத்திற் பதிந்தகாலத்தே எல்லோரும் கிருதார்த்தராவோம். எங்கள்மீது அன்புகொண்டு அப்புரத்தில் சிலநாட்கள் வசித்து எங்களை ஆசீர்வதித்தல் வேண்டும். தங்களின் வருகையைக்கண்டு பயபக்தி விசுவாசத்துடன் எதிர்கொண் டழைத்தேகவந்த என்னை இரக்ஷித்தருளல்வேண்டுமென மற்றுமோர்முறை அடிவணங்கினன்.

இவற்றைக் கண்ட தபசி ஆநந்தங்கொண்டு அவனை ஆசீர்வதித்து அவனுடன் செல்ல உடன்பட இருவரும் இரத்தினபுரம் நோக்கிப் பிரயாணமாயினர். சற்று தூரம் சென்றபின்னர் அங்கிருந்த அரசமரத்தின்மீது வாலிபன் ஏறினான். தபசியோ வாலிபன் யாதுகாரணம்பற்றி மரத்தின்மீது ஏறுகிறான் என்று ஐயமுற்று அவனையே உற்று நோக்கியவண்ண மிருந்தும் வாலிபன் காணாது மறைந்தனன். மறைந்த நிமிஷமே அம்மரத்தில் இலைகளில் ஒன்று பூமியில் விழுந்தது. அதினின்றும் ஓர் கிரியின் உருவம் தோன்றி ஓடத்தலைப்பட்டது. இதைக்கண்ட தபசி அச்சமுற்று அதன் உண்மையை அறிய அதன்பின் தொடர்ந்தோடினன். எதிரில் ஓர் சர்ப்பம் சந்திக்க அதைக் கிரி இரண்டு துண்டாக்கி ஓர் பூனையின் உருவெடுத்து அங்கிருந்த எலியைக் கொன்று மறைந்து சுந்தரமான பெண் வடிவம் கொண்டு சென்றது. அவ்வழியேவந்த மந்திரி குமாரனும், படைத்தலைவன் குமாரனும் அம் மாதைக் கண்டு மோகமுற்று சுந்தோப சுந்தர்களைப்போல் அமராடியதில் மந்திரி குமாரனிறந்தான். படைத்தலைவன் குமாரன் அம் மாதைப் பலவந்தஞ்செய்து கூடி மரணமுற்றான். உடனே அம்மாது

மிகவும் துக்கமுற்றவள்போல் அபிநயித்துச் செல்ல முயன்
றாள். இவைகளைக்கண்டு ஆச்சரியமுற்ற தபசி அம்மாதைப்
பணிந்து இரண்டு கைகளையும் கெட்டியாய்ப் பிடித்துக்கொ
ண்டு அம்மணீ! இதென்ன விந்தை இவ்வகையான ரூப
மெடுத்தது எதற்கு? உமது சரித்திரத்தைக் கேட்டறி
யாது ஒருகணப்போதும் வாழ முடியாது. தயவுகூர்ந்து
அறிவிக்கும்படி வேண்டிநின்ற தபசியை அகல, பரிதபித்து
ஓய் அதம தபசியே! யானே மிருத்தியுதேவதை. இது
எனக்குற்ற விதி. எல்லாம்வல்ல இறைவன் இட்ட ஆக்கி
னைப்படியே இக்காரியங்களைச் செய்துவருகின்றேன். மரத்
திலிருந்த கிருமியைக்கொன்று அவ்விலையுடனே தாழவிழுந்
தேன். பாம்பைக் கொல்லுநிமித்தம் கிரி யுருவெடுத்தேன்.
பல பல உருவமெடுத்து சர்வ ஆன்மகோடிகளையும் சங்க
ரித்துவருவேன். இதுவரையில் நடத்திவந்த சங்காரத்தைக்
கண்ணாரக் கண்டாயல்லவா, எனக்கு நிற்க அவகாசமில்லை
விட்டுவிடு என்ற அம்மாதை தபசி நோக்கி, அம்மணீ! நீர்
துக்கக்குறிப்புடன் போவது எதற்காக? அதையும் எனது
மரணகால ரகசியத்தையும் தயைபுரிக என்று வேண்டிக்
கொண்டனன். அதைக்கேட்ட மிருத்தியுதேவதை நகை
த்து ஓ மனோகர்வம்கொண்ட தபசியே! நீயோ உலகசுகத்
தைவெறுத்து தவஞ்செய்யமுயன்றாய், தவப்பயனால் கிடை
த்தபலனை அனுபவிப்பதை விட்டு அகங்கார, மமகாரங்க
ளைக் கொண்டு மறுபடியும் அஞ்ஞானத்தில் விழுந்தாய்.
அத்துடன்நில்லாமல் உலகத்தவர் உன்னைப்போற்ற அதைக்
கொண்டு ஆநந்தமடைய வெண்ணினாய், பேராநந்தமடைய
எண்ணிய நீ இவ்வகைத் துஷ்ட கிருத்தியத்தில் தலையிடத்
துணிந்ததால் உனக்குக் கடவுளின் ஆக்கினை பிறந்தது.
அதை முடித்தற்கு யான் உன்னை அணுகி எனவயப்படுத்தி
இக் காகுதிகளைக்காட்டி மந்திரி குமாரனையும், படைத்தலை
வன் மகனையும் நீ கொன்றுவிட்டதாக அரசனிடம் கூறி
உனது ஆவியை இன்றே நமனுலகனுப்பப் போகின்றேன்
எனப் பகர்ந்து மறைந்து அரசன்பால் சென்று முறையிட

அரசன் வேவுகாரர்களைக்கொண்டு தபசியைப் பிடித்துவரச் செய்து மிருத்தியுதேவதையாகிய பெண்மணியின் சாக்ஷியத்தால் தபசியைத் தூக்கிட்டுக் கொன்றனர். பிதாவே நீர் செய்த துஷ்டகிருத்தியத்திற்காக, பகவான் உம்மை எவ்வாறு தண்டிக்க மிருத்தியு தேவதைக்கு உத்தரவளிப்பரோ யானறியேன். அடாது செய்பவர் படாதுபடுவராதலால் இன்றே தாசியின் வீட்டிலுள்ள சகல பொருளையும் கஜானாவில் சேர்ப்பித்து அவளைக் கழுவேற்றி மூன்றிலொரு கடமையை ஆறிலொரு கடமையாக்கி ஐந்துவருடங்கள் வரையில் குடிகளிடம் வரி வசூலிக்காது இருப்பதாகப் பறையறைவித்து குணசுந்திரனுக்குற்ற காமவிடாய் தணியும் வரை காவலில்வைத்து சுகுணாம்பாளை நற்குணம்வாய்ந்த ஓர் அரச குமாரனுக்கு விவாகம் முடிப்பித்து அவனைக் கொண்டு இப்பதியை ஆளச் செய்யவேண்டுமென்று கூறினன். இதைக்கேட்ட மந்திரி சிங்கத்தைப்போல் கர்ச்சித்து இராஜசபையை விட்டு மைந்தனை அகற்றும்படி ஆக்கியாபித்துக் கொலுவமர்ந்தான். இதைக்கண்ட சத்தியசீலன் மதுராபுரியை யடைந்து நீதிவாய்ந்த மதுரை மன்னருக்கு இவற்றை அறிவித்து படையுடன் குமாரப்பிரத்தம் வந்தணுகி துஷ்டனாகிய மந்திரியை வென்று சிறையிலடைப்பித்து, வேசியைக்கழுவேற்றி, குணசுந்திரனுக்கு நல்லெழிலமைந்த மகேந்திரபுரியை யாளும் இராஜனது புதல்வியாகிய கோமளவல்லியை மணம்புணர்த்தி மதுராபுரியை யாளச்செய்து சுகுணாம்பாளை மதுராபுரி மன்னனின் இளவரசனுக்கு விவாகம் முடிப்பித்து மன்னனைக் குமாரப் பிரத்தத்தை அரசாளச் செய்து மந்திரி குமாரனாகிய சத்தியசீலன் மந்திரி பதவியை அடைந்து நீதியுடன் வாழ்ந்து வந்தனன். சுபம். சுபம். சுபம்.

காலமே கோலமே—சீலமே பாலமே
மேலபா மேலசீ—மேலகோ மேலகா.

முருகனேயென்க், கருமுனசறும்
புருகுக பாலிகனும், பெருகுமின்பமே.

பூலோகநண்பன் முற்றிற்று.